REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/Thinakaran.lk /ThinakaranLK

2024 ஜூலை 10 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 1932–2024 ANNIVERSARY

வரு. 92 இல. 163 | Wednesday 10, July, 2024 | 20பக்கங்கள் | 50/-

## தங்கத்தின் விலை திடீரென வீழ்ச்சி

**22 கரட் 01 பவுண் ரூ. 1,86,600 பதிவு**



உலக சந்தையில் நாளுக்கு நாள் தங்கத்தின் விலை ஏற்ற, இறக்கத்துடன் பதிவாகி வருகிறது. எனினும், நாட்டில் கடந்த சில தினங்களாக உயர்வடைந்த தங்கத்தின் விலை நேற்று

06

## மலையகத் தோட்டங்கள் கிராமங்களாக உருவாகும்

**விரைவில் வர்த்தமானி வெளியீடு**

லோரன்ஸ் செல்வநாயகம்



பெருந்தோட்ட நிறுவனங்களின் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து தோட்டங்களையும் உள்ளடக்கி ஒரு கிராமமாக உருவாக்குவதற்கான வர்த்தமானி, விரைவில் வெளியிடப்படுமென அமைச்சர் ஜீவன் தொண்டமான் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். நேற்று நடைபெற்ற அமைச்சரவையில் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டதாக

06

## இந்தியா மற்றும் சீன உறவுகளை சமநிலைப்படுத்த இலங்கை முயற்சி

**ரொய்ட்டர் மாநாட்டில் அலி சப்ரி**



இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பாக சர்வதேச பிணை முறிப்பத்திர உரிமையாளர்களுடன் முன்னெடுத்துள்ள பேச்சுவார்த்தைகளை, அடுத்த சில வாரங்களில் இலங்கை பூர்த்தி செய்யுமென வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அயல் நாடுகளான இந்தியா, சீனாவை கையாளும் விதத்தில் எந்த வேறுபாடுகளும் இல்லை என்பதை உறுதிசெய்வதற்காக, இலங்கை தனது உறவுகளை சமநிலைப்படுத்த முயல்வதாகவும் அவர்

06

## சாதனை படைத்த சிறுவனுக்கு ஜனாதிபதி பாராட்டு

பாக்கு நீரிணையை கடந்து சாதனை படைத்த 13 வயது திருகோணமலையை சேர்ந்த ஹரிகரன் தன்வந்தை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராட்டி தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் ஏற்பாட்டில் இச்சந்திப்பு அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கடந்த மார்ச் 01இல், இம்மாணவன் பாக்கு நீரிணையை கடந்து சாதனை படைத்தார்.

இச்சந்திப்பில் சாதனை படைத்த சிறுவனின் தாய் மற்றும் தந்தை என குடும்பத்தினரும் கலந்து கொண்டுள்ளனர்.



**பணிப்புறக்கணிப்பு செய்யாது 08, 09 ஆம் திகதிகளில்**

## கடமைக்கு சமுகமளித்த அரசாங்க ஊழியருக்கு விசேட சம்பள உயர்வு

**ஜனாதிபதியின் பரிந்துரைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதாக அமைச்சர் பந்துல தெரிவிப்பு**

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையை சரியாகப் புரிந்துகொண்டு, மக்களுக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் செயற்பட்டு, ஜூலை 08 மற்றும் 09 ஆம் திகதிகளில் கடமைக்கு சமுகமளித்த நிறைவேற்றுத் தரம் அல்லாத அனைத்து அரச உத்தியோகத்தர்களுக்கும் விசேட சம்பள உயர்வொன்றை வழங்குவதற்கும், அவர்கள் அனைவரையும் எதிர்கால பதவி உயர்வுகளுக்குப் பயன்படுத்தும் வகையில் விசேட பாராட்டுச் சான்றிதழொன்றை வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (09) முன்வைத்த பரிந்துரைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பாக அனைத்து அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் மாகாண டபிரதான செயலாளர்களுக்கு அறிவிக்குமாறும் கோரப்பட்டுள்ளது. இது தொடர்பிலான சுற்று நிருபம் வெளியிட நடவடிக்கை எடுக்குமாறும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அரச சேவையின் நிறைவேற்றுத் தரம் அல்லாத சில சேவைகளிலுள்ள ஒரு சில தொழிற்சங்கங்கள் 2024 ஜூலை 08 மற்றும் 09ஆம் திகதிகளில் சுகயீன விடுமுறை மற்றும் வேலைநிறுத்தத் தொழிற்சங்க நடவடிக்கைகளை அறிவித்திருந்தன.

கடுமையான பொருளாதார ஸ்திரமின்மையை எதிர்நோக்கியிருந்த நாடு, கடந்த இரண்டு வருடங்களில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட விரிவான பொருளாதார கொள்கை சீர்திருத்த வேலைத்திட்டத்தின் ஊடாக ஓரளவு ஸ்திரப்பட முடிந்தது. இதனால், மக்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளுக்கு மேலதிகமாக அரச ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபா மாதாந்த கொடுப்பனவையும் அரசாங்கம் வழங்கியது.

தற்போதைய நிதி நிலைமையின் கீழ், மக்கள் மீது கூடுதல் வரிச்சுமையை சுமத்தாமல், தற்போது வழங்கப்படும் சம்பளத்திற்கு மேலதிகமாக சம்பள அதிகரிப்பையோ கொடுப்பனவுகளையோ வழங்குவதற்கு சாத்தியமில்லை எனவும் திறைசேரி செயலாளர் தெரிவித்துள்ளார்.

06

## மக்களின் கல்வி, சுகாதார சேவைகள் சீர்குலைப்பதை தடுக்க புதிய சட்டம்

**அமைச்சரவையில் விசேட கவனம் செலுத்தியதாக அமைச்சர் பந்துல தெரிவிப்பு**

**அப்பாவி மாணவர்கள், நோயாளர், அரச சேவைகளை பெற்றுக் கொள்பவர்களுக்கு பாதிப்பு ஏற்படாமல் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பும் கடமையுமென கருதுவதாலேயே இப் புதிய சட்டம் உருவாக்கம்**

மக்களுக்கு மிக அத்தியாவசியமான சுகாதாரம், கல்வி போன்ற அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்கான சேவைகளில், இடையூறு ஏற்படுத்துவதைத் தடுப்பதற்காக புதிய சட்டத்தை உருவாக்குவது குறித்து அமைச்சரவை கவனம் செலுத்தியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். பொது மக்களின் நலன் மற்றும் பாதுகாப்புக் கருதியே இச்சட்டம் உருவாக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நியாயமற்ற கோரிக்கைகள், வேலை நிறுத்தங்கள் உட்பட இடையூறு விளைவிக்கும் நடவடிக்கைகளால், மாணவர்கள், இலட்சக்கணக்கான நோயாளர்கள் மற்றும் அரச சேவைகளைப் பெற்றுக்கொள்வோர் பாதிக்கப்படுவதை தடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பும், கடமையுமென கருதுவதாலேயே அரசாங்கம் இப்புதிய சட்டத்தை கொண்டு வரவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் அமைச்சரவைப் பேச்சாளர் கலாநிதி பந்துல குணவர்தன இதுதொடர்பில் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் அமைச்சரவை கூடியது. இதன்போது இரு தினங்களாக முன்னெடுத்த வேலை நிறுத்தங்கள் தொடர்பில் அதிகளவில் கலந்துரையாடப்பட்டது.

இங்கு, அனைத்து அமைச்சரவை அமைச்சர்களும் மிகத் தெளிவாகச் சுட்டிக் காட்டியதாவது,

நாட்டின் அன்றாடச் செலவுகளுக்குப் போதிய அரசாங்க வருமானமின்றி, மக்கள் எதிர்நோக்கும் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்து, அதிகளவு பணம் பயனுள்ள வகையில் ஒதுக்கப்பட்ட வேளையில்,

06

**சம்பந்தனின் வெற்றிடத்திற்கு**

## குகதாசன் எம்.பியாக சத்தியப்பிரமாணம்



லோரன்ஸ் செல்வநாயகம்

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் பாராளுமன்ற உறுப்பினராக கதிரவேலு சண்முகம் குகதாசன் நேற்று (09) சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

பின்னர் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி

06

**யாழ். சாவகச்சேரி வைத்தியசாலை சம்பவம்**

## பொறுப்பற்ற முறையில் செயற்பட்ட சகலரும் தண்டிக்கப்பட வேண்டும்



யாழ். சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வினைத் திறனுடன் இயங்குவதை விரும்பாத சக்திகளே, கடந்த சில தினங்களாக அங்கு நிலவிய அசாதாரண சூழலுக்கும், மக்கள் போராட்டத்துக்கும் காரணமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவையில் சுட்டிக்காட்டினார்.

இதற்கென, விசாரணைக் குழு அமைக்கப்பட்டு, சீர்கேடுகளுக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்பட

06

## மலேசியப் பிரதமர் அன்வருடன் கிழக்கு ஆளுநர் செந்தில் சந்திப்பு

**இலங்கை வருமாறும் அழைப்பு**



மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிமை கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் நேற்று செவ்வாய்க்கிழமை (08) கோலாலம்பூரில் சந்தித்துக்

06

## ‘அஸ்வெசும’: 02ம் கட்டத்தில் மேலும் 4,50,924 விண்ணப்பங்கள்

**தகவல் கணக்கெடுப்பு 15 முதல் 30 வரை**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமைய நடைமுறைப்படுத்தப்படும் 'அஸ்வெசும' நலன்புரி நன்மைகள் வழங்கும் திட்டத்தின் இரண்டாம் கட்ட தகவல் கணக்கெடுப்பு பணிகள், எதிர்வரும் 15 முதல் 30 வரை முன்னெடுக்கப் படவுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது. முதலாம் கட்டத்தில் தகுதி பெற்ற 18 இலட்சத்துக்கும் அதிகமானோரைத் தவிர, இரண்டாம் கட்டத்துக்காக 4,50,924 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

அவற்றில் நலன்புரி நன்மைகள் பெறத் தகுதியானவர்களை இனங்காணும் பணிகள் இம்மாதத்துக்குள் நிறைவு செய்யப்படும்.

அஸ்வெசும திட்டத்தின் முதல் கட்டத்துக்கு 18,54,000 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

06



**06** மேல் மாகாண முச்சக்கர வண்டி கட்டணம் குறைப்பு

100 ரூபா கட்டணத்தில் மாற்றமில்லை

## மின் கட்டணம் ஜூலை 18 முதல் 30 வீதமாக குறையும்

**30 முதல் 180 அலகுகள் வரை குறைப்பு**



மின்சார கட்டணம் 30 வீதத்தால் குறைக்கப்படுமென மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர அறிவித்துள்ளார்.

இக்கட்டண குறைப்பு எதிர்வரும் (18) முதல் நடைமுறைப்படுத்தப்படுமெனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக இம் மாதம் (01) முதல் மின் கட்டணங்களை குறைப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டதாக அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்திருந்தார்.

06

## அலி சப்ரி ரஹீம் எம்.பியை கைது செய்ய நீதிமன்று நேற்று உத்தரவு

**திறந்த பிடியாணையும் பிறப்பிப்பு**



கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமை உடனடியாக கைது செய்ய, திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அலி சப்ரி ரஹீம் எம்.பியை கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு

06

## தொழிற்சங்க போராட்டத்துக்கு ஆதரவளிக்கப் போவதில்லை

**அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவிப்பு**

அரசாங்க ஊழியர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழிற்சங்க போராட்டத்துக்கு ஆதரவளிக்க போவதில்லையென, அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று ஆரம்பமான தொழிற்சங்கப் போராட்டத்தை இன்றும் நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, போக்குவரத்து, வரிக் கொள்கை போன்றன மருத்துவர்கள் உள்ளிட்ட

06

## பாடகி சுஜீவாவின் காலில் விசேட சத்திர சிகிச்சைகள்

**கால் காப்பாற்றப்பட்டதாக அறிவிப்பு**



அத்துருகிரிய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்த பாடகி சுஜீவாவுக்கு நேற்று அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டன.

பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை நிபுணர்கள், இரத்தக் குழாய் சத்திர சிகிச்சை நிபுணர்கள், எலும்பியல் சத்திர சிகிச்சை நிபுணர்கள் மற்றும் பொது சத்திர

06

## சாவகச்சேரி வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகராக ரஜீவ்



யாழ்ப்பாணம், சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையின் புதிய பதில் வைத்திய அத்தியட்சகராக, டொக்டர் கோபாலமூர்த்தி ரஜீவ் நேற்று கடமைகளை பொறுப்பேற்றார்.

சுகாதார அமைச்சின் பணிப்புரைக்கமைய, சாவகச்சேரி வைத்தியசாலையில் நேற்று நடைபெற்ற நிகழ்வில்

06

# முன்னேற்றப் பயணத்தை தொடர்வதா, இல்லையா என்பதை நாட்டு மக்களே தீர்மானிக்க வேண்டும்!

## ஐக்கிய தேசியக் கட்சியின் காலி மாவட்ட மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரை

நாட்டுக்குச் செய்ய வேண்டிய அனைத்தும் தம்மால் நிறைவேற்றப்பட்டுள்ளதோடு, அந்தப் பயணத்தைத் தொடர்வதா? இல்லையா? என்பது குறித்து பொதுமக்களே தீர்மானிக்க வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த சனிக்கிழமையன்று காலியில் தெரிவித்தார்.

செப்டெம்பர் அல்லது ஒக்டோபரில் ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியை தேர்தல்கள் ஆணைக்குழு நிர்ணயிக்கும் போது நாட்டின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதா? இல்லையா? என்பதை தீர்மானிக்க மக்களுக்கு சந்தர்ப்பம் உண்டு எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் காலி மாவட்ட மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தனவினால் காலி உலுவிட்டகேயில் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அங்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியதாவது:

நாட்டின் எதிர்காலம் என் கையில் உள்ளது என்று இங்கு பாடல் பாடிய இஷாக் மொஹிதீன் தனது பாடலில்





## ஐ.தே.க எப்போதும் நாட்டை முன்னேற்றப் பாதைக்கே கொண்டு சென்றுள்ளது

கூறினார். உண்மையில், எதிர்காலம் என் கையில் இல்லை, மக்கள் கையில்தான் உள்ளது. இப்போது என்னால் முடிந்த அனைத்தையும் செய்து விட்டேன். எனது வீடும் தீப்பிடித்தது. அது பிரச்சினை இல்லை. தற்போது நாடு ஓரளவு சீரான நிலையை எட்டியுள்ளது.

எரிபொருள், மின்சாரம், உரம், பொருளாதாரம் இல்லாத நாட்டை நான் ஏற்றுக்கொண்டேன். யாரும் பொறுப்பேற்க முன்வரவில்லை, ஆனால் நான் ஏற்றுக்கொண்டேன். ஐக்கிய தேசியக் கட்சி எப்பொழுதும் நாட்டிற்காக முன்னோக்கிச் சென்றுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி எப்போதும் அந்தக் கண்ணோட்டத்தில்தான் இருக்கிறது.

டி.எஸ்.சேனநாயக்கவின் காலத்தில் இருந்து டட்லி சேனநாயக்க, ஜோன் கொத்தலாவல, ஜே.ஆர்.ஜயவர்தன, ரணசிங்க பிரேமதாச மற்றும் விஜேதுங்க அந்தப் பணியை செய்தனர்.

2021 ஆம் ஆண்டில் பொருளாதாரம் எதிர்மறையான நிலையில் இருந்தபோது, பொருளாதாரம் பொறுப்பேற்கப்ப ட்டு கட்டமைக்கப்பட்டது. துறைமுகம், விமான நிலையம் மூடப்பட்ட போது நான் நாட்டை பொறுப்பேற்று சீர்செய்தேன். ஆனால் முன்னைய காலத்தில் அந்தப் பயணத்தை புலிகள் முறியடித்தனர்.

2015 இல் பொருளாதாரம் அதே வழியில் கட்டமைக்கப்பட்டது. 2019 இல் நான் நாட்டை ஒப்படைத்தபோது, முதன்மை பட்ஜெட்டில் ஏழு பில்லியன் அந்நியச் செலாவணி இருந்தது.

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அ டுத்த தேர்தலில் போராட வேண்டும் என்று அன்று கூறினேன். ஆனால் அப்போது பல க ட்சிகள் வாக்குறுதி அரசியலிலேயே ஈடுபட்டன. மூன்று பில்லியன் டொலர்களைக் கண்டுபிடிப்பது மட்டுமே எங்களின் பங்காக இருக்க வேண்டும் என்று மேற்கண்ட தேர்தலுக்கு முன்பே சொன்னேன். அன்றைய தேர்தல் அறிக்கையில் அந்த விஷயத்தையும் சேர்த்தோம். அந்த மூன்று பில்லியன் டொலர்கள் இருந்திருந்து நாணய நிதியத்துக்கு சென்றிருந்தால், நான் இன்று இங்கு இருந்திருக்க மாட்டேன்.

அன்றைய தினம் எங்களில் ஒரு குழு ஒன்று கூடி மீண்டும் வாக்குறுதிகளை அளிக்கும் ஒரு அரசியல் குழுவை உருவாக்கினார்கள். சிறிகொத்தாவை கைப் பற்றுவோம் என்பதுதான் அவர்களின்



கோஷம். நாட்டின் பிரச்சினை சிறிகொத்தவை கைப்பற்றுவதா, இல்லையா என்பதல்லவே. நாட்டின் நெருக்கடி குறித்து பேச கோட்டாபய ராஜபக்ஷ என்னை அழைத்த போது, நானும் தமிழ்க் கட்சிகளுமே சென்றிருந்தோம். இந்தப் பயணம் ஏப்ரல் மாதத்தில் முறியும் என்று எங்களுக்குத் தெரியும். எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பை ஏற்காமல் ஓடிவிட்டார். அவர் தங்களுக்கு வாக்களித்தவர்களுக்குத் துரோகம் செய்தார்.

ஜனதா விமுக்தி பெரமுனவைக் கண்டுபிடிக்கக் கூட முடியாதிருந்தது. தப்பியோடினார்களா? அல்லது வயிற்றுப் போக்கா? தெரியவில்லை. நான் நாட்டைப் பொறுப்பேற்று சர்வதேச நாணய நிதியம் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினேன். கோட்டாபய ராஜபக்ஷ இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி மூன்றரை மில்லியன் எடுத்திருந்தார்.

எங்கள் விவசாய உற்பத்திகளுக்கு உரம் கிடைக்கவில்லை. இதை நான் அமெரிக்காவில் உள்ள சமந்தா பவரிடம் கூறியபோது, அவர் உரத்தை அனுப்பினார். அங்கிருந்துதான் 2022_23 ஆம் ஆண்டு க்கான சிறுபோக பருவத்திற்குத் தேவையான உரங்கள் வழங்கப்பட்டு விவசாயத்தை மீண்டும் கட்டியெழுப்பும் பணி தொடங்கியது. அடுத்த பருவத்தில், பெரும்போகத்தையும் வெற்றிகரமாக நிறைவேற்ற முடிந்தது. நாணய நிதியத்துடன் கலந்துரையாடியதன் பின்னர், இந்த நடவடிக்கைகளில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக் கிடைத்தது.

நான் வங்குரோத்தான அரசாங்கத்தையே பொறுப்பேற்றேன். குறைந்த வருமானம் பெறுவோருக்கு இரண்டு மாதங்களுக்கு பத்து கிலோ அரிசி வழங்கப்பட்டது. அரசாங்க ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபா கொடுப்பனவு கஷ்டத்தின் மத்தியில் வழங்கப்பட்டது. வங்குரோத்தல்லாத அரசுகள் இதைச் செய்தனவா? வங்குரோத்தான நாட்டிலேயே இப்படிப்பட்ட முடிவுகளை எடுத்தோம். சமுர்த்திக்குப் பதிலாக அதைப் போன்று மூன்று மடங்கான அஸ்வெசுமவை வழங்கினோம். நாம் நிதியை சரியான முறையில் முகாமைத்துவம் செய்தே இதனை மேற்கொண்டோம்.

சிறிது சிறிதாக, சுற்றுலா வணிகத்தை உருவாக்க உழைத்தோம். எமக்குக் கடன் வழங்கும் நாடுகளுடனும் கலந்துரையாடினோம். சீனா உள்ளிட்ட கடன் கொடுத்த நாடுகளுடன் பேசி ஐந்து பில்லியன் டொலர்களை மீதப்படுத்தியுள்ளோம். பிணைமுறிப் பத்திர உரிமையாளர்களுடன் கலந்துரையாடி மேலும் ஒரு பில்லியனை மீதப்படுத்தி உள்ளோம். இதன்படி 8 பில்லியன் டொலர்களை நாம் நான்கு வருடத்திற்கு செலுத்தத் தேவையில்லை.

நீங்கள் கடனில் சிக்கி நிவாரணம் பெற்றிருந்தால், அது எவ்வளவு பெரிய விடயம் என்பதை புரிந்து கொள்வீர்கள். இது பற்றி வர்த்தகர்களிடம் கேட்க விரும்புகிறேன். கடனை அடைக்க 2043 வரை அவகாசம் உள்ளது.

இந்த நிலைமையை முகாமைத்துவம் செய்யாவிட்டால் இன்னும் 15 வருடங்களில் நாடு மோசமான நிலைக்குத் தள்ளப்படும். இந்நிலையை தவிர்க்க பாராளுமன்றத்தில் பொருளாதார மாற்ற சட்டம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்படுகிறது. இந்தப் பொறுப்பை நாம் தொடர்வோமா? அதை நாம் முன்னெடுத்துச் செல்லவே வேண்டும். வேறு வழியில்லை. ஜே.ஆர் ஜயவர்தன 1977 இல் திறந்த பொருளாதாரத்தை ஆரம்பித்து நாட்டை வேகமாக முன்னேற்றினார். நாம் அதையும் விட வேகமாக செல்ல வேண்டும், வேறு வழி இல்லை. காலியைப் பாருங்கள். மஹமோதர தாதியர் கல்லூரி, சி.டி.பி டிப்போ, சிறைச்சாலை நிலம், பொலிஸ், தபால் அலுவல






## ஆசியாவின் பலம் வாய்ந்த நாடாக இலங்கையை மாற்றியமைப்பதற்குத் திட்டங்கள்- ஐ. தே.கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன எம்.பி

கம் போன்ற நிலங்களில் சுற்றுலாவை மேம்படுத்த எத்தனை ஹோட்டல்களை உருவாக்க முடியும்? ஏராளமான சுற்றுலா பயணிகள் வருவார்கள்.

தொழில்களை உருவாக்கி வேகமாக முன்னேற வேண்டும். போட்டி விவசாயத்தின் கீழ், வெளிநாட்டுக்கு உணவு ஏற்றுமதி செய்யப்படுகிறது. 2050 இற்குள் உலக மக்கள் தொகை 2 பில்லியனாக அதிகரிக்கும். அவர்களுக்கு உணவு அவசியம். மகாவலி திட்டத்தை பூர்த்தி செய்ய, திருகோணமலை துறைமுகத்தை கட்டியெழுப்புவதற்கு நாம் செயற்பட்டு வருகின்றோம். கட்சிகளாக பிரியும் போது நாட்டின் பொருளாதாரம் இழக்கப்படும். உண்மையைச் சொல்ல யாரும் தயாராக இல்லை. உண்மையைச் சொன்னபோது அந்த உண்மையை ஏற்றுக்கொள்ள வாக்காளர்கள் தயாராக இல்லை. உடைந்த பொருளாதாரத்தையும், அரசியல் முறையையும் சீர் செய்ய வேண்டும்.

நாட்டைக் கட்டியெழுப்ப ஆதரவளிக்குமாறு ஐ.ம.சயைக் கேட்டேன். அவர்கள் என்ன ஆதரவு அளித்தார்கள்? ஹரினும் மனுஷவும் மட்டும் வந்தார்கள். மொட்டுக் கட்சியின் ஒரு சிலரும் மற்றைய பக்கம் சென்றார்கள். நாட்டின் பொருளாதாரத்தை காப்பாற்றுவோம் என்று சொன்னவர்கள் இப்போது ஐ.ம.சவில்.

அன்று எனக்குப் பதிலாக வஜிர பாராளுமன்றம் சென்றார். அவருக்கு அமைச்சு கூட வழங்கப்படவில்லை. அமைச்சராக கூட இல்லாமல் நாட்டுக்காக பாடுபடுபவர்கள் இருக்கிறார்கள். அரசியலைப் பற்றி சிந்திக்காமல் செயல்படுவோம். குறுகிய அரசியலைப் பற்றி சிந்திக்காமல் உழைத்ததன் மூலம், இறுதியில் நாட்டை வழிநடத்த ஒரு நல்ல அணி உருவாக்கப்பட்டது. நாம் இந்தக் குறுகிய அரசியலை விட்டுவிடுவோம். நாட்டில் இன்னும் 25 சதவீதமானோர் கஷ்டப்படுகிறார்கள். ரூபா மதிப்பு சரியும் போது, பொருட்களின் விலையைக் குறைக்க முடியாது. ஆனால் வருமானத்தை அதிகரிக்கலாம். இளைஞர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதே எனது முதன்மையான நோக்கம்.

பொருளாதாரத்தை மாற்றுவது போல் அரசியலையும் மாற்றுவோம். இல்லையேல் இந்த நாடு முன்னேற முடியாது. இந்த நாட்டின் அரசியலை மாற்றியமைத்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்த நாங்கள்தான். நாடு 1948 இல் சுதந்திரம் பெற்றது. 1977 இல் ஒரு புதிய நாடு உருவாக்கப்பட்டது. ஒன்றுபட்டு புதிய அரசியலை உருவாக்கினோம்.

இந்த நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்துதான் ஆரம்பித்தன. இந்நாட்டில் கஷ்டத்தில் இருக்கும் மக்களுக்கு உதவி செய்து இளைஞர்களுக்கு நல்ல எதிர்காலத்தை தந்து சிறந்த இலங்கையை உருவாக்குவோம்".

இவ்வாறு ஜனாதிபதி தனது உரையில் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும், ஜனாதிபதியின் காலநிலை மாற்றம் தொடர்பான ஆலோசகர் ருவன் விஜயவர்தன உரையாற்றியதாவது:

"ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவாரா? இல்லையா? என்ற குழப்பம் மக்கள் மத்தியில் நிலவுகிறது. எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயமாக போட்டியிடுவார்.

ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டை வழிநடத்த வேண்டும் என நாட்டில் உள்ள பெரும்பான்மையான மக்கள் கூறுகின்றனர். ரணில் விக்கிரமசிங்க மட்டுமே அறிவும், நல்ல தலைமையும் கொண்ட ஒரே தலைவர். கடந்த காலங்களில் பல்வேறு தலைவர்கள் வந்து நாட்டை வங்குரோத்தாக்கி விட்டார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மக்கள் தங்கள் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூட வரிசையில் நிற்க வேண்டியிருந்தது என்பதை மறந்து விடவில்லை.

இப்போது கூச்சல் போடும் சில தலைவர்கள் சவால்களுக்கு பயந்து விட்டு விட்டு ஓடிவிட்டனர். ரணில் விக்கிரமசிங்க முன்வந்து அந்த சவால்களுக்கு விடை காணவில்லையென்றால் நாடு இன்றும் இருளில் மூழ்கியிருக்கும்.

ரணில் விக்கிரமசிங்கவின் வீடு எரிக்கப்பட்டபோது இரண்டு காற்சட்டைகளும் மற்றும் மூன்று சட்டைகளுமே எஞ்சியிருந்தன. அந்த தியாகங்களை எல்லாம் செய்து நாட்டுக்காக ஆஜரானார்.

எங்கள் தலைவர் நாட்டைக் பொறுப்பேற்றப்போது பத்து மில்லியன் டொலர்கள் கூட இல்லை. இன்று திறைசேரியில் ஐந்து பில்லியன் டொலர்களுக்கு மேல் கையிருப்புள்ளது.

இரண்டே ஆண்டுகளில் வங்குரோத்தான நாட்டை அவரால் மாற்ற முடிந்தது. இன்று தாம் வந்தால் நாட்டை இதைவிடச் சிறப்பாகச் செய்யமுடியும் என்று எதிர்க்கட்சியினர் தம்பட்டம் அடிக்கின்றனர். அவர்களுக்கு பேச்சு மட்டுமே உள்ளது. திட்டங்கள் இல்லை.

ரணில் விக்கிரமசிங்க என்ற தலைவருக்கு தனது அறிவு மற்றும் அனுபவத்தின் காரணமாக கடுமையான முடிவுகளை எடுக்கும் திறன் உள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் எம்மால் வெற்றிபெற முடியும். ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் ஆட்சி அமைய வேண்டும். எனவே இன்றிலிருந்து எமது வெற்றிக்காக பாடுபடுவோம். அனைவரும் கைகோர்த்து அந்த பயணத்தை மேற் கொள்வோம்".

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான அகிலவிராஜ் காரியவசம்:

ரணில் விக்கிரமசிங்கவின் கருத்து நாட்டில் இன்று வெற்றி பெற்றுள்ளது கருத்து இல்லாத அரசியலால் நாடு இவ்வாறான நிலையிலுள்ளது.எமது தலைவருக்கு தொலைநோக்குப் பார்வை இருந்ததாலேயே இன்று முழு நாட்டையும் கட்டியெழுப்ப முடிந்துள்ளது.

அந்தக் கருத்தை வெற்றி பெறச் செய்ய உதவியவர்கள் எம் மக்களே. அனுபவமோ, அபிப்பிராயமோ இல்லாமல் ஆட்சி செய்வது சாத்தியமற்றது, அந்த உண்மையை நாமே இன்றைக்கு அனுபவத்தில் அறிந்துள்ளோம். இன்று சாரதி இருக்கையில் சரியானவர் அமர்ந்திருக்கிறார். ஜனாதிபதியின் வேலைத்திட்டத்தினால் தற்போது உலக உதவிகளை பெற்று வருகின்றோம். அஸ்வெசும திட்டத்தின் மூலம் மக்களுக்கு நிவாரணம் கிடைத்து வருகிறது, வீழ்ந்த நாட்டை மீட்க இதுபோன்ற சாதுரியமான தலைவர் அவசியம். இன்று மக்கள் கருத்தைக் கொண்ட நாட்டின் அனைத்துத் தலைவர்களும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சுற்றி அணி திரள்கின்றனர். மேலும், பெரும்பாலான மொட்டு கட்சி ஆதரவாளர்களும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் உள்ளார்கள். அத்துடன் இம்முறை வடக்கு, கிழக்கு வாக்குகள் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கே கிடைக்கும். அதன்படி இந்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றியீட்டுவார். நாட்டின் பொருளாதாரத்தை மீட்பதற்கான போராட்டம் எமக்கு உள்ளது. அந்தப் போராட்டம் வெற்றிபெற கட்சி நிறபேதமின்றி ரணில் விக்கிரமசிங்கவைச் சுற்றி அனைத்து மக்களும் அணி திரள வேண்டும்".

ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன: "சுதந்திரத்தின் பின்னர் அனைத்துத் தலைவர்களும் தவறுகள் செய்துள்ள போதிலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவற்றை சரிசெய்து வருகிறார். இரண்டு கோடி இருபது இலட்சம் மக்கள் வறுமையில் வாடிய வேளையில் நாட்டைப் பொறுப்பேற்று மக்களை வறுமையில் இருந்து விடுவித்த தலைவர் ஜனாதிபதி ரணில் ஆவார். அவரைப் போன்ற வேறு தலைவர் யாரும் இல்லை. நாட்டுக்கும் மக்களுக்கும் தலைமை தாங்கிய ஜனாதிபதி இன்று இங்கு வந்துள்ளார். நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்கும் பொறுப்பை ஏற்க எவரும் முன்வராத நிலையில் ஜனாதிபதி ரணில் நாட்டைக் பொறுப்பேற்றார். எந்த ஒரு முன்னாள் ஜனாதிபதியும் இவ்வாறான ஒரு நல்ல செயலை இதற்கு முன்னர் செய்ததாக நான் அறியவில்லை.

நாட்டை மீட்டெடுப்பதற்காக பயணிக்கும் வழியை மாற்றினால் மக்களுக்கு பிரச்சினை ஏற்படும் என்று 2020ஆம் ஆண்டில் ஜனாதிபதி தெரிவித்தார். ஆனால் மக்கள் அதனை மாற்றினார்கள். இதனைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்றத்தில் ஒரு ஆசனத்திற்கு மாத்திரமே தெரிவானது. ஆனால் ஜனாதிபதியாக வெற்றி பெற்று உலக அரசியலில் சாதனையை ஐ.தே.க படைத்துள்ளது. நாம் ஒருபோதும் பிளவுபடக் கூடாது. பொதுஜன ஜன பெரமுனவில் உள்ள அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் எமக்குத் தேவை. அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்தால் தான் நாட்டை கட்டியெழுப்ப முடியும். உங்கள் பிள்ளைகளுக்கான சிறந்த எதிர்காலத்தை உருவாக்க முடியும். ஜனாதிபதி நாட்டைப் பொறுப்பேற்றவுடன் அனைத்து வறிய மக்களின் வங்கிக் கணக்குகளிலும் தலா பதினையாயிரம் ரூபாவை வரவு வைப்பதில் வெற்றிபெற்றார். மேலும், ஒவ்வொரு குடும்பத்திற்கும் அரிசியை வழங்க முடிந்தது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியை மக்கள் வழங்க வேண்டும். ஆசியாவின் பலம் வாய்ந்த நாடாக இலங்கையை மாற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன. அனைத்து அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து இந்தப் பயணத்தை மேற்கொள்ள தீர்மானித்துள்ளோம். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியை வழங்க வேண்டும்."

SLFPயின் உரிமை கோரல் விவகாரம்:

# மைத்திரி, அமரவீர, அழகியவன்ன சபைக்குள் கடும் வாய்த் தர்க்கம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சொந்தம் கொண்டாடுவது தொடர்பில் முன்னாள் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, அமைச்சர் மஹிந்த அமரவீர மற்றும் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண ஆகியோருக்கிடையில் பாராளுமன்றத்தில் நேற்று கடும் தர்க்கம் நிலவியது.

சுதந்திரக் கட்சியின் தலைமையகத்துக்குச் சென்ற தயாசிறி ஜயசேகர எம்பிக்கு இடையூறு விளைவித்தமை நீதிமன்றத்தை அவமதிக்கும் செயலென, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அரச அனுசரணையுடன் சுதந்திரக் கட்சியை இல்லாதொழிக்கும் சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுவதாக சபையில் தெரிவித்த அவர்,நீதித்துறைக்கு அழுத்தம் பிரயோகிக்கப்படுவதாகவும் தாம், சிறை செல்லும் நிலை கூட வரலாம் என்றும் தெரிவித்தார்.

இந்த சந்தர்ப்பத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை யார் இல்லாதொழித்தது என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.கட்சியின் செயலாளர் பதவியிலிருந்து தயாசிறி ஜயசேகரவை நீக்கியது நாங்களா? என அமைச்சர் மஹிந்த அமரவீர கேள்வியெழுப்பியவுடன் மைத்திரிபால சிறிசேன, லசந்த அழகியவண்ண மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோருக்கிடையில் கடும் தர்க்கம் நிலவியது.



பாராளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற தொலைத்தொடர்பு திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழுவைப் போன்று மோசடியான நிறுவனம் எதுவும் கிடையாது.இந்த ஆணைக்குழுவுக்கும் ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுக்கும் இடையிலான கொடுக்கல் வாங்கல்களை தாம், நன்கு அறிவதாகவும் குறிப்பிட்டார்.

நீதிமன்றத்தின் தீர்ப்பை செயற்படுத்தல் தற்போது பிரச்சினைக்குரியதாக உள்ளது.சுதந்திரக் கட்சியின் உள்ளக பிரச்சினை அரச அனுசரணையுடன் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.ஒரு தரப்பினர் கட்சி தலைமையகத்தை பலவந்தமாக ஆக்கிரமித்துள்ளார்கள்.

சுதந்திரக் கட்சியின் செயலாளர் பதவி தொடர்பில் தயாசிறி ஜயசேகரவுக்கு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அவர் சுதந்திரக் கட்சியின் அலுவலகத்துக்கு செல்லும் போது அரச அனுசரணையுடன் ஒரு கும்பல் அவருக்கு இடையூறு விளைவித்துள்ளது.இது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

மைத்திரிபால சிறிசேன அங்கொட செல்ல வேண்டும் அல்லது வெலிக்கடை செல்ல வேண்டும் என அரசாங்கத்தில் அமைச்சுப் பதவி வகிக்கும் எமது கட்சியின் உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

06



சப்ரகமுவ மாகாண கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடந்த இலங்கை அமரபுர மகா நிகாயவின் அமரபுர தின நிகழ்வில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டார். கல்பொத்தாவெல உட்பட ஸ்ரீ பாத ரஜமஹா விகாரையின் வணக்கத்துக்குரிய ஸ்ரீ தம்ம தின்ன நாயக்க தேரர், சப்ரகமுவ அமரபுர சாமசிரி மாவட்ட மகா பிக்கு சபையின் பதிவாளர் வணக்கத்துக்குரிய தெல்வெல முதித நாயக்க தேரர், வண.பலபிடிய ஸ்ரீ சீவலி நாயக்க தேரர்,வண.திவியாகல விஜிதசீக தேரர் உள்ளிட்ட மகாசங்கத்தினர், அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க, முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, சப்ரகமுவ மாகாண சபையின் பொதுச் செயலாளர் மஹிந்த எஸ். வீரசூரிய, இரத்தினபுரி மாவட்ட செயலாளர் வசந்த குணரத்ன உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## வேலைவாய்ப்புகள் தருவதாக பண மோசடி செய்த பெண் கைது

அமெரிக்காவில் வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாகக் கூறி பண மோசடி செய்த பெண்ணொருவர் வவுனியா பிரதேசத்தில் கைதாகியுள்ளார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவினர் இப்பெண்ணை கைது செய்தனர். வவுனியா, போகஸ்வெவ பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர்தனதுசகோதரியினூடாக அமெரிக்காவில் வேலை வாங்கித் தருவதாக கூறி 10 இலட்சம் ரூபாவை பெற்றுள்ளார்.

06

## பொருளாதாரத்தை கட்டி எழுப்பிய அனுபவமுள்ள தலைவர் ஜனாதிபதி

அதுருகிரிய போரே பக்மீகஹ வீதியிலிருந்து மைலன்கம வரையிலான வீதியின் அபிவிருத்திப் பணிகள் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் ஆரம்பிக்கப் பட்டது.

அத்துரிகிரிய நகரின் கடும் வாகன நெரிசலுக்கு மாற்றுப் பாதையாகப் பயன்படுத்தப்படும் இந்த வீதியில் நாளாந்தம் பெருந்தொகையான வாகனங்கள் பயணிக்கின்றன. அதேவேளை பல பிரதேசங்களில் உள்ள மக்கள் தமது போக்குவரத்துத் தேவைகளுக்காக இவ்வீதியைப் பயன்படுத்துகின்றனர்.

06



## இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டு பொலிஸாரின் பிணை நிராகரிப்பு

23 வரை விளக்கமறில் நீடிப்பு

நான்கு இலட்சத்து 54 ஆயிரத்து 200 ரூபா இலஞ்சம் பெற்றதாக கூறப்படும் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் பொலிஸ் பரிசோதகர் மற்றும் கான்ஸ்டபிளின் பிணை கோரிக்கையை நிராகரித்த கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே, சந்தேக நபர்களை எதிர்வரும் (23) வரை சிறையில் வைக்க நேற்று (09) உத்தரவிட்டார்.

கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வரும் பண மோசடி வழக்கில் தொடர்புபட்ட சந்தேகநபர்கள் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டனர். இவர்கள் மூன்று இலட்சம் ரூபாவை ஒருவரிடம் இருந்து பெற்றுக் கொண்டதுடன் எஞ்சிய 1,54 ,200 ரூபாவை குற்றப்பிரிவில் வைத்து பெற்றுக் கொண்டதன் மூலம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட இலஞ்சப் பணத்தை இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது

## பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம்: நீதியான தீர்வு விரைவில் வழங்கப்படும்

அடுத்த வாரம் அமைச்சரவை பத்திரம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

பட்ட தாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்குதல் தொடர்பில் நீதியான தீர்வைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பான இறுதிப்பத்திரத்தை அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பித்து, நீதிமன்ற இணக்கப்பாட்டையும் பெறவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கில் உள்ள பட்டதாரிகளுக்கான தொழில் வாய்ப்பு தொடர்பில் அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன? என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபையில் கேள்வி எழுப்பினார்.

இதற்கு விரிவான பதிலளித்த கல்வி யமைச்சர்,

கடந்த அரசாங்கங்களின் காலத்தில் வேலையற்ற பட்டதாரிகளுக்கு இரண்டு தடவைகளில் நியமனங்கள் வழங்கப்பட்டன. முதலாவது 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் மஹிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் அதனை மேற்கொண்டது. அதன் போது ஒரே தடவையில் 40 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டது. அவர்கள் பல்வேறு ரீதியாக அரச நிறுவனங்களில் இணைக்கப்பட்டனர்.

இதன் பின்னர் 2019 ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்சவின் காலத்தில் இரண்டாவது தடவையாக 52,000 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டது. இவர்கள் அரசாங்க நிறுவனங்களில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டனர்.

கல்வியமைச்சை நான் பொறுப்பேற்ற போது இருந்த நிலைமையே இது.

இறுதியாக அமைச்சர் பேராசிரியர் ஜீ .எல்.பீரிஸ் அமைச்சரவைக்கு பத்திரமொன்றை சமர்ப்பித்திருந்தார். மேற்படி 23 ஆயிரம் பட்டதாரிகள் பாடசாலைகளில் ஆசிரிய பயிற்சிக்காக நியமிக்கப்பட்டு, மூன்று வருட பயிற்சியின் பின்னர் ஆசிரியர்களாக நியமிக்கப்படும் வகையில் அந்த பத்திரம் அமைந்திருந்தது.

எனினும், ஆசிரிய சேவை யாப்பில் பட்டதாரிகள் நியமனம் வழங்கப்படும் போது மாகாண மட்டத்தில் அல்லது தேசிய மட்டத்தில் அவர்களுக்கு பரீட்சை நடத்தப்பட்டு பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் மற்றும் பொருத்தமான பாடங்களுக்கு ஆசிரியர்களாக இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

06

## நீதிபதிகள் சிலரின் முறையற்ற செயற்பாடுகளால் நீதிக்கே இழுக்கு

அமைச்சர் விஜேதாச ராஜபக்ச சபையில் சிறப்புரிமை முன்வைப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நீதிபதிகள் சிலரது முறையற்ற செயற்பாடுகளால் கௌரவமான பல நீதிபதிகளின் நற்பெயருக்கு இழுக்கு ஏற்பட்டுள்ளதாகவும், நீதிச்சேவை கட்டமைப்பு பாரிய நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளதாகவும் நீதி, அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ச பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சபையில் தாம், ஆற்றிய உரை தொடர்பில் ஊடக அறிக்கைகளை வெளியிட்டுள்ள இரு நீதிபதிகளை அவசியமானால் பாராளுமன்ற சிறப்புரிமைகள் மற்றும் ஒழுக்கவியல் குழுவுக்கு அழைத்து விசாரிக்க முடியும் என்றும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று சிறப்புரிமை மீறல் பிரச்சினை ஒன்றை முன் வைத்து உரையாற்றுகையிலையே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.



சபையில் இது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்

விஜேதாச:நீதிச்சேவை கட்டமைப்பு தொடர்பில் சபையில் நான் ஆற்றிய உரை தற்போது பிரதான பேசுபொருளாக மாறியுள்ளது.எனது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது என்பதை நான் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன்.எனினும், நான் கேள்விகளை முன்வைப்பதற்கு முன்னர் நீதிச்சேவை ஆணைக்குழு அதற்குப் பதிலளித்துள்ளமை மகிழ்ச்சியானது.

பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கடந்த மாதம் 19 இல், நீதிமன்ற கட்டமைப்பு தொடர்பில் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளித்தபோது நான், பல விடயங்களை சபையில் குறிப்பிட்டேன். பாராளுமன்ற உறுப்பினர்கள் நீதிச் சேவைகள் சம்பந்தமாக நீதிமன்றத்திடம் கேட்க முடியாத விடயங்களை, நீதியமைச்சரான என்னிடமே கேட்கின்றனர். நான் அவற்றுக்குப் பதிலளித்துள்ளேன்.

06

## "பெண்களின் வலுவூட்டல்" உள்ளிட்ட சட்டமூலங்களை சபாநாயகர் சான்றுரைப்படுத்தினார்

இலங்கைச் ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 79 ஆம் இலக்க உறுப்புரையின் பிரகாரம், 2024 ஜூலை 02 "பெண்களின் வலுவூட்டல்" மற்றும் "யுனெஸ்கோவுக்கான இலங்கை தேசிய ஆணைக்குழு" எனும் சட்டமூலங்களில் கைச்சாத்திட்டு சான்றுரைப்படுத்தியிருப்பதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று (09) பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மனுக்கள் 2024 யூலை 02 ஆம் திகதி தனது அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மனுவுக்கு மேலதிகமாக, அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் "வெளிநாட்டு தீர்ப்புக்களைப் பரஸ்பரம் ஏற்று அங்கீகரித்தல், பதிவுசெய்தல் மற்றும் வலுவுறுத்துதல்" எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட மனுவொன்றின் பிரதி 2024.07.02 ஆம் திகதியன்றும் மேலுமொரு மனுவின் பிரதி 2024.07.04 ஆம் திகதியன்றும் தனக்குக் கிடைக்கப் பெற்றிருப்பதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன அறிவித்தார்.

அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் "குடிவரவு" எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட மனுவொன்றின் பிரதி 2024.07.03இல் கிடைத்திருந்ததாகவும் அவர் மேலும் அறிவித்தார்.


சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள்

119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

CP - LI-4616 TATA - LPK1615 - MOTOR LORRY - 2011 - WHITE கூடிய விலைக் கோரிக்கைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட் 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ .பே. 0812-081033. 045993

122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

QD-7836 BAJAJ 2006, THREE-WHEELE R அதியுயர் விலைக்கு. வெலி பல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு - 03. தொலைபேசி. 0711210810. 046088

128 டயர்கள், டியூப்புகள் விற்பனைக்கு

டயர் டியூப் - வெளிநாட்டிலிருந்து டயர் தருவிப்போர் - JCB, மோட்டர் கிரேடர், பெகோ, போக்லிப்ட், செலினிட்டர் - 600 x 9 - 700 x 12 ஆர்பிடெக் டயர் நிரப்பும் போது தேவைப்படும். 700 x 1670 - 16 x 100 x 20 பஸ் உரிமையாளர்களுக்கு விசேட விலை 135, கிரவுன் டயர், கொழும்பு - 14. 077 - 3134060 044401

வேலைவாய்ப்பு

309 வெற்றிடங்கள் கணக்கியல்/ நிதி

கொழும்பு-03, நிர்மாணக் கம்பனிக்கு ஒரு கணக்கு இலிகிதர் தேவை. CV Mail - asmhanan@hotmail.com +94 (75) 035 4533 0773154146. 045999

312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்

சுத்திகரிப்பு ஆண்/ பெண் ஊழியர் வெற்றிடங்கள். 20 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்ட ஆண்/ பெண் இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம். தங்குமிட வசதிகள் மற்றும் உணவு பானங்கள் இலவசம். சீருடை இலவசம். கவர்ச்சியான சம்பளத்துடன் மேலதிக நேர கொடுப்பனவுகள். சுத்திகரிப்பு மற்றும் பராமரித்தல் வேலைகள் பற்றிய அனுபவம் மற்றும் கடும் நம்பிக்கை, ஆர்வம் உள்ள உங்களுக்கு கல்வித் தகைமைகள் முக்கியமில்லை. அழையுங்கள் தொ.பே. இலக்கம் - 0766845349. (நாட்டின் எப்பாகத்தில் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.) 046170

318 வெற்றிடங்கள் டிரைவர்கள்

கொழும்பு-06, ஒரு வீட்டுச் சாரதி தேவை. +94 (75) 035 4533, 0773154146. 045991

325 தொழில்துறை பொது

கொழும்பு-03, ரியல் எஸ்டேட் கம்பனிக்கு ஓர் இணைப்பாளர் தேவை. Cv mail asmhanan@hotmail.com மொழி சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம். +94 (75) 035 4533 0773154146 046001

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

திங்கள் 2024.07.08

உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5528
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 38,441,464.00
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 7 2 8 1 0 5

அத சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 103
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 8 1 0 5

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3770
சீட்டிழுப்பு திகதி 2024.07.08
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.64,775,524.36
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 03 27 45 75
விசேட எழுத்து B
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 94300

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1876
2024.07.08
53597
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.438,217,662.00
ஆங்கில எழுத்து R
சுப்பர் இலக்கம் 07
வெற்றி இலக்கங்கள் 03 64 70 76
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP
திகதி 2024.07.08
சீட்டிழுப்பு இலக்கம் 354
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 9 3 0 3 0 8
L7 எழுத்து Z
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 32,569,316.48

ராசி சுப பலன்
திகதி 2024.07.08
சீட்டிழுப்பு இலக்கம் 837
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,466,936.80
வெற்றி இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 10 12 25 44
தனயோக இலக்கம் 36956
நாளுக்கான விதி எண் 16

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1558
2024.07.08
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 100,229,521.12
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 11 19 28 73
விசேட எழுத்து N
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 47684

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆனி மாதம் 26ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 முஹர்ரம் பிறை 03

**குறள் தரும் சிந்தனை**

செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப்பு உடைத்து

நடுவுநிலைமை உடையவனின் செல்வவளம் அழிவில்லாமல் அவனுடைய வழியில் உள்ளார்க்கும் உறுதியான நன்மை தருவதாகும்.

# பொருளாதார முன்னேற்றத்தை சீர்குலைக்க துணைபோகலாகாது!

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெற்றுள்ள இலங்கை, தற்போது நம்பிக்கை அளிக்கும் வகையில் முன்னேற்றப்பாதையில் பயணித்துக் கொண்டிருக்கிறது. இச்சூழலில் 'தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்பதானது நாட்டின் முன்னேற்றத்தையும் சுபீட்சத்தையும் சீர்குலைப்பதற்கான முயற்சியாகவே கருத வேண்டியுள்ளது' என்று மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அவரது கருத்து முற்றிலும் உணமையாகும்.

கடந்த 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் அந்நிய செலாவணி பற்றாக்குறையோடு நாடு கடும் பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளானது. அந்நிய செலாவணிக் கையிருப்பு பாரிய வீழ்ச்சிக்கு உள்ளானது. நாடே வங்குரோத்து நிலையை அடைந்தது.

அவ்வேளையில் நாட்டின் தலைமையை ஏற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொருளாதார வீழ்ச்சியில் இருந்து நாட்டையும் மக்களையும் மீட்டெடுப்பதை இலக்காகக் கொண்டு பொருளாதார வேலைத்திட்டங்களை ஆரம்பித்தார். கட்சி அரசியலுக்கு அப்பால் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி இவ்வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதன் பயனாக பொருளாதார நெருக்கடி காலப்பகுதியில் நாட்டில் நிலவிய அசௌகரியங்களும் பாதிப்புகளும் குறுகிய காலப்பகுதியில் கட்டம் கட்டமாக நீங்கலாயின.

அதனால் பொருளாதார நெருக்கடி நிலவிய காலப் பகுதியில் மக்கள் முகம்கொடுத்த நெருக்கடிகளும் அசௌகரியங்களும் தற்போது பெரும்பாலும் நீங்கியுள்ளன. ஜனாதிபதி முன்னெடுத்துவரும் பொருளாதார மேம்பாட்டு வேலைத்திட்டங்களின் பிரதிபலனாக இவ்வாறான அடைவை குறுகிய காலப்பகுதியில் அடைந்து கொள்ள முடிந்துள்ளது.

பொருளாதார வீழ்ச்சியில் இருந்து குறுகிய காலப் பகுதிக்குள் மீட்சி பெற்றமைக்கு உலகின் பல நாடுகளும் இலங்கையையும், இலங்கையின் தலைமையையும் பெரிதும் பாராட்டின.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை முழுமையாக மீட்டெடுப்பதை இலக்காகக் கொண்டு சர்வதேச நாணய நிதியத்தின் உதவியும், ஒத்துழைப்பும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

இப்பின்னணியில் அந்நிய செலாவணிக் கையிருப்பு 5 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் மேல் அதிகரித்துள்ளது. பணவீக்கம் வீழ்ச்சியடைந்துள்ளது. ரூபாவின் பெறுமதி அதிகரித்துள்ளது. பணத்தை அச்சிடாமல் பொருளாதாரத்தை முன்னோக்கிச் செல்ல தற்போதைய பொருளாதார வேலைத்திட்டங்கள் வழிவகுத்துள்ளன. உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கை ஊழியர்களால் கிடைக்கப்பெறும் அந்நிய செலாவணியும் உயர்ந்துள்ளது.

வரவுசெலவுத் திட்டத்தின் ஊடாக அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளது. எரிபொருள், எரிவாயு அடங்கலாக அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. மின்கட்டணம் ஏற்கனவே குறைக்கப்பட்டுள்ளதோடு, எதிர்வரும் நாட்களிலும் குறைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீட்சி பெற்று நம்பிக்கை தரும் வகையில் முன்னேற்றப்பாதையில் பயணிக்கும் இந்நாடு, வங்குரோத்து நிலையில் இருந்தும் மீட்சி பெற்றுள்ளது. இந்நிலையில் இந்நாட்டின் கடன் பத்திரங்களை (எல்.சி) சர்வதேச நாடுகள் ஏற்றுக்கொள்ளும் சூழல் மீண்டும் ஏற்பட்டுள்ளது.

நாட்டின் தலைமையை ஜனாதிபதி ஏற்ற குறுகிய காலப்பகுதிக்குள் இவ்வாறான முன்னேற்றகர அடைவுகளை நாடு பெற்றுக் கொண்டுள்ளதைப் பொறுத்துக் கொள்ள முடியாத எதிரணி அரசியல் கட்சியினரும், அரசியல்வாதிகளும் காழ்ப்புணர்ச்சி மனப்பான்மையுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். கடந்த 8 ஆம், 09 ஆம் திகதிகளில் முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கைக்கு இவர்களது பின்புலம் இருப்பதாக பரவலாக நம்பப்படுகிறது.

பொருளாதாரம் முன்னேற்றப் பாதையில் பயணிப்பதன் விளைவாக தங்களால் அற்ப அரசியல் இலாபங்களை அடைந்து கொள்ள முடியாது. அதனால் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தைச் சீர்குலைப்பதற்கான ஒரு முயற்சியாகவே இத்தொழிற் சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். தற்போதைய சூழலில் அவ்வாறான நோக்கத்துடன் இத்தொழிற் சங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமாயின், அவை எவ்விதத்திலுமே நியாயப்படுத்த முடியாதவையாகும். கடந்த காலங்களிலும் நாடு பொருளாதார ரீதியில் முன்னேற்றப்பாதையில் பயணித்த சமயங்களில் அவற்றைச் சீர்குலைக்கும் வகையில் பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவற்றின் விளைவாக நாட்டின் பொருளாதார முன்னேற்றம் பலவிதமான நெருக்கடிகளுக்கும் தாக்கங்களுக்கும் உள்ளாகியது. அத்தகைய முயற்சிகள் இனியொரு போதும் நாட்டில் இடம்பெறலாகாது என்பதுதான் நாட்டை உண்மையாக நேசிக்கும் அனைத்துத் தரப்பினரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

ஆகவே சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு அடங்கலாக உதவி வழங்கும் நாடுகளின் உதவிகளுடன் நாட்டின் பொருளதாரம் முன்னேற்றப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கும் தற்போதைய சூழலில் அந்த முன்னேற்றத்தை சீர்குலைக்கும் வகையிலான நடவடிக்கைகளுக்கு அரச ஊழியர்கள் உள்ளிட்ட எவரும் துணை போகலாகாது. அது நாட்டையும் மக்களையும் சீரழிக்கவே வழி செய்வதாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

# சுற்றுலாத்துறையினுள் பிரவேசிப்பதன் மூலம் இளைஞர், யுவதிகளுக்கு தொழில்வாய்ப்புகள்

உலக நாடுகளின் பொருளாதார முதுகெலும்புகளில் ஒன்றான சுற்றுலாத்துறை என்பது உலகம் முழுவதும் பல இலட்சக்கணக்கான தொழில்வாய்ப்புக்களை உருவாக்கி, பொருளாதாரத்தை வளப்படுத்துவதில் முதன்மையான துறையாகும்.

இத்துறையினூடாக உலக நாடுகள் ஒவ்வொன்றும் தங்களது நாடுகளில் உள்ள இயற்கை வளங்களைப் பாதுகாத்து, அவற்றை உரிய முறையில் பேணி அழகுபடுத்தி உலக சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து வருமானத்தை ஈட்டுகின்றன. அதுமட்டுமன்றி செயற்கையாகவும் பல வேலைத் திட்டங்களை அமுல்படுத்தி தங்களது நாட்டுக்கு அதிகளவிலான சுற்றுலாப் பயணிகளை உள்ளீர்ப்பதில் வெற்றியும் கண்டுள்ளன.

பாலைவன பூமியை அதிகமாகக் கொண்ட நாடுகளும் கூட சுற்றுலாத் துறையை வளப்படுத்துவதற்கான பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருவதை நாம் காண்கின்றோம். இவ்வாறான செயற்பாடுகளினூடாக ஒவ்வொரு நாட்டினதும் எதிர்பார்ப்பு என்னவென்றால் சுற்றுலாத்துறையினூடாக தங்களது நாட்டின் அந்நிய செலா



வணியை அதிகரித்து நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதாகும்.

அண்மையில் பாரிய பொருளாதார நெருக்கடியை சந்தித்த எமது தாய் நாடான இலங்கையும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு கையாண்ட முதல் யுக்தி சுற்றுலாத் துறையை மேம்படுத்தி அதனூடாக அந்நிய செலாவணியை அதிகரிக்கச் செய்வதேயாகும். அதற்கான பல வழிமுறைகளை மேற்கொண்டு தற்போது அதில் வெற்றியும் பெற்றுள்ளதை கண்கூடாகக் காணலலாம்.

அந்தவகையில் இலங்கை அரசு, சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையினூடாக பல வேலைத்திட்டங்களை மேற்கொண்டு எமது நாட்டில் பாரியதொரு தொழில் புரட்சியை உருவாக்கியுள்ளது. இன்று உள்நாட்டில் பல இலட்சம் தொழில்வாய்ப்புகள் கொட்டிக் கிடக்கின்ற துறையாக சுற்றுலாத்துறை விளங்குகின்றது. அத்துடன் உலகளாவிய நாடுகளிலும் பல இலட்சம் தொழில்வாய்ப்புக்களை குறுகிய காலத்திற்குள் பெற்றுத்தருகின்றது.

எமது நாட்டில் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல்துறை சார்ந்த தொழிற் கல்வி அமைப்புக்கள் அபிவிருத்தியடைந்துள்ளதை நாம் காண்கின்றோம். பல பயிற்றுவிப்பு தனியார் நிறுவனங்களின் செல்வாக்கு நாடு முழுவதிலும் பரவிக் காணப்படுகின்றது.

எனவே சுற்றுலாத்துறையினூடாக தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டு குறுகிய காலத்தில் பொருளாதார அபிவிருத்தியை காண முடியும். உலகளாவிய நாடுகளில் தொழில்பற்றாக்குறை அற்ற துறையாகவும் இது காணப்படுகின்றது.

எனவே பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தக் கூடிய மிகச் சிறந்த துறையான சுற்றுலாத்துறையை வளப்படுத்துவதோடு, இளைஞர் யுவதிகள் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறை சார்ந்த கல்வியை கற்று தங்களது வாழ்வை ஒளிமயமாக்க முடியும். அத்தோடு எமது தாய் நாட்டை உலகநாடுகளுக்கிடையில் தலைசிறந்த சுற்றலாத்தளமாக மாற்றியமைக்க முடியும்.

ஏ.எம். ஷஹான்
இளமானி (விஷேட பட்டம்) சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம்

# களுதாவளை சுயம்புலிங்க பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் ஆரம்பம்

மட்டக்களப்பு மாவட்டம் களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 03.07.2024 அன்று ஆரம்பமாகியது. எதிர்வரும் 12.07.2024 அன்று மு.ப 9.00 மணிக்கு ஆனி உத்தர நட்சத்திரத்தில் தீர்த்தோற்சவத்துடன் இவ்வுற்சவம் நிறைவு பெறும்.

கிரியைகள் யாவும் பிரதமகுரு சிவஸ்ரீ வி.கு. சிறிஸ்கந்தராஜா குருக்கள் தலைமையில் நடைபெறும்.ஆலய உதவிக்குரு சிவஸ்ரீ பு.கு. சடாச்சர சர்மா. சிவஸ்ரீ அ. புவிகரன் குருக்கள் ஆகியோரும் இணைந்து பணியாற்றுகின்றனர்.

தினமும் இந்து இளைஞர் மன்றத்தினரின் அன்னதானம் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. பக்தர்களுக்காக போக்குவரத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வலயம் சுமார் 300 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக கருதப்படுகின்றது. இவ்வாலயத்தின் தோற்றம் பற்றி களு தேவாலயக் கல்வெட்டு எடுத்தியம்புகின்றது. இவ்வாலயம் அமைந்துள்ள பகுதி வனப்பகுதியாக இருந்தது.




வேடுவ தலைவனாக களுவன் என்பவன் வேட்டையாடும் பொருட்டு இங்கு வந்தான். காரியம் வெற்றி அடையும் பொருட்டு இறையருளை நாடி வெற்றிலைச் சடங்கு செய்வதற்கு இவ்விடத்தினை தெரிவு செய்தான். சடங்கினை நிறைவேற்றி இறையருளும் பெற்றான். இவ்வாறு வேடுவர் தலைவனாக களுவன் வழிபட்ட இடம் களு தேவாலயம் என அழைக்கப்பட்டது. பின்னர் ஊரின் பெயர் களுதாவளை என்று ஆனது.

கதிர்காமத்திருத்தலத்திற்குப் பாதயாத்திரை செல்லும் அடியர்கள் தங்கிச் செல்லும் புண்ணிய பூமியாக இவ்விடம் விளங்குகின்றது. ஒருமுறை யாத்திரை வந்த இலிங்கதாரிகள் இவ்விடத்திலே நிலத்திற்கு மேல் இலிங்கத்தை உயர்த்தி வைக்க முயன்றனர். ஆயின் இலிங்கம் வளந்து நிலத்தினூடாக கீழ் நோக்கிப் பரவியது எனவும்அதனை எடுக்கவியலாத இலிங்கதாரிகள் வியப்புற்று ஆச்சரியமாய் நின்றவேளை, செய்தியறிந்து ஒன்று கூடிய மக்கள் கொத்துப் பந்தலிட்டு அதனை வழிபாடு செய்யத் தொடங்கினர் எனவும் கல்வெட்டு கூறுகின்றது. இவ்வற்புத இலிங்கத்தின் மகிமையைக் கேள்வியுற்று அதனை பார்க்க வந்த மணியாள் பூபால வன்னிமை என்பவர் அச்சிவலிங்கத்தில் பிள்ளையார் அம்சம் இருந்ததைக் கண்டுணர்ந்தார். அதனைப் பிள்ளையராக வழிபடுமாறு மக்களை வேண்டினார்.

அவ்வாறே மக்களும் அத்திருவுருவத்தை சுயம்புலிங்க பிள்ளையார் எனப் போற்றி வழிபட ஆரம்பித்தனர். கலைவனப்பு மிக்க சிற்பங்களோடும் ஓவியங்களோடும் காட்சியளிக்கும் இந்த ஆலயம் மடாலய வகையைச் சார்ந்தது. இவ்வாலயம் தற்போது பிரம்மாண்டமாக புனருத்தாபனம் செய்யப்பட்டு, மகாகும்பாவிஷேகம் நடைபெற்றுள்ளது. இங்குள்ள 63 நாயன்மார்களின் சிலைகளையும் பக்தர்கள் வழிபட்டு வருகின்றனர்.

கலைச்சுடர் நாராயணபிள்ளை நாகேந்திரன்
ஓய்வுநிலை அதிபர்
களுவாஞ்சிகுடி

# திரிபுராவில் மாணவர் 828 பேருக்கு எய்ட்ஸ்!

இந்தியாவின் திரிபுராவில் பல்வேறு பாடசாலைகள் மற்றும் கல்லூரிகளைச் சேர்ந்த 828 மாணவர்கள் எச்.ஐ.வி தொற்றால் பாதிக்கப்பட்டிருப்பது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. திரிபுரா மாநிலத்தில் உள்ள பாடசாலைகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பயன்பாடு அதிகமாக இருந்து வருகிறது. இது குறித்து அடிக்கடி புகார்கள் எழுந்த நிலையில், சமீபத்தில் திரிபுரா எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம் 220 பாடசாலைகள் மற்றும் 24 கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் அதிரடி சோதனையை மேற்கொண்டது. இந்தக் கல்வி நிலையங்களில் பயிலும் மாணவர்களிடையே பரிசோதனை நடத்தப்பட்டது.

இவர்களில் 828 மாணவர்களுக்கு எச்.ஐ.வி தொற்று பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டது. இதில் சோகம் என்னவெனில், தொற்று பாதிக்கப்பட்டவர்களில் 47 பேர் உயிரிழந்துவிட்டனர். அது மட்டுமல்லாது நாட்டின் பல்வேறு பகுதியில் உள்ள பிரபலமான பல்கலைக்கழகங்களுக்கு இங்கிருந்து மாணவர்கள் படிக்கச் சென்றிருக்கிறார்கள். எனவே அவர்களையும் மீண்டும் சொந்த மாநிலத்திற்கு திரும்ப அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

இது குறித்து அதிகாரிகள் கூறுகையில், "பாதிக்கப்பட்ட மாணவர்கள் அனைவரும் நல்ல வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு போதைப் பழக்கம் இருந்திருக்கிறது. அதாவது, ஒரே ஊசியை பலர் பயன்படுத்தியுள்ளனர். இதனால்தான் தொற்று பரவியிருக்கிறது. எனவே அனைவரையும் கண்காணிப்புக்கு உட்படுத்தியுள்ளோம்" என்று கூறியுள்ளார்கள்.

ஒரே மாநிலத்தில் பாடசாலை மற்றும் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் 800 இற்கும் அதிகமானோர் எய்ட்ஸ் தொற்றால் பாதிப்புக்கு உள்ளாகியிருப்பது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



# ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள் சர்வதேச தினம்; சவூதியில் எதிர்வரும் நவம்பரில் முதலாவது மாநாடு

2024ஆம் ஆண்டு நவம்பர் 24 ஆம் திகதியை 'உலக ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள் தினம்' ஆக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது. ஒட்டிப்பிறந்த இரட்டையர்களின் நிலையைப் பற்றி வலியுறுத்தவும், அவர்களுக்கான சிகிச்சை, பராமரிப்பு மற்றும் நல்வாழ்வு உட்பட சமூகத்தில் அவர்களுக்கான அங்கீகாரத்தை மேம்படுத்தவும் இந்நாள் முக்கியப்படுத்தப்பட்டுள்ளது.

பஹ்ரைன், மொராக்கோ, கட்டார் மற்றும் ஏமன் ஆகிய நாடுகளுடன் இணைந்து இந்த முயற்சியை சவூதி அரேபியா முன்மொழிந்தமை குறிப்பிடத்தக்கது.

1990 ஆம் ஆண்டு ஒட்டிப் பிறந்த இரட்டையர்களை பிரிப்பதற்கான இத் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து, சவூதி அரேபியா இத்துறையில் உலகில் முன்னணி வகிக்கக் கூடிய நாடாக இருந்து வருகிறது. சவூதி அரேபியா, 26 நாடுகளைச் சேரந்த 139 இரட்டையர்களை பரிசீலனைக்கு உட்படுத்தியுள்ளதோடு, 61 ஜோடி இரட்டையர்களை வெற்றிகரமாகப் பிரித்தும் உள்ளது. சவூதி ரோயல் கோர்ட்டின் ஆலோசகராகவும், மன்னர் சல்மான் மனிதாபிமான உதவி மற்றும் நிவாரண மையத்தின் (KSrelief) மேற்பார்வையாளர் ஜெனரலும், புகழ்பெற்ற குழந்தை அறுவை சிகிச்சை நிபுணருமான மருத்துவர் அப்துல்லா அல் ரபீஹ் சவூதி அரேபிய இணைந்த இரட்டையர் திட்டத்தின் தலைவராகவும் பணியாற்றி வருகிறார்.



ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 24 அன்று 'உலக ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள் தினத்தை' அனுஷ்டிக்க ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையின் தீர்மானமானது சவூதி அரேபியாவின் மனிதாபிமான முயற்சிகளுக்கு கிடைத்தை மிகவும் பெருமைக்குரிய அங்கீகாரமாகும் என அல் ரபீஹ் கருத்து தெரிவித்ததோடு, குழந்தைகளுக்கு உதவும் இத்திட்டத்துக்கு ஆதரவளிக்கவும் இரு புனித மசூதிகளின் பாதுகாவலர், மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் மற்றும் பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் சல்மான் ஆகியோரின் ஆர்வத்தையும் கரிசனையையும் அல் ரபீஹ் பாராட்டியுள்ளார்.



உலக ஒட்டிப்பிறந்த இரட்டையர்கள் தினத்தின் முக்கியத்துவத்தை மேலும் வலியுறுத்தும் வகையில், சவூதி அரேபியா 24, 25 நவம்பர் 2024 தினங்களில் ரியாத் நகரில் முதல் முறையாக சர்வதேச ஒட்டிப்பிறந்த இரட்டையர்கள் மாநாட்டை நடத்தவுள்ளது.

மன்னர் சல்மான் மனிதாபிமான உதவி மற்றும் நிவாரண மையம் (KSrelief) மற்றும் சவூதி தேசிய காவல் படை சுகாதார விவகார அமைச்சகம் இணைந்து நடத்தும் இம்மாநாட்டில் உலகளாவிய மருத்துவ நிபுணர்கள், மனிதாபிமான அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகள் விடயத்தில் ஆர்வமுள்ள பலர், ஒட்டிப் பிறந்த இரட்டையரைப் பிரிப்பதில் உள்ள சவால்கள் மற்றும் சாத்தியமான ஒத்துழைப்பு மற்றும் பரிந்துரைகளைப் பற்றி கலந்துரையாட ஒன்றுகூடவுள்ளனர்.

இந்த மாநாட்டில் 'இணைந்த இரட்டையர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களில் பிரிவினையின் பன்முக தாக்கத்தை ஆராய்தல்' என்ற தலைப்பில் கலந்துரையாடல் இடம்பெறுகின்றது.

காலித் ரிஸ்வான்

# ரூ.1700 சம்பள உயர்வை வலியுறுத்தி மலையகத்தில் கவனயீர்ப்பு போராட்டம்






(தலவாக்கலை குறூப் நிருபர்)

மலையகத்தில் ரூ.1700 சம்பள உயர்வை வலியுறுத்தி பல்வேறு இடங்களில் கவனயீர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாட் சம்பளமாக ரூ.1700 வழங்குமாறு வலியுறுத்தியே இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வட்டகொடை, தெற்கு மடக்கும்புர தோட்ட தொழிலாளர்கள் தோட்ட தொழிற்சாலைக்கு முன்பாக நேற்று (9) கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் தாங்கள் பல்வேறு நெருக்கடியை சந்தித்து வருவதாக தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் 1700 ரூபா கூட போதாது, எனவே, குறைந்தபட்சமாக கோரப்பட்டுள்ள அந்த தொகையை வழங்குவதற்கு கம்பனிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென தொழிலாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

நானுஓயா சமர்செட் தோட்ட தொழிலாளர்களும் தோட்ட கொழுந்து மடுவத்துக்கு முன்பாக நேற்று (9) கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.









வலய மட்ட கரப்பந்தாட்ட போட்டிகளில் மூன்று வயது பிரிவுகளிலும் கண்டி எனசல்கொல்ல மத்திய கல்லூரி முதலிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளது. இப்போட்டியில் 18 வயது கீழ் பிரிவு அணியின் தலைவர் ஸெய்த் அஹமட் சிறந்த வீரருக்கான விருதைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## கையடக்கத்தொலைபேசி திருட்டு; தாயும் மகளும் கைது

(மாத்தளை சுழற்சி நிருபர்)

தம்புள்ளை நகரில் கையடக்கதொலைபேசி விற்பனை நிலையமொன்றில் கையடக்கத்தொலைபேசியொன்றை திருடிய குற்றச்சாட்டில் தாயும் மகளும் சந்தேகத்தின் பேரில் தம்புள்ளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் கலைவல பத்லகொல்ல பிரதேசத்தில் வசிப்பவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

இருவரும் தொலைபேசி விற்பனை நிலையத்துக்குள் சென்று தொலைபேசி கொள்வனவு செய்வதாக பாசாங்கு செய்து கையடக்கத் தொலைபேசியொன்றை திருடி சென்றுள்ளனர். தனது கைப்பையில் மகள் மறைத்து வைத்து மோட்டார் சைக்கிள் ஒன்றில் தப்பிச் செல்ல முற்பட்ட போது கடை உரிமையாளர் மடக்கி பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தார்.



அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையின் 74வது மாநாடும் வருடாந்த பொதுக்கூட்டமும் அகில இலங்கை கேட்போர் பிரதான மண்டபத்தில் அமைப்பின் தேசிய தலைவர் இஹ்ஷான் ஏ அமீத் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதான அதிதியாக துருக்கிய நாட்டுத் தூதுவர் எஸ் .சேமிஹ் லுட்பு ட்ராகு, கௌரவ அதிதியாக மனித உரிமை ஆணைக்குழுவின் தவிசாளர் சட்டத்தரணி தெஹிதெனிய ஆகியோர் கலந்து சிறப்பித்ததோடு, வழமைப் போன்று இம்முறையும் வெற்றிகரமாக தமது பணிகளை முன்னெடுத்துசென்ற கிளைகளுக்கும் அங்கத்தவர்களுக்கும் விருதுகள் வழங்கி வைக்கப்பட்டன. அந்தவகையில் இம்முறையும் கண்டி மாவட்ட பணிப்பாளர் இஹ்திசான் மொஹம்மட்டின் கண்கானிப்பின் கீழ் இயங்கி வரும் கண்டி மாவட்ட கிளைகள் ஐந்து விருதுகளை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (படம்: மாவத்தகம தினகரன் நிருபர்)

## பாடசாலைக்கு நிதி ஒதுக்கீடு



பண்டாரவளை, அயிஸ்லேபி தமிழ் மகா வித்தியாலயத்துக்கு கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமாரால் மேலதிக வகுப்பறையொன்றை நிர்மாணிப்பதற்கு, 10 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, இதற்கான அடிக்கல் நாட்டு விழா அண்மையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம்.

## ஆளுநர் நவீன் திசாநாயக்கவுக்கு விருது வழங்கி கௌரவிப்பு

(காவத்தை தினகரன் விசேட நிருபர்)



இலங்கை அமரபுர மகா சங்க சபையின் 222ஆவது அமரபுர தின நிகழ்வு 2024 நேற்றுமுன்தினம் (08) இரத்தினபுரியில் அமைந்துள்ள சப்ரகமுவ மாகாண சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது இலங்கை அமரபுர மகா சங்கத்தின் தலைவர் வணக்கத்துக்குரிய கரகொட உயங்கொட மைத்திரி மூர்த்தி நாஹிமினியால் சப்ரகமுவ மாகாண ஆளுநர் சிரேஷ்ட சட்டத்தரணி நவீன் திசாநாயக்க மக்கள் நட்பு சாசனபந்து (ஜன ஹிதகாமி சாசன பந்து)என்ற கௌரவ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். சப்ரகமுவ மாகாண ஆளுநரான சிரேஷ்ட சட்டத்தரணி நவீன் திசாநாயக்க, தற்போது சப்ரகமுவ மாகாண ஆளுநராக பதவி வகித்து வரும் இக்கால கட்டத்தில் ஜனநாயகக் கோட்பாடுகள், பண்பான அரசியல் மற்றும் சம்புத சாசன மீது கொண்ட அளப்பரிய சேவையைப் பாராட்டி அவருக்கு மக்கள் நட்பு சாசன பந்து என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

## பெற்றோர்களுக்கு இலவச கருத்தரங்கு

(அக்குறணை குறூப் நிருபர்)

மாணவர்களை நல்வழிப்படுத்தல் தொடர்பாக பெற்றோர் ஆசிரியர்களுக்கான செயலமர்வொன்று இன்று கண்டியில் நடைபெறவுள்ளது.

கண்டி தமிழ் வர்த்தகர் சங்கத்தின் தலைவர் பி. குமாரதாஸ் தலைமையில் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

கண்டி தமிழ் வர்த்தகர் சங்கத்தின் ஆதரவில் கண்டி கொடுகொடெல்ல வீதியில் அமைந்துள்ள ஈ.எல். சேனாநாயக்கா சிறுவர் வாசிகசாலை கேட்போர் கூடத்தில் பி.ப. 2.00 மணிக்கு இந்நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.

இந்தியாவிலிருந்து சமூகமளிப்பவர்கள் பன்னாட்டுப் பயிற்றுவிப்பாளரான பேராசிரியர் எச்.ரிசார்ட் ராஜ் பிரதம சொற்பொழிவாளராக கலந்து கொள்வார். இன்று மாணவர் சமூகத்தை பீடித்துள்ள கையடக்க தொலைபேசி மோகம், கணினிக்கு அடிமையாதல், நவீன முறையில் அமைந்த போதைப்பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகுதல் போன்ற பல்வேறு விடயங்களிலிருந்து மாணவ சமூகத்தைப் பாதுகாத்தல் தொடர்பில் தெளிவுபடுத்தப்படவுள்ளன.

## தேங்காய் தலையில் விழுந்து வயோதிப தாய் மரணம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

கலவான திககொட பகுதியில் தேங்காய் தலையில் விழுந்ததால் மூன்று பிள்ளைகளின் தாயொருவர் உயிரிழந்துள்ளார்.

73 வயதான ஏ. டப்ளியு. சோமலதா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். தனது வீட்டின் பின்புறமாக சென்றுக் கொண்டிருக்கையில் மரத்திலிருந்து தேங்காய் இவரது தலையில் விழுந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இவரை உடனடியாக இரத்தினபுரி போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசென்ற போதிலும் சிகிச்சை பயனளிக்காத காரணத்தால் இவர் உயிரிழந்துள்ளார்.

கலவான பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பொத்துவில் அறுகம்பை சுற்றுலா பிரதேசத்தில்

## பதிவு செய்யப்படாத உணவகங்கள், உணவு கையாளும் நிலையங்கள், மருத்துவ சான்றிதழ் இல்லாத பணியாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

### மாவட்ட நீதவான் நீதி மன்றினால் 1,55,000 ரூபா அபராதம் விதிப்பு

(ஒலுவில் விசேட நிருபர்)

பொத்துவில் அறுகம்பை சுற்றுலா பிரதேசத்தில் பதிவு செய்யப்படாத உணவகங்கள், உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் அதில் பணி புகின்றவர்கள் உரிய மருத்துவ சான்றிதழை தன்வசம் வைத்திருக்காத 07 நபர்களுக்கெதிராக பொத்துவில் மாவட்ட நீதவான் நீதி மன்றினால் 01 இலட்சத்தி 55 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக, பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி அலுவலக மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எஸ்.எம்.அப்துல் மலீக் தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சக்கீலா இஸ்ஸதீனின் ஆலோசனைக்கமைய சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவகங்களை மேம்படுத்தும் செயற்றிட்டங்களுக்கமைய சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் உவைஸ் பாரூக் தலைமையில் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவு கையாளும் நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனையின் போது பதிவு செய்யப்படாத உணவகங்கள், உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் அதில் பணிபுகின்றவர்கள் உரிய மருத்துவ சான்றிதழ் தன்வசம் வைத்திருக்காத 09 நபர்கள் கண்டு பிடிக்கப்பட்டு அவர்களுக்கெதிராக நீதவான் நீதிமன்றில் செய்யப்பட்ட வழக்கு மாவட்ட நீதவாவன் நீதிமன்ற நீதிபதி எம்.கே. முஹம்மட் ஹில்மி முன்னிலையில் செவ்வாய்க்கிழமை (09) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது 07 நபர்களுக்கு 01 இலட்சத்தி 55 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகவும், 02 நபர்கள் மன்றிற்கு சமூகம் கொடுக்காததால் விசாரணை ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

உணவு விற்பனை செய்யும் மற்றும் அவற்றைக்கையாளும் நிறுவனங்களை மேற்பார்வை செய்வது உணவின் தரம், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை உறுதி செய்து மக்களுக்கு பாதுகாப்பான உணவினை வழங்குவதற்காகும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் உணவு நிறுவனங்களுக்குரிய சட்ட ஒழுங்கு விதிகளை கடைப்பிடிக்காது அலட்சியமாக இருப்பவர்களுக்கு எதிராக தொடர்ச்சியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

உணவினை விற்பனை செய்யும் மற்றும் அவற்றைக்கையாளும் நிறுவனங்களில் காணப்படுகின்ற சுகாதார சீர்கேடுகள் தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று வருவதால் உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் உணவகங்கள் பரிசோதனை செய்யப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

பதிவு செய்யப்படாத உணவு கையாளும் நிறுவனங்களை ஒரு மாத காலப்பகுதிக்குள் பதிவு செய்து அதில் பணிபுரிகின்றவர்கள் தமக்குரிய மருத்துவ சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் தெரிவித்தார்.

## அதிபர் ஆசிரியர் சுகயீன விடுமுறை; மாணவர்களின் கல்வி நிலையில் பாதிப்பு

அதிபர், ஆசிரியர்கள் சங்கங்கள் நேற்று (09) விடுமுறையை அறிவித்து நாடு தழுவிய பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் காரணமாக நுவரெலியா மற்றும் நானுஓயா பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் அதிபர் ஆசிரியர்களின் பணிப்புறக்கணிப்பு காரணமாக மாணவர்களின் வரவு விகிதம் குறைவாக காணப்பட்டது.

அவ்வாறு வருகை தந்த மாணவர்கள் ஆசிரியர்கள் பாடசாலைக்கு வருகை தராமையால் மாணவர்கள் வருகை தந்து ஏமாற்றத்துடன் வீடு திரும்பி செல்வதனை காணக்கூடியதாக இருந்தன.

எனினும் இவ்வாறு அதிபர் ஆசிரியர்கள் அடிக்கடி பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளமையானது மாணவர்களின் கல்வி நிலைக்கு பாரிய பின்னடைவாக அமையும் என பெற்றோர்கள் குற்றம் சுமத்துக்கின்றனர்.

செ.திவாகரன்

தலவாக்கலை லிந்துலை பிராந்திய வைத்தியசாலை

## நோயாளர்களுக்கு காலை வேளையில் ஒரு கோப்பை சூப்

(மஸ்கெலியா நிருபர்)



தலவாக்கலை லிந்துலை பிராந்திய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வந்த நோயாளர்களுக்கு காலை வேளையில் ஒரு கோப்பை சூப் வழங்க தலவாக்கலை செங் கூம்ஸ் இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் சேவா வனிதா லங்கா பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த சமூக பாதுகாப்பு வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் செங் கூம்ஸ் தேயிலை தோட்ட அதிகாரிகள் தமது பங்களிப்பை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் சேவா வனிதா லங்கா பிரிவு தெரிவித்துள்ளது

## இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டு குழு இந்திய அதிதிகளுடன் சந்திப்பு



(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

இலங்கை தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் மௌலவி முபாரக் அப்துல் மஜீட் அவர்களின் நெறிப்படுத்தலில் இலங்கைக்கு வந்திருந்த இந்திய அதிதிகள் குழுவுடனான உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டுக் குழு சந்திப்பு அண் மையில் சாய்ந்தமருதில் இடம்பெற்றது.

இந்தியன் முஸ்லிம்லீக்கின் பிராந்தியப் பொதுச் செயலாளரும், தமிழ்நாடு சட்டசபை உறுப்பினருமான கௌரவ கே. ஏ. எம். முஹம்மத் அபூபக்கர் (MLA), தமிழ்நாடு சிரேஸ்ட ஊடகவியலாளர் மணிச்சுடர் மற்றும் மக்கள் குரல் ஜனாப் எம். கே. சாஹுல் ஹமீது, இந்தியன் யூனியன் முஸ்லிம்லீக்கின் உதவிப் பொதுச் செயலாளர் ஜனாப், எஸ். ஏ. முஹம்மத் மக்கி, தமிழ்நாடு திருநெல்வேலி "அலி சன்ஸ் "நிறுவன தலைவர், ஜனாப் எம். நெய்னார் முஹம்மத் கடாபி ஆகியோர் அடங்கிய குழுவை உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுக் குழுவினர் கல்முனையில் சந்தித்தனர்.

இச் சந்திப்பில் உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு தொடர்பாகவும்

இரு நாடுகளுக்குமிடையிலான கலை கலாச்சாரம் இலக்கியம் பற்றிப் பேசப்பட்டதுடன் மாநாட்டுக் குழுவினரை இந்தியாவிற்கு வருகை தருமாறும் அதிதிகளால் அழைப்பு விடுக்கப்பட்டது.

அதிதிகளின் அழைப்பை ஏற்று விரைவில் மாநாட்டு குழு இந்தியா செல்லவிருப்பதாக மாநாட்டுக் குழுத் தலைவர்கலாநிதி ஏ. எல் அன்சார் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில்

## ஓய்வு பெற்று சென்ற ஆசிரியர்களுக்கு கௌரவிப்பு

திராய்க்கேணி தினகரன் நிருபர் எம் எப். நவாஸ்

அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் கடமையாற்றி ஓய்வு பெற்றுக் சென்ற ஆசியர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் பிரதி அதிபர் எம்.எச். றசாம் அவர்களின் ஒருங்கமைப்பில் பாடசாலையின் கேட்போர் கூடத்தில் அதிபர் ஏ.எல். பாயிஸ் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர். அத்தோடு பிரதி அதிபர்களான ஏ.ஜி. சமூர், எம்.ஏ. உனைஸ் ஆகியோர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. மேலும் ஓய்வு பெற்றுச் சென்ற ஆசிரியர்களுக்கு பொன்னாடை, நினைவுச்சின்னம், வாழ்த்துப்பா என்பன வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## கற்பிட்டி பிரதேச செயலக செயலாளரின் திடீர் இடமாற்றத்திற்கு எதிர்ப்பு

புத்தளம்தினகரன்நிருபர்

கற்பிட்டி பிரதேச செயலகத்தின் செயலாளர் ஜே.எம் சமில இந்திக ஜெயசிங்கவின் திடீர் இடமாற்றத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக கற்பிட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட சகல கிராம உத்தியோகத்தர்களும் கறுப்பு உடையணிந்து செவ்வாய்க்கிழமை (09) அலுவலக கடமைக்கு வருகை தந்திருந்தனர். மேற்படி கற்பிட்டி பிரதேச செயலகத்தின் செயலாளரின் திடீர் இடமாற்றம் அநீதியான நடவடிக்கை எனவும் நீண்ட நாட்களின் பின்பு கற்பிட்டி பிரதேச செயலகத்திற்கு நிரந்தர செயலாளராக நியமிக்கப்பட்ட ஜே.எம். சமில இந்திக ஜயசிங்க ஒரு வருடம் கூட பூர்த்தி ஆகாத நிலையில் இவரை திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளமையானது அநீதியானது.

இடமாற்றத்தை உடனடியாக இடைநிறுத்த வேண்டும் எனவும் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

## விபத்தில் காயமடைந்தவர் உயிரிழப்பு!

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பகுதியில் வாகன விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கடந்த 04.07.24 அன்று மேசன் வேலைக்காக வாகனத்தில் வேலைக்காக உயிலங்குளம் வீதி ஊடக தென்னியங்குளம் நோக்கி பயணித்துக்கொண்டிருந்த வாகனம் உயிலங்குளம் பகுதி வயல் வெளியில் பயணித்துக்கொண்டிருந்த வேளை வாகனத்தின் சில் ஒன்று காற்று போனதால் வாகனம் பிரண்டு விபத்தினை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் கொல்லவிளாங்குளம் வவுனிக்குளத்தினை சேர்ந்த 48 அகவையுடைய சின்னத்துரை வாஸ்கரன் என்ற குடும்பஸ்தர் படுகாயமடைந்த நிலையில் மல்லாவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா மருத்துவமனை மாற்றப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த 07.07.24 அன்று உயிரிழந்துள்ளார்.

வாகனத்தில் வேலையாட்கள் நான்கு பேர் பயணித்துள்ளனர். இந்த விபத்து தொடர்பில் மல்லாவி பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

# மேல் மாகாண முச்சக்கர வண்டி கட்டணம் குறைப்பு

மேல் மாகாணத்தில் முச்சக்கர வண்டி கட்டணத்தை குறைக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக, மேல் மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபை அறிவித்துள்ளது.

எதிர்வரும் 15 முதல் திருத்தப்பட்ட கட்டணங்கள் நடைமுறைக்கு வருமென அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதற்கமைய முதல் ஒரு கிலோமீட்டருக்கு 100 ரூபா கட்டணத்தில் மாற்றமில்லை. எனினும் இரண்டாவது கிலோமீட்டருக்கு 90 ரூபா அறவிடப்படும்.

## தங்கத்தின் விலை...

(09) சற்று வீழ்ச்சியடைந்தது. முன்னைய தினங்களுடன் ஒப்பிடும் போதே, தங்கத்தின் விலைகளில் இந்த மாற்றங்கள் அவதானிக்கப்பட்டன .

நேற்றுயை நிலவரத்தின் படி, ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 7,21,077 ரூபாவாக காணப்பட்டது. 24 கரட் தங்கம் 01 கிராம் 25,440 ரூபாவாக பதிவாகியதுடன் 24 கரட் தங்கம் பவுண் 2,03,500 ரூபாவாக பதிவாகியது. அதேபோல 22 கரட் தங்கம் 01 கிராம் 23,320 ரூபாவாக பதிவாகியதுடன் 22 கரட் தங்கம் 01 பவுண் 1,86,600 ரூபாவாக பதிவாகியது. 21 கரட் தங்கம் ஒரு கிராமின் விலை 22,260 ரூபாவாக பதிவாகியுள்ளதுடன் 21 கரட் தங்கம் 01 பவுண் நேற்று 1,78,100 ரூபாவாக பதிவாகியது.

தங்க நகைகளின் விலை இந்த விலைகளிலிருந்து மாற்றமடையலாமென்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன், கொழும்பு செட்டியார் தெரு தங்க நிலவரங்களின் படி 24 கரட் தங்கம் 01 பவுண் 1,94,000 ரூபாவாக பதிவாகியது.

அங்கு (22 கரெட்) ஒரு பவுண் 1,79,500 ரூபாவாக பதிவாகியுள்ளது.

## இன்றைய பலன்கள்

(10.07.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம் :** சுப செலவுகள் அதிகரிக்கும். பணப்பற்றாக் குறை ஏற்பட்டாலும் அதை சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு.

**ரிஷபம் :** கணவன் மனைவி ஒற்றுமை பலப்படும். பெற்றோர் உடல் நலனில் கவனம் தேவை. வாரிசுகளின் வளர்ச்சி மகிழ்ச்சி தரும்.

**மிதுனம் :** குடும்ப ஒற்றுமை பலப்படும். தொழில் முன்னேற்றம் உண்டு. கடன் சுமை குறையும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள்.

**கடகம் :** பெண்களுக்கு குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும். கணவன் மனைவி இருவரும் விட்டுக் கொடுத்துச் செல்வது நன்மை தரும். பணம் வந்த மறுநிமிடமே செலவாகிவிடும்.

**சிம்மம் :** பெண்களுக்கு மனக்கலக்கம் அதிகரிக்கும். தொழில் கூட்டாளிகளால் பிரச்சினை வரலாம். ஆதாயம் குறைவாகவும் அலைச்சல் கூடுதலாகவும் இருக்கும்.

**கன்னி :** பெண்களுக்கு அதிக விரயம் உண்டு. நிம்மதி குறையும். தொழிலைப் பொறுத்தவரை யாரை நம்பியும் எதுவும் செய்ய இயலாது. பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள்.

**துலாம் :** குடும்ப விஷயங்களை மூன்றாம் நபரிடம் சொல்ல வேண்டாம். இடமாற்றம், வீடு மாற்றம் ஏற்படும் பணி புரிபவர்களுக்கு பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கும்.

**விருச்சிகம் :** உங்களின் திறமைக்கு ஓர் அங்கீகாரம் கிடைக்கும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். குடும்பத்தில் குழப்பத்தை ஏற்படுத்தியவர்களை கண்டறிந்து ஒதுக்குவீர்கள்.

**தனுசு :** யாரேனும் உங்களுடைய தவறுகளை சுட்டிக் காட்டினால் மாற்றிக் கொள்வது நல்லது. தவறு செய்யாமலேயே நீங்கள் தவறு செய்தாக சிலர் வீண் பழி சுமத்துவார்கள்.

**மகரம் :** தந்தையாருக்கு சின்ன அறுவை சிகிச்சை, மூச்சுத் திணறல், வாயுக் கோளாறால் நெஞ்சு வலி வந்துப் போகும். எவ்வளவு பணம் வந்தாலும் பற்றாக்குறை இருந்துக் கொண்டேயிருக்கும்.

**கும்பம் :** விட்டுக் கொடுத்து போவது நல்லது. அனுமதி பெறாமல் வீடு கட்டத் தொடங்க வேண்டாம். தாயாரின் உடல் நிலை பாதிக்கும். மனத்தாபங்களும் வந்து நீங்கும்.

**மீனம் :** கணவன் மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். சிலர் தனிக் குடித்தனம் செல்வீர்கள். திருமணம் தள்ளிப் போனவர்களுக்கு நல்ல விதத்தில் முடியும்.

## குகதாசன் எம்.பியாக...

ரோஹணதீர முன்னிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏட்டிலும் அவர் கையொப்பமிட்டார்.

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவருமான இராஜவரோதயம் சம்பந்தனின் மறைவையடுத்து ஏற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடத்துக்கு கதிரவேலு சண்முகம் குகதாசன் நியமிக்கப்பட்டிருந்தார். இவர் கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் இந்தியாவின் மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் உயர் கல்வியைப் பெற்றவர். 1975 ஆம் ஆண்டு முதல் இலங்கைத் தமிழரசு கட்சியில் உறுப்பினராக இருந்து 2018 ஆம் ஆண்டு முதல் கட்சியின் திருகோணமலை மாவட்டத் தலைவராகப் பணியாற்றி வருகிறார். தேசிய கொள்கை, பொருளாதார விவகாரங்கள் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் கீழ் கிழக்கு மாகாண அபிவிருத்தி அலுவல்கள் இணைப்பாளராகவும் பணியாற்றியுள்ளார். கடந்த பாராளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் திருகோணமலை மாவட்டத்தில் இவர் போட்டியிட்டிருந்தார். இரா.சம்பந்தனின் மறைவை அடுத்து ஏற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் வெற்றிடத்துக்கு சண்முகம் குகதாசனின் நியனம் குறித்த வர்த்தமானி அறிவிப்பை (2391/14) தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டிருந்தது.

## மலேசியப் பிரதமர் அன்வருடன்...

கலந்துரையாடினார். மலேசிய பாராளுமன்ற உறுப்பினர் டத்தோ ஸ்ரீ சரவணன் முருகனின் விசேட அழைப்பின் பேரில், உத்தியோகப்பூர்வ விஜயமாக ஆளுநர் செந்தில் தொண்டமான் மலேசியா சென்றார். பிரதமர் அன்வர் இப்ராஹிமுடனான சந்திப்பில் மலேசியா மற்றும் இலங்கைக்கிடையிலான இருதரப்பு உறவுகள் குறித்து ஆழமான கலந்துரையாடலை ஆளுநர் செந்தில் தொண்டமான் நடத்தினார். மலேசியாவுக்கும் இலங்கைக்குமிடையில் வலுவான இருதரப்பு உறவுகளை உருவாக்குவதற்கான சாதகமான காரணிகள் குறித்தும் ஆளுநர் கலந்துரையாடினார். அத்துடன், இலங்கைக்கு விஜயம் செய்வதற்கான அழைப்பையும் பிரதமர் இப்ராஹிமுக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் விடுத்ததுடன், இலங்கையில் வாழும் பெருந்தோட்ட சமூகத்தின் 200 வருட நினைவு முத்திரையையும் மலேசியப் பிரதமருக்கு வழங்கியிருந்தார். இதேவேளை, மலேசிய நிதி அமைச்சர் அமீர் ஹம்சா, பிரதமர் துறை அமைச்சர் (இஸ்லாமிய சமய விவகாரங்கள்) நைம் ஆகியோரையும் மரியாதை நிமித்தமாக ஆளுநர் செந்தில் தொண்டமான் சந்தித்தார்.

## அலி சப்ரி ரஹீம் எம்.பியை கைது...

நேற்று (09) புத்தளம் மேலதிக மாவட்ட நீதிபதியும், மாவட்ட நீதவானுமான திருமதி அயோனா விமலரத்ன இந்த உத்தரவை பிறப்பித்தார். கற்பிட்டி சுற்றுலா நீதவான் நீதிமன்றத்தில் வைத்து இந்த திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. கற்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குறிஞ்சிப்பிட்டியில் அமைந்துள்ள அரச சார்பற்ற நிறுவனமொன்றின் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தியமை தொடர்பில் பொறுப்புக் கூறும் வழக்கு கற்பிட்டி சுற்றுலா நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் வழக்கு விசாரணைக்கு சமுகமளித்திருக்கவில்லை.

இதனாலேயே,இந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதற்கு முன்னரும், பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், நீதிமன்றத்தில் ஆஜராகவில்லையென்றும் அவர் சார்பில் சட்டத்தரணியும் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அரச சார்பற்ற நிறுவனமொன்றுக்கு சொந்தமான கட்டடத்துக்குள் அத்துமீறி நுழைந்தமை மற்றும் அங்குள்ள சொத்துக்களை சேதப்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினருக்கு எதிராக கற்பிட்டி பொலிஸார் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

## பொறுப்பற்ற முறையில் செயற்பட்ட...

வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று (09) நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில், கடற்றொழில் அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட விடயத்தை அமைச்சரவை ஏற்றுக் கொண்டுள்ளது.

கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்ததாவது,

"சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு வைத்திய அத்தியட்சகராக கடந்த ஜுன் மாதம் நியமிக்கப்பட்ட வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா, அங்கு நிலவி வந்த நிர்வாக சீர்கேடுகளையும், குறைபாடுகளைம் அடையாளம் கண்டு அவற்றை சீர்செய்வதற்கு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.

அதன்படி, பெண் நோயியல் பிரிவு, சத்திர சிகிச்சை பிரிவு, ஐ.சி.யு. பிரிவு ஆகியவற்றை செயற்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட 03 மாடிக் கட்டடம் கடந்த 14 வருடங்களாக பயன்படுத்தப்படாமல் இருந்தது. நன்கொடையாளரினால் வழங்கப்பட்ட 20 மில்லியன் ரூபாய் பெறுமதியான சத்திர சிகிச்சை உபகரணங்களும் பயன்படுத்தப்படாமலிருந்தன.

அவற்றை செயற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்ட வைத்திய அத்தியட்சகர், முதற் கட்டமாக ஐ.சி.யு. மற்றும் மகப்பேற்று பிரிவு ஆகியவற்றை செயற்படுத்தியுள்ளார்.

சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டிய நோயாளர்கள் அனைவரும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு வந்தனர்.சத்திர சிகிச்சை பிரிவை இயக்குவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

அதேபோன்று, வைத்தியசாலையில் உயிரிழப்பவர்களின் உடல்கள், உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு வந்தன. அதனை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் மேற்கொண்டு, பொது மக்களுக்கு ஏற்பட்டு வந்த தேவையற்ற அசௌகரியங்களை தடுப்பதற்கும் வைத்திய அத்தியட்சகர் அர்ச்சுனா முயற்சிகளை மேற்கொண்டார்.

மருந்துப் பொருட்கள் உரிய களஞ்சியப்படுத்தல் ஏற்பாடுகளின்றி, தரையில் போடப்பட்டிருந்தது. வைத்தியசாலையில் 22 வைத்தியர்கள் கடமையாற்றி வந்ததுடன், அவர்களுள் பெரும்பாலானவர்கள், மாதத்தில் 10 நாட்கள் மாத்திரமே கடமையாற்றியுள்ளனர்.

இவ்வாறான பல்வேறு சீர்கேடுகள் மற்றும் குறைபாடுகளை தீர்ப்பதற்கு வைத்திய அத்தியட்சகர் முன்னெடுத்த முயற்சிகளை விரும்பாத சக்திகள், அங்கு தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளன.

இவை அனைத்தையும் அறிந்து கொண்ட பொது மக்கள் பாரிய போராட்டம் ஒன்றையும் முன்னெடுத்தனர்.

எனவே, இவ் விவகாரம் தொடர்பில் உயர் மட்ட குழு அமைக்கப்பட்டு நீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பொறுப்பற்ற முறையில் செயற்பட்ட அனைவரும் சட்டத்தின் மூலம் தண்டிக்கப்பட வேண்டும்" என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவையில் வலியுறுத்தியுள்ளார்.

## மலையகத் தோட்டங்கள்...

தெரிவித்த அமைச்சர், அனுமதியும் கிடைத்ததாகவும் சபையில் தெரிவித்தார். ஜனாதிபதி ஒரு விசேட ஆவணத்தை தயாரித்து அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளதுடன், பெருந்தோட்ட நிறுவனங்களின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள மக்களை உள்ளடக்கி அதனை ஒரு கிராமமாக உருவாக்குவதற்கான வர்த்தமானியை வெளியிடுவதற்கு அனுமதியைப் பெற்றுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். தோட்டங்களிலுள்ள கம்பனி அலுவலகங்களுக்கு முன்பாக நேற்று தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்துள்ளதையடுத்து ஏழு கம்பனிகள் சம்பள அதிகரிப்பை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். அடிக்க, அடிக்க அம்மியும் நகரும் என்பது போல் மக்களை திசை திருப்பாமல் அனைவரும் கட்டுக்கோப்புடன் செயற்பட்டால் நாம் எதிர்பார்த்ததை சாதிக்க முடியுமென்றும் அவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று தொலைத்தொடர்பு திருத்த சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்;

நாட்டு மக்கள் அனைவரும் இலங்கையரென்ற நிலை உருவாக வேண்டும்.எனினும் மலையக மக்கள் அவ்வாறு பார்க்கப்படவில்லை. மலையக மக்களின் முன்னேற்றம் தொடர்பில் ஜனாதிபதியுடன் நாம் பேச்சுவார்த்தை நடத்தினோம்.

அதன் மூலம் 2,000 மில்லியன் ரூபா நிதியை பெற்றுக் கொள்ள முடிந்துள்ளது. வரலாற்றில் முதல் தடவையாக மலையகத்துக்கு இந்தளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கல்வி முன்னேற்றத்துக்கான ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்த நாம் தீர்மானித்து, அதற்கான அமைச்சரவைப் பத்திரத்தையும் சமர்ப்பித்துள்ளோம்.

இந்திய அரசாங்கம் இதற்காக எமக்கு 30 ஆசிரியர்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக நாம் இந்திய அரசாங்கத்துக்கு நன்றி கூறுகிறோம். மலையகத்திலுள்ள 2,000க்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்குவதற்காகவே இந்திய ஆசிரியர்கள் அவ்வாறு வருகை தரவுள்ளனர்.

அதேவேளை மலையகப் பெருந்தோட்ட பகுதிகளிலுள்ள பாடசாலைகளுக்கு இம்முறை அதிகளவு நிதியை ஒதுக்கி யுள்ளோம்.

## சாவகச்சேரி வைத்தியசாலையின்...

வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் சமன் பத்திரன, யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் முன்னிலையில் இவர்,புதிய பதில் வைத்திய அத்தியட்சகராக டொக்டர் ரஜீவ், கடமைகளை பொறுப்பேற்றார். சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பதில் வைத்திய அத்தியட்சகராக இருந்த இராமநாதன் அர்ச்சுனாவை மாற்றக்கோரி, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். இதையடுத்தே, பதில் வைத்திய அத்தியட்சகர் நியமிக்கப்பட்டார்.

## 'அஸ்வெசும': 02ம் கட்டத்தில்

இதற்காக (58.5 பில்லியன்) 5,850 கோடி ரூபா அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ளது. முதல் கட்டத்துக்கு விண்ணப்பிக்க முடியாதவர்கள் அல்லது தவறியவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க, நலன்புரி நன்மைகள் சபை சந்தர்ப்பம் வழங்கியுள்ளது.

மாற்றுத் திறனாளிகள், பாதிக்கப்படக்கூடியவர்கள், வறியவர்கள், மிகமோசமாக பாதிக்கப்பட்டுள்ள ஏழைகள் ஆகிய 04 சமூகப் பிரிவுகளின் கீழ் 'அஸ்வெசும' நலன்புரி வழங்கப்படுகிறது.

ஊனமுற்றோர், முதியோர் மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கு வழமை போன்று கொடுப்பனவுகள் வழங்கப்படுகிறன.

## மின் கட்டணம்8...

இதன்படி முதல் 30 அலகுகளின் கட்டணம் 02 ரூபாவினாலும், 30 முதல் 60 அலகுகளின் கட்டணம் 11 ரூபாவினாலும், 60 முதல் 90 அலகுகளின் கட்டணம் 12 ரூபாவினாலும், 90 முதல் 180 அலகுகளின் கட்டணம் 20 ரூபாவினாலும் குறைப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டதாக தெரிவித்திருந்தார்.

## மக்களின் கல்வி, சுகாதார சேவைகள்...

வரவு செலவுத் திட்டத்தின் மூலம் திறம்பட மற்றும் திறமையான முறையில், இந்த வருடத்துக்கான பத்தாயிரம் ரூபா சம்பளத்தை பொதுவாக அனைத்து அரச ஊழியர்களுக்கும் வழங்குவதற்கும் கூட நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதைவிட அதிகமான நிதியை வழங்குவதற்கு அரசிடம் எந்த முறையும் இல்லை. ஏனெனில் 20,000 ரூபாவால் சம்பளத்தை அதிகரிக்க வேண்டுமானால் அதற்கு மேலதிகமாக 400 பில்லியன் ரூபா தேவைப்படுகிறது. இந்த கூடுதல் தொகையை வழங்க, குறைந்தபட்சம் வற் வரியை 21 சதவீதமாக உயர்த்த வேண்டும். ஏனெனில் அனைத்து அரசு ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதியம், மானியம், வட்டி போன்றவற்றை ஈடுகட்ட போதுமான அரச வருவாய் இல்லை.

அனைத்து அரசு ஊழியர்களுக்கும் வரி செலுத்துவோரின் பணத்தில் ஊதியம் வழங்கப்படுகிறது. இந்த பாரிய அழுத்தத்துக்கு உள்ளான மக்கள் மீதான வரியை அதிகரிப்பதற்கு அரசாங்கத்துக்கு முடியாதென ஜனாதிபதி வலியுறுத்தினார். நிதி அமைச்சின் செயலாளரும் இவ்வருடம் இவ்வாறான சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கான நிதி ஏற்பாடுகள் எதுவும் இல்லை என மிகத் தெளிவாகத் தெரிவித்தார்.

## இந்தியா மற்றும் சீன உறவுகளை...

தெரிவித்துள்ளார். ஆசியாவில் தங்களுக்குள் போட்டியிடும் இரு பெரும் நாடுகளும் இலங்கைக்கு அதிகளவு கடன்களை வழங்கியுள்ளன.இவை, முக்கிய முதலீட்டாளர்களாக காணப்படுவதால், இலங்கையில் புவிசார் அரசியல் ஆதிக்கம் செலுத்துவதற்காக போட்டியிடுகின்ற சூழ்நிலையிலேயே, இலங்கையின் வெளிவிவகார அமைச்சரின் இந்த கருத்து வெளியாகியுள்ளது.

சிங்கப்பூரில் நடைபெறும் ரொய்ட்டர்ஸ் நெக்ஸ்ட் மாநாட்டில் இலங்கைக்கு கடன் வழங்கியவர்களுடனான மறுசீரமைப்பு முயற்சிகள் எப்போதும் முடிவடையுமென்ற கேள்விக்கு, அடுத்த சில வாரங்களில் என எதிர்பார்ப்பதாகவும் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இம்மாத இறுதியில் நாங்கள் உத்தியோகபூர்வமாக கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை பூர்த்தி செய்துவிடுவோம் என தெரிவித்துள்ள அமைச்சர் அதன் பின்னர் அதனடிப்படையில் பணம் செலுத்த ஆரம்பிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கை தனது பிணைமுறிகளை மறுசீரமைக்கும் நடவடிக்கைகளில் முன்னோக்கி செல்வதற்கு, அதன் பிணைமுறி உரிமையாளர்கள் சிலருடன் தற்காலிக உடன்படிக்கையை செய்து கொண்டுள்ளது. தற்போது ஏனைய தனியார் கடன் வழங்குநர்களும் சர்வதேச நாணய நிதியமும் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

37 பில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டு கடனை செலுத்த வேண்டிய நிலையில் இலங்கை உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பொருளாதாரத்தை கட்டி... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடுவெல மாநகர சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் பிரியந்த பத்பேரிய, பொதுமக்கள் பிரதிநிதிகள் மற்றும் பிரதேசவாசிகள் இந்த வீதியை புனரமைத்துத் தருமாறு விடுத்த கோரிக்கைக்கு அமைய, இந்த வீதி காபட் இடப்பட்டு நவீனப்படுத்தும் பணி தொடங்கியது. இந்நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர்,"நாடு முழுவதிலும் உள்ள இலட்சக்கணக்கான குழந்தைகளுக்கு பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் நிதி ஆகிய பாடங்களை கற்பித்த நாட்டின் அதிஷ்டசாலி ஆசிரியர் நான் என நினைக்கிறேன். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தற்போதைய தலைவர், வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளர், இந்த நிகழ்வில் கலந்துகொள்ளும் மக்கள் வங்கியின் தலைவர் மற்றும் பலர் முன்னாள் கடுவல மாநகரசபை எதிர்கட்சித் தலைவர் பிரியந்த பத்பேரிய, ஆகியோர் எனது மாணவர்கள். ஆனால் எதிர்கட்சித் தலைவருக்கும் அநுர குமாரவுக்கும் இந்தப் பாடங்களை கற்பிக்க சந்தர்ப்பம் கிடைக்கவில்லை அவ்வாறு கிடைத்திருந்தால் நாடு அதிர்ஷ்டம் பெற்றிருக்கும். . நீண்ட காலமாக, எமது நாடு வாங்கிய கடனை திருப்பிச் செலுத்தாத காரணத்தால், நம் நாட்டிற்கு மேலும் கடன்களை வழங்குவதை வெளிநாடுகளும் அமைப்புகளும் நிறுத்தி வைத்தன. கோட்டாபய ராஜபக்ச பதவியை விட்டு வெளியேறிய போது, நாட்டின் பொறுப்பை ஏற்க யாரும் முன்வ ர வில்லை. அவ்வேளையில், அனுபவமி க்க அரசியல் தலைவரான ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தின் பெரும்பான்மையினரின் சம்மதத்துடன் சவாலை ஏற்றுக் கொண்டார்.

## மைத்திரி, அமரவீர, அழகியவன்ன... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெலிக்கடை சிறை தொடர்பில் நீதிமன்றமே தீர்மானிக்கும். இவ்வாறான கூற்றுக்களினால் நீதிமன்றத்துக்கு அழுத்தம் பிரயோகித்து என்னை சிறைக்கு அனுப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறதா என எண்ணத் தோன்றுகிறது.

சுதந்திர கட்சியின் உறுப்பினர்கள் அரச அனுசரணையுடன் அச்சுறுத்தப்படுகிறார்கள்.கம்பஹா மற்றும் பதுளை மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் குற்றப்புலனாய்வாளர்களால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள்.கட்சியின் உள்ளக பிரச்சினையை உள்ளக பேச்சுவார்த்தை ஊடாக தீர்ப்பதற்கு எடுக்கும் முயற்சிகளுக்கு சிலர் தடையாக செயப்படுகிறார்கள் என்றும் தெரிவித்தார்.

இதன்போது எழுந்த விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர, இவர் அங்கொட அல்லது வெலிக்கடை செல்ல வேண்டும் என்று நான் குறிப்பிடவில்லை. செயற்பாடுகளின் பிரதிபலனுக்கு அமைய அங்கொட செல்ல நேரிடலாம்.

தயாசிறியை கட்சியை விட்டு நீக்கியதற்கு எதிராக நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இதனை இவர் தற்போது குறிப்பிடுகிறார். கட்சியின் செயலாளர் பதவியிலிருந்து தயாசிறியை யார் நீக்கியது,நாங்களா? சுதந்திர கட்சியின் உறுப்பினரல்லாத ஒருவரை கட்சியின் தலைவராக நியமித்தது யார்?

சுதந்திர கட்சியின் தலைவராக நிமல் சிறிபால டி சில்வாவும்,செயலாளராக துமிந்த திஸாநாயக்கவும் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். எந்த நீதிமன்றத்திலும் இந்த நியமனத்தை எவரும் சவாலுக்குட்படுத்தவில்லை. மைத்திரிபால சிறிசேன கட்சியின் தலைவராக பதவியேற்கும் போது 140 பேர் கட்சியின் உறுப்பினராக இருந்தார்கள். ஆனால் இன்று கட்சியின் நிலைமை கவலைக்குரியது என்றார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய மைத்திரிபால சிறிசேன, சுதந்திர கட்சியின் உறுப்பினர்கள் எவரும் அரசாங்கத்தின் பக்கம் செல்லக் கூடாது என்று கட்சி செயற்குழு தீர்மானம் எடுத்தது.ஆனால் இவர்கள் அமைச்சுப் பதவிக்காக அரசாங்கத்தின் பக்கம் சென்றார்கள்.இதனால்தான் கட்சி பலவீனமடைந்தது. எமது உறுப்பினர்களுக்கு இவர்களே அச்சுறுத்தல் விடுக்கின்றார்கள் என தெரிவித்தார். இதனை தொடர்ந்து உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண, தொலைத்தொடர்பு சட்டமூலம் மீதான விவாதத்தில் சுதந்திரக் கட்சி பற்றி பேசப்படுகிறது. நாங்கள் அரசாங்கத்தின் பக்கம் சென்றதால் கட்சி பலவீனமடையவில்லை. 2015 ஆம் ஆண்டு மஹிந்தவுடன் அப்பம் சாப்பிட்டு விட்டு எதிர்ப்பக்கம் சென்றதால்தான் சுதந்திரக் கட்சி பலவீனமடைந்தது.கட்சித் தலைவர் பதவியை துறந்து விட்டு இங்கு வந்து கூச்சலிடுவது பயனற்றது.எம்மைப் பேச வைக்காதீர்கள்.குழப்பிக் கொண்டால் பல விடயங்களை வெளிப்படுத்த நேரிடும் என்றும் எச்சரித்தார்.இவர்களுக்கிடையில் சில நிமிடங்கள் சபையில் சர்ச்சை தொடர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

## நீதிபதிகள் சிலரின்.... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

கல்கிசை நீதிமன்ற நீதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கு சட்டவிரோதமாக மின்சாரம் மற்றும் நீர் விநியோகம் பெறப்பட்டுள்ளது. இந்நீதிபதி தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவ்விடயம் தொடர்பில் ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு நீதிச்சேவைகள் ஆணைக்குழுவிடம் நான், வலியுறுத்தினேன்.ஆனால் இது தொடர்பில் இதுவரை உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. 2022 முதல் 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்தில் வழக்குப் பொருளாக வைக்கப்பட்டிருந்த 20 கோடி பெறுமதியான விஸ்கி போத்தல்கள் காணாமலாகியிருந்தன. இது தொடர்பிலும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. நீதிமன்றத்தின் களஞ்சியசாலையின் கதவின் பூட்டை உடைத்து போத்தல்கள் திருடப்பட்டதாக குறிப்பிடப்பட்டது. எனினும் பூட்டுக்கான வழமையான திறப்பினைக் கொண்டே கதவு திறக்கப்பட்டுள்ளதாக அரச பகுப்பாய்வாளர் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். விஸ்கி போத்தல்கள் திருடப்பட்ட விவகாரத்தை மூடி மறைக்க நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் முயற்சிப்பதாக, ஆணைக்குழுவின் பெரும்பாலானவர்கள் குறிப்பிடுகின்றார்கள். இவ்விடயத்தை நான் பாராளுமன்றத்தில் வெளிப்படுத்திய பின்னர் விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டு, பிரதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஹெரோயின்,கஞ்சா ஐஸ் போதைப் பொருள் பாவனையாளர்களுக்கு வழங்கப்படும் தண்டனை தொடர்பில் குறிப்பிடப்பட்டது.அபாயகரமான போதைப்பொருட்களுக்கு 1000 ரூபா தண்டப்பணம் அல்லது பிற்பகல் 2 மணி அல்லது 3 மணிக்குப் பின்னர் விடுதலை என்ற நிலையே காணப்பட்டது.

## பட்டதாரிகளுக்கு ஆசிரிய... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் அமைச்சரவைப் பத்திரம் வேறு விதமாக இருந்தது.

நியமனங்களை வழங்கிவிட்டு அதன் பின்னர் பரீட்சை நடத்துவது என்பது என்ன முறைமை என்பதை நான் அறியேன். ஏனைய சந்தர்ப்பங்களில் பரீட்சைகள் நடத்தப்பட்டே நியமனங்கள் வழங்கப்படுகின்றன.

அதன் பின்னர் நான் ஆசிரியர் சேவை யாப்பின்படி நியமனங்களை வழங்குவதற்கு அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பித்தேன். அதற்கிணங்க விண்ணப்பங்களைக் கோரினோம்.

இதன் போது அரசாங்கம் 52,000 அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கியிருந்தது. நாம் மீண்டும் அவர்களிடம் விண்ணப்பங்களை கோரினோம். 2023 மார்ச்சில் இப்பரீட்சை நடைபெறவிருந்தது. இதே மாதம் 23இல், முப்பது பேர் நீதிமன்றத்திற்குச் சென்றனர். நான்கு எதிர் மனுக்களை அவர்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர். தாக்கல் செய்யப்பட்டது.

## வேலைவாய்ப்புகள் தருவதாக பண... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

உறுதியளித்தபடி இப்பெண் வேலை வாங்கித் தரவில்லையென கம்பஹா பிரதேசவாசி ஒருவர் பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்திருந்தார்.

சந்தேகநபரான பெண் மீது பணியகத்துக்கு 05 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதன்படி செயற்பட்ட விசாரணை அதிகாரிகள் பெண்ணின் வீட்டுக்குச் சென்று அவரைக் கைது செய்துள்ளனர்.

முறைப்பாடுகளின் படி, பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள், கொழும்பு புதுக்கடை நீதிமன்றத்தில் அறிக்கையிட்டு, பெண்ணுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

## பாடகி சுஜீவாவின் காலில்...

சிகிச்சை நிபுணர்கள் அடங்கிய 04 குழுக்கள் இந்த சத்திர சிகிச்சையில் ஈடுபட்டதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ருக்ஷான் பெல்லான தெரிவித்தார்.

தற்போது பாடகி சுஜீவா நலமாக இருப்பதாகவும், குண்டடிபட்டு படுகாயத்துக்குள்ளான காலை துண்டிக்காமல் காப்பாற்ற முடிந்ததென்றும் அவர் கூறினார்.

பாடகி கே. சுஜீவா மட்டக்களப்பை பிறப்பிடமாக கொண்டவர். இவர், பிரபல பாடகர் மஹிந்த குமாரின் சகோதரியுமாவார்.

## தொழிற்சங்க போராட்டத்துக்கு...

அரசாங்க ஊழியர்கள் அனைவருக்கும் நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளதாக சுட்டிக் காட்டியுள்ளது.

இந்த பிரச்சினைகளுக்கு ஓரளவு தீர்வு கிட்டியுள்ளதாகவும் அதனால் தொழிற்சங்க போராட்டத்தில் பங்கேற்க போவதில்லை எனவும் சங்கம் தெரிவித்துள்ளது.

தொழிற்சங்க போராட்டம் குறித்து எந்தவொரு தொழிற்சங்கமும் தமக்கு அதிகாரபூர்வமாக அறிவிக்க வில்லையெனவும் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனவே, நாடு முழுவதிலுமுள்ள தமது சங்கத்தின் உறுப்பினர்கள் இந்த போராட்டத்தில் இணைந்து கொள்ளப்போவதில்லையென சங்கம் அறிவித்துள்ளது.

## கடமைக்கு சமூக...

கடந்த காலங்களில் கடுமையான பொருளாதார அழுத்தத்தில் இருந்த மக்கள் மீது மேலும் அழுத்தத்தை ஏற்படுத்தும் முடிவுகளை எடுக்கும் இயலுமை அரசாங்கத்திற்கு இல்லை. மறுபுறம், சில அரச ஊழியர்கள் மேலதிக சம்பளம் மற்றும் கொடுப்பனவுக் கோரிக்கைகளை முன்வைத்து பொதுமக்கள் அனைவரையும் அசௌகரியத்திற்கு உள்ளாக்குவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

# தினகரன் வர்த்தக உலா

சம்ஸ் பாஹிம்

## அசட்லைன் பைனான்ஸ் நிறுவன பணிப்பாளர் சபைக்கு நந்த பெனாண்டோ நியமனம்



அசட்லைன் பைனான்ஸ் லிமிடட் நிறுவனத்தின் சுயாதீன, நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளராக நந்த பெனாண்டோ அண்மையில் நியமிக்கப்பட்டிருப்பதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

அண்மையில் வணிக ஆலோசகராகப் பணியாற்றி வந்த நந்த பெனாண்டோ, வங்கித் துறையில் நான்கு வருடங்களுக்கு மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளார். நிதித் திட்டமிடல் மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்கும் துறைசார் வணிக ஆலோசனை நிறுவனமொன்றில் முகாமைத்துவப் பணிப்பாளராகவும் அவர் பணியாற்றி வருகின்றார். அத்துடன், ஹட்டன் நஷனல் வங்கி பிஎல்சி, ஹைகிரப் பிஎல்சி, டிப்ட் ப்ரொடக்ஸ் பிஎல்சி மற்றும் ஹெய்லிஸ் ஃபப்ரிக் பிஎல்சி போன்ற பல்வேறு நிறுவனங்களின் பணிப்பாளர் சபையில் பணியாற்றி வருகின்றார்.

தற்பொழுது வகித்துவரும் பதவிகளுக்கு முன்னர் நந்த பெனாண்டோ, சம்பத் வங்கியில் அதன் முகாமைத்துவப் பணிப்பாளராகப் பணியாற்றியிருந்ததுடன், அவர் வங்கி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டிலிருந்து 36 வருடங்கள் வங்கியில் சேவையாற்றியதன் மூலம் மாற்றியமைக்கும் மற்றும் தொலைநோக்குப் பார்வையுடைய திறமைகளுக்காகப் புகழ் பெற்றார்.

இலங்கை வங்கியாளர் நிறுவனத்தின் சிரேஷ்ட உறுப்பினரான பெனாண்டோ, இந்தியாவின் சிகிம் மனிபோல் பல்கலைக்கழகத்தில் முதுமாணி வணிக நிர்வாகப் பட்டத்தைப் பெற்றுள்ளார். இவர் கல்கிஸ்சை சென்.தோமஸ் கல்லூரியின் பழைய மாணவருமாவார்.

## சியெட் வர்த்தக நாமத்தின் ஏற்றுமதி தடம் விரிவுபடுத்தப்படுகிறது

உலகிற்கு இயற்கையான இறப்பரை வழங்கிய நாடான பிரேசில், இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் சியெட் டயர்களுக்கான சமீபத்திய ஏற்றுமதி சந்தையாக மாறியுள்ளது.



16 நாடுகளை உள்ளடக்கிய நிறுவனத்தின் சர்வதேச தடயத்தில் இணைந்து கொண்ட தென் அமெரிக்காவின் இரண்டாவது நாடான பிரேசிலுக்கு சியெட் களனி ஹோல்டிங்ஸ் (CEAT Kelani Holdings) தனது முதல் ஏற்றுமதிக்கான டயர்கள் தொகுதியை அண்மையில் அனுப்பி வைத்தது.

பிரேசிலின் தேசிய தரநிலை அமைப்பான அளவியல் தரப்படுத்தல் மற்றும் கைத்தொழில்துறை தரத்துக்கான தேசிய நிறுவனத்தின் (National Institute of Metrology Standardization and Industrial Quality) அளவியல் சான்றிதழை சியெட் களனி பெற்றதன் மூலம் பிரேசிலுக்கான ஏற்றுமதியை ஆரம்பிக்க கூடியதாக இருந்தது.

சர்வதேச வாகனத் தர முகாமைத்துவ அமைப்புகளுக்கு இசைந்த வகையில் சர்வதேச வாகனப் பணிப் படையின் (IATF) IATF 16949:2016 சான்றிதழைப் பெற்ற ஒரே உள்நாட்டில் தயாரிக்கப்படும் டயர் வர்த்தகநாமம் சியெட் ஆகும்.

மேலதிகமாக, சியெட் களனி ஏற்றுமதி செய்யும் டயர்கள் ஐரோப்பிய பொருளாதாரப் பகுதியில் (EEA) விற்பனை செய்யப்படும் அனைத்து வாகனப்பாகங்களுக்கும் கட்டாயத் தேவையாக திகழும் ஐரோப்பாவிற்கான பொருளாதார ஆணைக்குழுவின் (ECE) இஅடையாள சான்றிதழைப் பெற்றுள்ளன. மற்றும் இது இந்தோனேசியாவின் தேசிய தரநிலைப்படுத்தல் முகவரகத்தால் (BSN) வழங்கப்பட்ட இந்தோனேசிய தேசிய தரநிலை SNI மற்றும் இந்திய தரநிலைகள் பணியகத்தால் வழங்கப்பட்ட இந்திய தேசிய தரநிலை BIS ஆகியவற்றுடன் இணங்குகிறது.

பிரேசில் எமக்கு ஒரு உற்சாகமான மற்றும் வர்த்தக ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த ஏற்றுமதி சந்தையாகும் என CEAT களனியின் தலைமைச் செயற்பாட்டு அதிகாரி திரு.ஷமல் குணவர்தன தெரிவித்தார். ஒவ்வொரு புதிய சந்தையும் அந்தச் சந்தையின் தரத் தேவைகளுக்கு இணங்க கடுமையான சோதனைக்கு உட்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்குகிறது, இது செயல்முறைகள் அல்லது மூலப் பொருட்கள் அல்லது இரண்டிலும் முன்னேற்றத்திற்கான பங்களிப்பினை வழங்கும், அத்துடன் உள்நாட்டு சந்தையில் வாடிக்கையாளர்களுக்கும் பயனளிக்கும்.

## சிலாபம் புனித ரோச்சஸ் கல்லூரிக்கு கணினிகளை நன்கொடையாக வழங்கிய AMW மற்றும் Yamaha OBM





Yamaha Outboard Motors (OBM) உடன் இணைந்து Associated Motorways (Private) Limited (AMW) நிறுவனமானது சிலாபம், அம்பகந்தவிலவில் உள்ள புனித ரோச்சஸ் கல்லூரிக்கு (St. Roches College) 10 கணினிகளை நன்கொடையாக வழங்கியுள்ளது. இந்த நிகழ்வானது, கல்விக்கு ஆதரவளிப்பதற்கும், பல ஆண்டுகளாக தங்களுக்கு ஆதரவளித்த சமூகங்களுக்கு நன்றிக்கடன் செலுத்துவதற்குமான AMW இன் அர்ப்பணிப்பை எடுத்துக் காட்டுகிறது.

Yamaha Outboard Motors நிறுவனத்திற்கு அம்பகந்தவில சமூகத்தினர் மிக முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக உள்ளனர். இந்த முயற்சிக்காக, நாடு முழுவதிலும் உள்ள பல்வேறு பாடசாலைகள் தொடர்பில் கவனமாக பரிசீலித்த பின்னர் புனித ரோச்சஸ் கல்லூரி தெரிவு செய்யப்பட்டுள்ளது. கணினிகளை நன்கொடையாக வழங்குவதற்கு மேலதிகமாக, கல்லூரியின் கணனிக் கூடம் முழுமையாக செயற்படுவதை உறுதி செய்யும் வகையில், அது தொடர்பான பழுதுபார்ப்புகளை முன்னெடுத்து, அனைத்து மின்சார தொடர்புகள் மற்றும் இணைப்புகளையும் AMW நிறுவனம் சீர் செய்ய நடவடிக்கை எடுத்திருந்தது. பாடசாலையின் தேவைகளுக்கு ஏற்றவாறு அவசியமான அனைத்து அத்தியாவசிய மென்பொருட்களும் கணினிகளில் முழுமையாக இணைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம், அவை மாணவர்களின் கல்வி, ஆராய்ச்சி, கற்றலுக்கு அவசியமான விடயங்களை அணுகுவதற்கான திறனை கொண்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளன.

AMW இன் முக்கிய உறுப்பினர்களான Yamaha Sri Lanka தலைவர் Shusaku Sato, Yamaha OBM விற்பனைத் தலைவர் ஜேசுமணி தமேல், தகவல் தொழில்நுட்ப பொது முகாமையாளர் லிலான் திஸாநாயக்க, Associated Motorways (Pvt) மனிதவளத் தலைவர் ஹர்ஷனி ரணசிங்க உள்ளிட்ட AMW இன் முக்கிய பிரமுகர்கள், புனித ரோச்சஸ் கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள் கலந்துகொண்ட இவ்விழாவில் பாடசாலைக்கு கணினிகள் கையளிக்கப்பட்டன.

உள்நாட்டு வாகனத் துறையில் 75 ஆண்டுகளுக்கும் மேலான சிறந்த வரலாற்றைக் கொண்டுள்ள AMW, சமூகங்களுக்கு ஆதரவளிப்பதற்கும் கல்வி வளர்ச்சியை மேம்படுத்துவதற்குமான அதன் உறுதிப்பாட்டை மீண்டுமொரு முறை உறுதிப்படுத்தியுள்ளது.

## பாராளுமன்ற வளாகத்தில் PET பிளாஸ்டிக் சேகரிக்க Eco Spindles உடன் கைகோர்த்த Coca-Cola



ஜூன் 05 அன்று உலக சுற்றுச்சூழல் தினத்திற்கு புதிய அர்த்தத்தைச் சேர்க்கும் வகையில், CocaCola Beverages Sri Lanka பாராளுமன்ற வளாகத்தில் PET பிளாஸ்டிக் மீள்சுழற்சி திட்டத்தை ஆரம்பித்துள்ளது. இதன்படி, பாராளுமன்ற வளாகத்தில் PET பிளாஸ்டிக் அகற்றல் அலகுகளை நிறுவிய CocaCola, கழிவு நிர்வகிப்பு மூலம் சுற்றுச்சூழல் பொறுப்பு மற்றும் நிலைத்தன்மைக்கான தனது அர்ப்பணிப்பை நிரூபித்துள்ளது.

தற்போதைய பாராளுமன்ற சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலையான அபிவிருத்தி துறை கண்காணிப்பு குழுவின் தலைவர் அஜித் மான்னப்பெரும ஆகியோரின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த சுற்றுச்சூழலுக்கு உகந்த செயற்திட்டம் பசுமையான எதிர்காலத்திற்கு ஒரு சிறந்த நடவடிக்கையாக அமையும் என்பதில் உறுதி.

நாடு முழுவதும் ஏற்கனவே 500க்கும் மேற்பட்ட PET பிளாஸ்டிக் சேகரிப்பு அலகுகளை நிறுவியுள்ள CocaCola Beverages, இலங்கை பாராளுமன்ற வளாகத்திலும் அத்தகைய அலகுகளை நிறுவுவதன் மூலம் PET பிளாஸ்டிக் சேகரிப்பு மற்றும் மீள்சுழற்சி உத்திகளை மேலும் மேம்படுத்தும். ஒரு சேகரிப்பு பிரிவில் 50 கிலோ PET பிளாஸ்டிக்கை சேகரிக்கும் திறன் காரணமாக, சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மற்றும் CocaCola Beverages ஆனது பிளாஸ்டிக் மீள்சுழற்சிக்கு பெரும் பங்களிப்பை வழங்கும் ஆற்றலையும் கொண்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும, "பாராளுமன்ற வளாகத்தில் இன்று ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டம் முழு நாட்டிற்கும் மிகவும் முக்கியமானது. சராசரியாக, ஆண்டுக்கு சுமார் 1,600 மெட்ரிக் தொன் PET பிளாஸ்டிக் சுற்றுச்சூழலில் கலக்கப்படுகிறது. ஆனால் மீள்சுழற்சிக்கு 400 மெட்ரிக் தொன் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. பொறுப்பற்ற முறையில் சுற்றுச்சூழலில் சேர்க்கப்படும் இந்த பிளாஸ்டிக் கழிவுகளை நிர்வகிப்பது மீள்சுழற்சி செய்வதில் தனியார் துறை நிறுவனங்களின் தலையீடு மிகவும் பாராட்டத்தக்கது. அந்தத் தலையீட்டின் கீழ் பாராளுமன்ற வளாகத்தில் PET பிளாஸ்டிக் நிர்வகிப்பிற்கான திட்டத்தைத் தொடங்கியதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்." என தெரிவித்தார்.

CocaCola உடன் இணைந்து PET பிளாஸ்டிக்கை சேகரித்து மீள்சுழற்சி செய்வதற்கு EcoSpindles பொறுப்பெடுத்துள்ளது. EcoSpindles ஆனது ஹொரணையில் அமைந்துள்ள அதன் அதிநவீன வசதிகள் மூலம் சேகரிக்கப்பட்ட பிளாஸ்டிக்கை வினைத்திறனுடன் செயற்படுத்துகிறது என்பது மற்றுமொரு விசேட அம்சமாகும். நாட்டில் கார்பன் வெளியேற்றத்தை பூஜ்ஜியத்திற்கு கொண்டு வருவதற்கான பங்களிப்பாகவும் இது அமைகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## IDB பசுமை கைத்தொழில் விருதுகள் 2024 இல் கொமர்ஷல் வங்கி இரண்டு தங்கங்களை வென்றது

நிலைபேண்தகைமைக்கான வெற்றிக் கதைகளை அங்கீகரிப்பதற்காக கைத்தொழில் அபிவிருத்தி சபை வழங்கிய பசுமைத் தொழில் விருதுகள் 2024 இல் கொமர்ஷல் வங்கி இரண்டு தங்கங்கள் உட்பட மூன்று கௌரவங்களை வென்றுள்ளது.



இலங்கையின் முதல் 100% கார்பன் நடுநிலை வங்கியான கொமர்ஷல் வங்கிக்கு குறைந்த கார்பன் மற்றும் அல்லது காலநிலைமீள்திறன் உற்பத்திக்கான' தங்க விருது வங்கியின் கார்பன்நடு நிலைக்கான பயணத்தின் நேர்மறையான தாக்கங்களுக்காக வழங்கப்பட்டதுடன் மற்றும் 'பசுமை டிஜிட்டல் மற்றும் தகவல் தொழில்நுட்பங்களுக்கான' தங்க விருது பரந்த அளவிலான வாடிக்கையாளர்களால் டிஜிட்டல் வங்கியை ஏற்றுக்கொள்வதில் வங்கியின் வெற்றிக்காக வழங்கப்பட்டது. இந்நடவடிக்கைகள் மூலம் வங்கியானது நிதி உள்ளடக்கத்தை மேம்படுத்துவதுடன் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்கிறது.

கொமர்ஷல் வங்கியானது, காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வது, சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை ஊக்குவித்தல் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த செயல்பாடுகளை ஊக்குவித்தல் ஆகியவற்றை இலக்காகக் கொண்ட முயற்சிகளில் பசுமை நிதியளிப்பில் அதன் முன்னோடி பங்கை அங்கீகரிக்கும் பொருட்டு 'உள்ளடக்கிய வர்த்தக அபிவிருத்திக்காக 'வெண்கல விருதையும் வென்றது.

கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சனத் மனதுங்க கருத்துத் தெரிவிக்கையில், கொமர்ஷல் வங்கியானது, பன்முகத்தன்மை, உள்ளடக்கம், வெளிப்படைத்தன்மை மற்றும் சமூக சமத்துவம் ஆகிய கொள்கைகளை உள்ளடக்கிய நிலைத்தன்மைக்கான முழுமையான அணுகுமுறைக்கு மாற்றியமைக்க முடியாத வகையில் தன்னை அர்ப்பணித்துள்ளது. "இந்தத் துறையில் எங்களின் பன்முக முயற்சிகள் ஏற்கனவே பலனைத் தந்துள்ளன, வாழ்வாதாரத்தை உருவாக்கும் அதே வேளையில் நமது சுற்றுச்சூழலுக்கான வளமான, அர்த்தமுள்ள இருப்புக்கு நாம் பங்களிக்கிறோம் என்பதையே இது உணர்த்துகிறது. தொடரும் இந்த பயணத்தில் நாம் அடைந்து வரும் முடிவுகளுக்கு இந்த விருதுகள் ஒரு பொருத்தமான அங்கீகாரமாகும்"

'குறைந்த கார்பன் மற்றும் காலநிலைமீள்தன்மை உற்பத்திக்கான IDB யின் தங்க விருதானது கொமர்ஷல் வங்கியானது 85 கிளைகளில் சூரிய மின்சக்தி அமைப்புகளை நிறுவியதன் மூலம் 2017 முதல் 2022 வரையான காலப்பகுதியில் மின் நுகர்வினை கருத்தில் கொள்ளும்போது மாதத்திற்கு 239,080 மறுமின்சாரத்தை உற்பத்தி செய்வதால், 16,404 Gigajoules மின்சாரம் குறைந்ததையும் அங்கீகரிக்கிறது.

## Queen of the World 2.0 இற்கு விண்ணப்பியுங்கள்!

Season 01 நிகழ்ச்சியின் மகத்தான வெற்றியைத் தொடர்ந்து, மிகவும் எதிர்பார்க்கப்பட்ட Second Season – Queen of the World Sri Lanka 2.0 போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதை உத்தியோகபூர்வமாக அறிவிப்பதில் Queen of the World Sri Lanka (QOTW) பெருமிதம் அடைகிறது.



உள்ளீர்த்தல் மற்றும் வலுவூட்டுதல் ஆகிய தமது முக்கிய மதிப்பீடுகளைக் கட்டியெழுப்புவதன் மூலம், 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து இலங்கைப் பெண்களிடமிருந்தும் Queen of the World Sri Lanka 2.0 விண்ணப்பங்களை கோருகிறது. இப்போட்டியானது ஒவ்வொரு பெண்ணும் தனது திறமை, கருணை, அசைக்க முடியாத மனப்பான்மையை வெளிப்படுத்துவதற்கான ஒரு தளத்தை உறுதி செய்யும் வகையில், Miss Category: (1829 வயது, திருமணமாகாத), Ms. Category: (30+ வயது, திருமணமாகாத), Mrs. Category: (திருமணமான), Elite Category: (50+ வயது, திருமணமான, திருமணமாகாத, பெண்களின் கருணை, அழகு, ஞானத்தை கொண்டாடுதல்) ஆகிய சிறப்பு வாய்ந்த நான்கு தனித்தனி பிரிவுகளை கொண்டுள்ளது.

பாரம்பரிய போட்டி வடிவத்தை தாண்டி, தனிப்பட்ட வளர்ச்சி மற்றும் தனக்குள் உள்ள திறமையை கண்டுபிடித்தல் அம்சங்களை வளர்க்கின்றதும், மாற்றத்தை ஏற்படுத்துகின்றதுமான அனுபவத்தை Queen of the World Sri Lanka 2.0 வழங்குகிறது. சமூகத்தில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்த அர்ப்பணிப்புடன், உணர்ச்சிமிக்க, வெளிப்படையான, கடின உழைப்பாளிகளான பெண்களை இந்நிகழ்வு தேடுகிறது. அவர்கள் ஒரு மனிதாபிமானத் தலைவராகவோ, ஒரு சமூகவாதியாகவோ அல்லது அவர்களது துறையில் வளர்ந்து வரும் நட்சத்திரங்களாகவோ இருக்கலாம். அவர்களது குரலுக்கு வலிமை வழங்கவும் ஏனையவர்களை வலுவூட்டவுமான ஒரு தளத்தை Queen of the World Sri Lanka 2.0 வழங்குகிறது.

Mrs. Elite Sri Lanka 2023 பட்டம் வென்ற துஷாரி ஜயகொடியின் முக்கிய சாதனைகள், Queen of the World Sri Lanka நிகழ்வின் மாற்றத்திற்கான சக்திக்கு ஒரு சான்றாக விளங்குகிறது. அவர் சர்வதேச அரங்கில் இலங்கையை சிறப்பாகப் பிரதிநிதித்துவப்படுத்தியதோடு மட்டுமல்லாமல், எண்ணிலடங்கா இலங்கைப் பெண்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் Director Queen எனும் பெருமைக்குரிய பட்டத்தையும் பெற்றார்.

Queen of the World Sri Lanka 2.0 இற்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன. ஒன்லைனில் விண்ணப்பிப்பதற்கு www.qotwsrilanka.com தளத்தைப் பார்வையிட முடியும்.

## பாரிஸ் 2024 ஒலிம்பிக் மற்றும் பாராலிம்பிக்கில் ரசிகர்களுக்கு புதிய அனுபவத்தை வழங்கத் தயாராகும் Samsung

பாரிஸ் ஒலிம்பிக் மற்றும் பாராலிம்பிக் விளையாட்டு விழாவின் உலகளாவிய பங்காளரான சாம்சங் எலெக்ட்ரோனிக்ஸ், தனது 'Open always wins' பிரசாரத்தை அண்மையில் உத்தியோகப்பூர்வமாக ஆரம்பித்துள்ளது. அத்துடன், இம்முறை ஒலிம்பிக்கின் முக்கியத்துவத்தையும், சிறப்பையும் குறிக்கும் வகையில் பாரிஸில் ChampsElysees 125 இல் Olympic rendezvous என்ற காட்சியறை ஒன்றும் Samsung நிறுவனத்தினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.




பாரிஸ் 2024 ஒலிம்பிக் விளையாட்டு விழா ஆரம்பமாவதற்கு 100 நாட்கள் எஞ்சியிருக்கும் நிலையில், இம்முறை ஒலிம்பிக்கை இலக்காகக் கொண்டு 'Open always wins' பிரசாரத்தின் மூலம் Samsung மீதான நம்பிக்கையை நுகர்வோருக்குக் கொண்டு செல்வதில் அந்த நிறுவனம் வெற்றி பெற்றது.

வீரர்கள் தங்கள் வலிமை மற்றும் திறமை மூலம் எப்படி வெற்றியைத் தொடர்கிறார்கள் என்பதை வெளிப்படுத்திய இந்த பிரசாரமானது, skateboarder Aurlien Giraud (பிரான்ஸ்), பாரா குறுந்தூர ஓட்ட வீரர் Johannes Floors (ஜெர்மனி) மற்றும் breakdancer Sarah Bee (பிரான்ஸ்) ஆகியோரை உள்ளடக்கிய Samsung Galaxy மெய்வல்லுனர் அணியிரால் ஒரு சிறப்பு நிகழ்ச்சியாக காண்பிக்கப்பட்டது.

'பாரிஸ் ஒலிம்பிக் மற்றும் பாராலிம்பிக் விளையாட்டு விழாவின் உலகளாவிய பங்காளராக, உலகெங்கிலும் உள்ள வாடிக்கையாளர்களுக்கு சுமார் 40 ஆண்டுகளாக புதுமையான தயாரிப்புகள், புதுமையான தொழில்நுட்பம் மற்றும் இணையற்ற அனுபவங்களை வழங்க முடிந்தது.

## அமானா வங்கி புத்தளம் கிளை, புதிய மற்றும் மேம்படுத்திய பகுதிக்கு மாற்றம்

அமானா வங்கி தனது புத்தளம் கிளையை அதிகளவு இடவசதி படைத்த, சௌகரியமான புதிய வளாகத்துக்கு இடம் மாற்றியுள்ளது. இல. 34, குருநாகல் வீதி, புத்தளம் எனும் முகவரிக்கு இந்த கிளை இடம்மாற்றப்பட்டுள்ளது. ஏற்கனவே காணப்படும் மற்றும் புதிய வாடிக்கையாளர்களுக்கு சௌகரியமான வாடிக்கையாளர் சேவை மற்றும் வங்கியியல் அனுபவத்தை பெற்றுக் கொடுப்பதற்கான வங்கியின் அர்ப்பணிப்பின் வெளிப்பாடாக இந்த செயற்பாடு அமைந்துள்ளது. வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மொஹமட் அஸ்மீர் மற்றும் பிரதம செயற்பாட்டு அதிகாரி இம்தியாஸ் இக்பால், பிரதம இடர்முகாமைத்துவ அதிகாரி எம். எம். எஸ். குவிலித், பிரதம நிதி அதிகாரி அலி வாஹித் ஆகியோரின் பங்கேற்புடன் இந்த புதிய முகவரிக்கு மாற்றப்பட்ட புத்தளம் கிளையின் அங்குரார்ப்பண நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் மதகுருமார், பிரதேசவாசிகள், வியாபார உரிமையாளர்கள், உள்ளூர் அதிகாரசபையினர், வங்கி ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் பிராந்தியத்தின் முக்கிய பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.




மேம்படுத்தப்பட்ட சேவை அனுபவத்தை பெற்றுக் கொடுப்பதற்கமைய, புதிய புத்தளம் கிளையினூடாக, கணக்கு ஆரம்பித்தல், வாகன நிதிவசதியளிப்பு, வீட்டு நிதிவசதியளிப்பு, தனிநபர் நிதிவசதியளிப்பு, தங்கச் சான்றிதழ் நிதிவசதியளிப்பு, சிறிய மற்றும் நடுத்தர வியாபாரத்திற்கான வங்கியியல், வர்த்தக சேவைகள் மற்றும் பண மீளப்பெறுகைகள், உடனடி பண வைப்புகள் மற்றும் காசோலை வைப்புகள் அடங்கலாக நவீன வசதிகள் படைத்த 24x7 வங்கியியல் வலயம் ஆகியன அடங்கியுள்ளன.

இந்நிகழ்வில் அமானா வங்கியின் முகாமைத்துவ பணிப்பார்/பிரதம நிறைவேற்று அதிகாரி மொஹமட் அஸ்மீர் கருத்துத் தெரிவிக்கையில், "2013 ஆம் ஆண்டு முதல் புத்தளம் பகுதியில் பிரசன்னத்தைக் கொண்டிருப்பதுடன், அதிகளவு இடவசதி மற்றும் நவீன வசதிகள் படைத்த வளாகத்துக்கு எமது புத்தளம் கிளையை இடம்மாற்றி, புத்தளம் பிரதேசத்தைச் சேர்ந்த வாடிக்கையாளர்களுக்கு எமது வங்கியியல் சேவைகளை மேலும் விரிவாக்கம் செய்துள்ளதையிட்டு நாம் பெருமை கொள்கின்றோம். இப்பிராந்தியத்திலிருந்து அதிகரித்துச் செல்லும் வாடிக்கையாளர் இருப்பை இது பிரதிபலிப்பதுடன், வங்கியியலை அதிகளவு சௌகரியமாக்கல் மற்றும் அனைத்து வாடிக்கையாளர்களாலும் அணுகக்கூடியதாகச் செய்தல் போன்றவற்றுக்கான எமது அர்ப்பணிப்பை பிரதிபலிப்பதாகவும் அமைந்துள்ளது. புத்தளம் பிரதேசத்தைச் சேர்ந்த ஏற்கனவே காணப்படும் மற்றும் புதிய வாடிக்கையாளர்களின் வங்கியியல் அனுபவத்தை பெருமளவு மேம்படுத்துவது மாத்திரமன்றி, சமூகத்தாருடன் சிறப்பாக தொடர்புகளை பேணி, அவர்களின் நிதித் தேவைகளை வினைத்திறனான முறையில் அறிந்து கொள்வதற்கு உதவியாக அமைந்திருக்கும் எனக் கருதுகின்றோம்." என்றார்.



# கிழக்கின் குரல்



## நல்லாட்சியை மேம்படுத்தல் தொடர்பான செயலமர்வு

அம்பாறை மத்தி தினகரன் நிருபர்



சமூகம் சார்ந்த விடயங்களில் நல்லாட்சியை உறுதிப்படுத்தும் நோக்கில் செயற்படும் WE Connect திட்டத்தின் ஏற்பாட்டில், அம்பாறை மாவட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் கலந்துகொண்ட செயலமர்வு சனிக்கிழமை (06) மாளிகைக்காடு பாவா றோயலி வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது.

சமூக சேவைகள் மற்றும் அபிவிருத்தி திட்டங்களின் வினைத்திறனை அதிகரிக்கும் நோக்கில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இடம்பெற்ற இப்பயிற்சி பட்டறையில் அம்பாறை மாவட்டத்தில் காணப்படும் காலநிலை மாற்றம், சூழல் பிரச்சினைகள், கழிவு முகாமைத்துவம், வன விலங்குகளால் ஏற்படும் பாதிப்புகள், கடலரிப்பு போன்ற தலைப்புகளில் பல்வேறு விடயதானங்கள் கலந்துரையாடப்பட்டன.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அஸ்லம் சஜா அவர்களின் நெறிப்படுத்தலில் குரல்கள் இயக்கத்தின் தவிசாளரும் பிரபல சட்டத்தரணியுமான றாஸி முஹம்மட், விடியல் இணையத்தள ஆசிரியரும் தகவல் அறியும் உரிமைச் சட்ட செயற்பாட்டாளருமான ஊடகவியலாளர் றிப்தி அலி ஆகியோர் இந்நிகழ்வின் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

## பாடசாலைகள் மட்டத்தில் போதை பொருள் பாவனையை தடுத்தல் பற்றிய விழிப்புணர்வு கலந்துரையாடல்





(வாச்சிக்குடா விஷேட நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் தொடக்கம் பாணம பிரதேசம் வரையாக உள்ள பாடசாலைகள் மட்டத்தில் போதை பொருள் பாவனையை தடுத்தல் பற்றிய விழிப்புணர்வு கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் (08) பொத்துவில் பொலிஸ் அத்தியட்சகர் ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

பொத்துவில் உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் திரு.தேசப்பிரிய ஏற்பாட்டில் சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி என்.சி.எம்.கலீம் மூடின் வழிகாட்டலில் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெயபத்ம தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பாடசாலை மற்றும் சமூகமட்டத்தில் பரவிவரும் போதை பொருள் பாவனையை தடுப்பது பற்றியும் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரினால் விளக்கம் அளிக்கப்பட்டதுடன் மக்களிடமிருந்து கருத்துகளும் பெறப்பட்டது.

நிகழ்வில் திருக்கோவில் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி மற்றும் பொத்துவில், பாணம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி, சமூக சிவில் நிருவாகத்திற்கான பொலிஸ் அதிகாரி மற்றும் பாடசாலை சமூகத்தினர், பாடசாலை மாணவர்கள், சிவில் சமூக உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## மீன் பிடித்துறை அமைச்சின் பணிப்பாளர் நாயகங்களுள் ஒருவராக நியமிக்கப்பட்ட மருதமுனை அபுல் கலீஸ்

(மருதமுனை தினகரன் விஷேட நிருபர்)



மருதமுனையைச் சேர்ந்த முகம்மது சாலிஹ் அபுல் கலீஸ் 2024.07.01 தொடக்கம் மீன் பிடித்துறை அமைச்சின் பணிப்பாளர் நாயகங்களுள் ஒருவராக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

மருதமுனை அல்ஹம்றா மகாவித்தியாலயம், கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி போன்றவற்றின் பழைய மாணவரான அபுல் கலீஸ் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 1989ல் விவசாய விஞ்ஞானப் பட்டத்தை நிறைவு செய்து, அங்கேயே விலங்கு விஞ்ஞான துறையில் ஆராய்ச்சி உதவியாளராக சிறிது காலம் பணியாற்றினார்.

உள்நாட்டிலும், இந்தோனேசியா, சீனா (இரு தடவைகள்), மலேசியா, தென்கொரியா போன்ற நாடுகளிலும் விவசாய தொழில்நுட்ப, விவசாய விரிவாக்கல் துறைகளில் தனது சேவைக் காலத்தில் பல்வேறு பயிற்சிகளைப் பெற்றுக் கொண்ட அபுல் கலீஸ் அவர்கள் சுமார் இருபதிற்கும் மேற்பட்ட விவசாய நூல்கள், பிரசுரங்கள், வெளியீடுகள் போன்றவற்றை வெளியிட்டுள்ளார். அத்துடன் சிங்கள மொழியிலிருந்து பல வெளியீடுகளை தமிழில் மொழி பெயர்த்து இலங்கை விவசாய தமிழ் உலகிற்கு சேவையும் செய்துள்ளார். அத்துடன் பல்வேறு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்குபற்றி விவசாய விரிவாக்கல், தொழில்நுட்ப அறிவுகள் விவசாயிகளிடம் போய்ச் சேர்வதற்கும் காரணமாக இருந்துள்ளார்.

பட்டதாரி ஆராசிரியராக தாவரவியல் பாடத்தை கற்பித்துக் கொண்டிருக்கும் போது விவசாயத்தில் இருந்த பெரும் நாட்டம் காரணமாக இலங்கை விவசாய சேவையில் 1992 இல் இணைந்து அம்பாறை மாவட்டத்தின் விவசாய விரிவாக்கல் பகுதியின் உதவி விவசாயப் பணிப்பாளராக ஆரம்பித்து, குண்டசாலை விவசாயக் கல்லூரியின் வருகைதரு விரிவுரையாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

இவர் 2009ம் ஆண்டு பிரதி விவசாய பணிப்பாளராகவும் மாவட்ட விவசாய பணிப்பாளராகவும், 2020 – 2021 காலப் பகுதியில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான பதில் மாவட்ட விவசாயப் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

இவர் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பட்டப்பின் கற்கை நெறிகள் நிறுவனத்தில் விவசாய விரிவாக்கம் மற்றும் தொடர்பாடல் துறையில் முதுமாணிப் பட்டம் பெற்றவர் இவர் இந்த பணிப்பாளர் நாயகம் என்ற பதவி கிடைக்கும் வரை (2023 – 2024) காலப்பகுதியில் கிழக்கு மாகாண விவசாயப் பணிப்பாளராகக் கடமையாற்றினார்.

## வெருகலில் தையல் பயிற்சி நிலையம் திறந்து வைப்பு



(தோப்பூர் குறூப் நிருபர்



வெருகல் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த பூமரத்தடிச்சேனை கிராம சேவகர் பிரிவில் தையல் பயிற்சி நிலையம் (08) திருகோணமலை மாவட்ட செயலாளர் சமிந்த கெட்டியாராய்ச்சி அவர்களினால் உத்தியோகபூர்வமாக திறந்து மக்கள் பாவனைக்காக வழங்கப்பட்டது.

இந்நிகழ்வானது வெருகல் பிரதேச செயலாளர் எம்.ஏ. அனஸ் அவர்களின் தலைமையில் இடம்பெற்றதுடன் இந்நிகழ்விற்கு வேல்ட் விஷன் நிறுவனமும் பங்களிப்பினை வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

அம்பாறை மாவட்ட

## சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு ஏற்பாட்டில் விருது வழங்கும் நிகழ்வு

(அட்டாளைச்சேனை குறூப், திராய்க்கேணி நிருபர்கள்)





விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழுள்ள சிறு தொழில் முயற்சி அபிவிருத்திபிரிவினரால் பாடசாலை மாணவர்களிடையே தொழில் முயற்சியாண்மை எண்ணக்கருவினை உருவாக்கும் நோக்குடன் கடந்த ஆண்டு அனைத்து மாவட்டங்களிலும் வெற்றிகரமாக நடாத்தி முடிக்கப்பட்ட நிகழ்வுகளுக்கான விருது வழங்கும் வைபவங்கள் மிகச்சிறப்பாக நடைபெற்றுள்ளன.

இதற்கு அமைவாக அம்பாறை மாவட்ட சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினரால் ஒழுங்கு செய்யப்பட்ட பல்வேறு நிகழ்வுகளுக்கான விருது வழங்கும் வைபவமும் சிறு கைத்தொழில் முயற்சியாளர்களை ஊக்குவித்து அவர்களுக்கு

சிறந்த வழிகாட்டியாக இருந்து நற்பணியாற்றிய தொழிலதிபர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் கடந்த வியாழக்கிழமை (04.07.24) அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் உதவிப்பணிப்பாளர் ஐ எம் நாசர் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவிற்கு அம்பாறை மாவட்ட அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்கிரம பிரதம அதிதியாகவும் அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.அன்சார் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டு கட்டுரை, கலை மற்றும் பேச்சு போட்டிகளில் திறமை காட்டிய மாணவ மாணவியர்களுக்கு சான்றிதழ்களையும் மற்றும் விருதுகளையும் வழங்கி வைத்தனர்.

மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மாணவர்களும் ஆசிரியர்களும் கலந்துகொண்ட இந்நிகழ்வில் பல சிறப்பு நடனங்களும் அரங்கேற்றப்பட்டன.

## நாடகப் போட்டியில் தங்கம் வென்ற நிந்தவூர் மஸ்ஹர் பெண்கள் பாடசாலை



அல் மஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலை முஸ்லிம் கலாசார திறந்த சமூக நாடக போட்டியில் முதலாமிடம் பெற்று தங்கப் பதக்கம் வென்றது.

கடந்த (06) சனிக்கிழமை காத்தான்குடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற மாகாண மட்ட முஸ்லிம் கலாசாரப் போட்டியில் நிந்தவூர் அல் மஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவிகள் முதலாம் இடத்தைப் பெற்று மாகாண மட்டத்தில் தங்கம் வென்று சாதனை படைத்துள்ளனர்.

இதே வேளை, முதற் தடவையாக மாகாண மட்ட முஸ்லிம் கலாசார நாடகப் போட்டியில் முதலிடத்தைப் பெறுவதற்கு காரணமாக இருந்தவர்களுக்கு பாடசாலையின் அதிபர் ஏ.சி.ஹாமிது தமது நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார்.

இம்மாணவிகளுக்கு பயிற்சி வழங்கிய ஜெம்ஸித் ஹஸன், கலாசார குழு ஆசிரியர்களான உதவி அதிபர் எம்.ஏ.ஜெஸீர் அலி (தலைவர்), திருமதி எஸ்.ஆர்.எம். பாஸில், எம்.ஐ.எம்.அஸ்ஹர், எம்.ஐ.மாஜித், திருமதி கமருன் நிஸா அஹமட், எம்.ரி. அலி சப்ரி, செல்வி எம்.ஆர்.எப்.றஸ்னா, சித்திர வேலைகளை செய்த சித்திரப் பாட ஆசிரியர்களான திருமதி பி.எம்.எஸ்.ஜெஸீலா, திருமதி றஸீன், திருமதி எம்.எஸ்.நஸ்லூன் சித்தரா, இணைப் பாடவிதானத்திற்கு பொறுப்பான உதவி அதிபர் எஸ்.எம்.ஹனிபா, பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள் மற்றும் ஏனைய உதவிகளை வழங்கியோருக்கும் அதிபர் தமது நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டார். அத்தோடு இம்மாணவிகளை வலய மட்டப் போட்டிகளுக்கு தயார்படுத்திய பாடசாலையின் முன்னாள் அதிபர் எம்.எரி. நௌபல் அலிக்கும் அதிபர் ஏ.சி. ஹாமிது தமது நன்றிகளை தெரிவித்துள்ளார்.

## அக்கரைப்பற்று கடற்கரை பிரதேசத்தை சுத்தம் செய்து அழகுபடுத்தும் 'சன்ரைஸ்' விளையாட்டுக்கழகத்தினர்

(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

அக்கரைப்பற்று கடற்கரைப் பிரதேசத்தை சுத்தம் செய்து அழகுபடுத்தும் பணியில் கடந்த 2013 ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக ஈடுபட்டு வரும் அக்கரைப்பற்று 'சன்ரைஸ்' விளையாட்டுக்கழகத்தினர் கடந்த சனிக்கிழமை இந்தப்பணியில் மிக உற்சாகமாக ஈடுபட்டனர்.

மாதத்தின் முதலாவது சனிக்கிழமைகளில் இந்தப்பணியில் ஈடுபட்டு வரும் சன்ரைஸ் கழகத்தினரின் கடற்கரையை சுத்திகரிக்கும் பணியில் பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டானர் .குறிப்பாக ஓய்வு நிலை உத்தியோகஸ்தர்கள் ஒழுங்காக இந்த சுத்திகரிப்பு பணிகளில் மிக உற்சாகமாக ஈடுபட்டுவருகின்றனர். கடற்கரைச் சூழலில் காணப்படும் கழிவுகளையும் வெற்றுப்போத்தல்கள், பிளாஸ்டிக் கழிவுகள் போன்றவைகளையும் அங்கிருந்து அகற்றி துப்புரவு செய்தனர்.

சன்ரைஸ் கழகத் தலைவர் எம்.எச். ஜெயினுதீன், பொதுமக்களே. பொறுப்பற்ற செயல்களை இனிமேலாவது செய்ய வேண்டாமெனவும் "இது நமது கடற்கரை. இதனைப்பாதுகாப்பது எமது பொறுப்பும் கடமையுமென்றும் பொதுமக்களை வேண்டினார். இது எமது கடற்கரை .என்ற உணர்வு எம்மத்தியில் எப்போதும் இருக்கவேண்டும். நாம் இதனைப்பாதுகாப்பதற்கு உதவமுடியாவிட்டாலும் இதனை மோசமான நிலைக்கு தள்ள வேண்டாம். எனவும் மிகவும் வினயமாக வேண்டியுள்ளார். தமது பிள்ளைகள், உறவினர்கள், சுற்றத்தார் மற்றும் நண்பர்களுக்கு இது தொடர்பாக அறிவுறுத்துவது எமது பொறுப்பாகும் என்பதையும் அவர் இங்கு வலியுறுத்தினார்.

கடந்த பதினொரு வருடங்களாக இப்பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இந்தப்பணிக்கு அக்கரைப்பற்றிலுள்ள பொது அமைப்புகளும் தொண் டர்களும் உதவி வருவதாக சன்ரைஸ் கழகத்தினர் தெரிவிக்கின்றனர். சுற்றாடல் அதிகாரிகள் ஓய்வு நிலை அரச உத்தியோகஸ்தர்களும் விசேடமாக முழு மூச்சாக ஈடுபட்டனர். அக்கரைப்பற்று மாநகர சபை கழிவுகள் கொண்டு செல்லும் வாகனங்கள் கழிவுகளை துப்புரவு செய்யும் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.

சாய்ந்தமருது – மாளிகைக்காடு

## ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் புனித முஹர்ரம் புது வருட நிகழ்வு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

முஹர்ரம் 1446 ஆம் ஆண்டு புதுவருடத்தை சிறப்பித்து வரவேற்கும் முகமாக சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் சிறப்பு பயான் நிகழ்வொன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை (08) இரவு ஏற்பாடு செய்யப்பட்டது.

சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் தலைவர் ஏ. ஹிபத்துல் கரீம் தலைமையில், ஓய்வு பெற்ற ஆசிரியரும், பொறுப்புதாரியுமான மௌலவி எம்.எஸ்.எம் நுஃமான் (நளீமி) யின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந் நிகழ்வில், சம்மாந்துறை சூறா கவுன்சில் தலைவரும் முன்னாள் சிரேஷ்ட நிர்வாக அதிகாரி (SLAS) யுமான அஷ்ஷேக் எம்.ஐ. எம். அமீர் (நளீமி) விசேட பேச்சாளராகக் கலந்து கொண்டார்.

சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் செயலாளர் மற்றும் பொருளாளர், அதன் பொறுப்புதாரிகள் உட்பட உலமாக்கள், வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் ஜமாஅத்தார்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

## நினைவுப் பேருரை

மறைந்த ஈரானிய ஜனாதிபதி அல்ஹாஹித் செய்யீத் இப்ராஹிம் றைசி குறித்த நினைவு பேருரை நிகழ்ச்சி எதிர்வரும் 13.07.2024 மாலை 3 மணிக்கு அக்கரைப்பற்றில் நடைபெறவுள்ளது. சுதந்திர ஊடக கண்காணிப்பு மையம் ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வு அத்தாவுல்ல அரங்கில் நடைபெறவுள்ளது.

இதில் பாலஸ்தீன மக்களுக்கான துஆ பிரார்த்தனையும் இடம்பெறவுள்ளது. மேற்படி நிகழ்வினில் பல்கலைப் பிரமுகர்கள் அரசியல் தலைவர்கள் கல்வியாளர்கள் ஊடகவியலாளர் மற்றும் கலை இலக்கிய பிரமுகர்கள் பலரும் சிறப்புரை நிகழ்த்தவுள்ளனர் எனத் ஏற்பாட்டாளர் இப்றான்சா பௌறுதீன் தெரிவிக்கிறார்.

# நகர்வலம்



## நாடு பொருளாதார ரீதியாக முன்னேறுகையில் நாட்டை சீர்குலைக்க சிலர் முயற்சிக்கின்றனர்

### அரசாங்கத்தை நெருக்கடிக்குள் தள்ளும் இச்செயற்பாட்டை ஏற்க முடியாது – அமைச்சர் கஞ்சன விஜேசேகர

**(வெலிகம தினகரன் நிருபர்)**

நாடு பொருளாதார ரீதியாக முன்னேறும் போது சிலர் தொழிற்சங்கங்கள் என்ற போர்வையில் நாட்டை சீர்குலைக்க முயற்சிக்கின்றனர். தேர்தலுக்கு தயாராகும் இந்த நேரத்தில் நிறைவேற்ற முடியாத கோரிக்கையை முன்வைத்து அரசாங்கத்தை நெருக்கடிக்குள் தள்ளும் சூழ்ச்சியே மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென மின் வலு மற்றும் எரி சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தெனியாய மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில், கடந்த காலங்களில் மிகவும் கடினமான தீர்மானங்களை மேற்கொண்டோம். வற்வரியை அதிகரித்தோம். மின்சாரக் கட்டணத்தை அதிகரித்தோம். இவை அனைத்தும் மக்களைக் துன்பத்துக்குள் தள்ளுவதற்காக நாம் இந்த தீர்மானங்களை மேற்கொள்ளவில்லை. மாறாக கடந்தகால அரசாங்கங்கள் தமது அரசியல் இலாபத்துக்காக



தீர்மானங்களை மேற்கொள்ளாமல் சரியான தீர்மானங்களை மேற்கொண்டிருந்தால் இந்த நிலைமை எமக்கே ஏற்பட்டிருக்காது.

அரச ஊழியர்களுக்கு சம்பள பிரச்சினை இருக்கிறது என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். இருப்பினும் தேர்தல் நேரத்தில் நிறைவேற்ற முடியாத கோரிக்கை ஒன்றை முன்வைத்து அரசாங்கத்தை நெருக்கடிக்குள் தள்ளுவது இத் தருணத்தில் பொருத்தமானதல்ல.

இக்கட்டான நிலையில் கூட 54 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கினோம். குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கினோம். அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரித்தோம். பலவேறு அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்தோம். வீதி அபிவிருத்தி பணிகளுக்கு நிதி ஒதுக்கினோம், இவைகளை சிந்தித்து அனைவரும் சரியான தீர்மானத்தை எடுக்க வேண்டும். நாட்டுக்காக அனைவரும் ஒன்றிணைந்து பயணிக்க முன்வருமாறும் அவர் சகலருக்கும் அழைப்பு விடுத்தார்.

## களுத்துறை மத்திய, மகளிர் கல்லூரிகளில் அடிக்கல் நடும் நிகழ்வு

### பிரதம அதிதிகளாக அமைச்சர் அலிசப்ரி, ஆளுநர் ரொஷான் பங்கேற்பு



**(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)**

களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி மற்றும் முஸ்லிம் மகளிர் கல்லூரியின் நீண்டகால பௌதீக வள குறைபாடுகளை நிவர்த்திக்கும் நோக்கில் இப்பாடசாலைகளுக்கு மூன்றுமாடி கட்டட தொகுதிகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. இதற்கான அடிக்கல் நாட்டு விழா இன்று (10) புதன்கிழமை பாடசாலை வளாகத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் வெளிநாட்டமைச்சர் அலி சப்ரி, மேல் மாகாண ஆளுநர் ரொஷான் குணதிலக ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொள்கின்றனர். கடந்த ஏப்ரல் மாதம் அமைச்சர் அலி சப்ரி, மேல்மாகாண ஆளுநர் ஏயார் மாரஷல் ரொஷான் குணதிலகவுடன் மேற்படி இரண்டு பாடசாலைகளுக்கும் கள விஜயம் மேற்கொண்டு பாடசாலைகளின் குறைபாடுகள் தொடர்பில் பாடசாலை சமூகத்துடன் கேட்டறிந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இன்றைய நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், பழைய மாணவிகள் சங்கம் உறுப்பினர்கள் உள்ளிட்ட பிரமுகர்கள் பலரும் நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இ.ஒ.கூ தாபன முஸ்லிம் சேவை ஏற்பாட்டில் முஹர்ரம் விழா





**கொழும்பு கோட்டை நிருபர், ருஸைக் பாரூக்**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவை ஏற்பாடு செய்திருந்த இஸ்லாமிய புதுவருடமான (முஹர்ரம்) ஹிஜ்ரி 1446 விசேட நிகழ்வு கூட்டுத்தாபனத்தின் ஆனந்த சமரக்கோன் கலையரங்கத்தில் முஸ்லிம் சேவை பணிப்பாளர் எம்.ஜே.எப். றினூஸியா தலைமையில் திங்கட்கிழமை (09) காலை வெகுசிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தலைவர் ஹட்சன் சமரசிங்க பிரதம அதிதியாக கலந்து கொண்டார். சிரேஷ்ட ஊடகவியலாளர் ஜயரஞ்சன் யோகராஜன் கௌரவ அதிதியாக கலந்து கொண்டார்.

கொள்ளுப்பிட்டி பள்ளிவாசல் இமாம் அஷ்ஷெய்க் காரி சயீட் ஜம்சித் லுத்துபான் கிராஅத் ஓதி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். வரவேற்புரையை இ.ஒ.கூட்டுத்தாபன முஸ்லிம் சேவை பணிப்பாளர் எம்.ஜே.எப்.றினூஸியாவும் முஹர்ரம் குறித்து விசேட உரையை அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா செயலாளர் அஷ்ஷெய்க் அர்கம் நூராமிதும் நிகழ்த்தினர்.

கொழும்பு டி.எஸ்.சேனாநாயக்க கல்லூரி மாணவர்களின் கலாசார நிகழ்வும் இடம்பெற்றது. இ. ஒ. கூட்டுத்தாபனத்திற்கு கணினி ஒன்றை முஸ்லிம் சேவை ஆலோசகர் முஸ்லிம் ஸலாஹுத்தீன் வழங்கினார்.

இதனை அவரது மகன் மூஷான் சலாஹுதீன் வழங்கி வைத்தார்.

இ.ஒ.கூ தயாரிப்பாளராக இருந்து அண்மையில் காலஞ்சென்ற மர்ஹூம் மஃரூப் முஹைதீன் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தாருக்கு ஞாபகார்த்த சின்னமும் நிதி நன்கொடையும் வழங்கப்பட்டது.

## ஐ.தே.கவின் தமிழ் ஊடக பிரிவு ஆரம்பம்



ஐ.தே.க தமிழ் பிரிவுக்கான ஊடக செயல் திட்டமொன்று இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் சுப்பையா ஆனந்தகுமார் ஏற்பாட்டில் ஐ.தே.க பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டாரவின் தலைமையில் ஐ.தே.க தலைமையகமான சிறிகொத்தவில் (08) ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்பின் அவர்கள் கூட்டாக எடுத்துக்கொண்ட படம்.

## கால்வாயில் சிதைந்த நிலையில் சடலம் மீட்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

கலாவெவ தேசிய வனப்பகுதியிலுள்ள கால்வாய் ஒன்றில் மர்மமான முறையில் உயிரிழந்து சிதைந்த நிலையிலிருந்த ஆண் ஒருவரின் சடலம் ஒன்றை கல்கிரியாகம பொலிஸார் (06) கண்டுபிடித்துள்ளனர். கல்கிரியாகம பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கலாவெவ தேசிய வனப்பகுதிக்குட்பட்ட பலமூவெவ கல்கொடவல பகுதியில் கால்வாயில் மிதந்து இருந்த போது சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த சடலம் மிகவும் உருக்குலைந்த நிலையில் இருந்ததுடன் கை மற்றும் காலின் ஒரு பகுதியை காட்டு விலங்குகள் சேதப்படுத்தி இருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்துள்ள நபர் தொடர்பில் இது வரைக்கும் எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லை எனவும் இது இயற்கை மரணமா அல்லது கொலையா என்பது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## விமானப்படை வீரர்களின் சாதனைகளை உள்ளடக்கிய விமானப்படை வர்ண இரவு

விமானப்படை விளையாட்டு வீரர்களின் சாதனைகளை பாராட்டும் வகையில் விமானப்படை விளையாட்டு கவுன்சிலினால் ஏற்பாடு செய்திருந்த விமானப்படை விளையாட்டு வர்ண இரவு கடந்த 05ஆம் திகதியன்று இரத்மலானை விமானப்படை ஈகிள் லேக்சைட் விழா மண்டபத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) கமல் குணரத்ன பங்கேற்பில் இடம்பெற்றது.

விமானப்படை விளையாட்டு வீரர்களின் சாதனைகள் மற்றும் விளையாட்டுத் துறையில் ஈடுபட்டுள்ள அனைத்து பங்குதாரர்களின் அர்ப்பணிப்பையும் பாராட்டுவதற்கான ஒரு சிறப்பு சந்தர்ப்பமாக இந்த விமானப்படை விளையாட்டு வர்ண இரவு அமைகின்றது. இந்த வர்ண இரவு நிகழ்வானது முதல் முதலாக 1964 இல் ராயல் சிலோன் விமானப்படையால் 1962 மற்றும் 1963ம் ஆண்டுகளை அடிப்படை ஆண்டுகளாக கொண்டு இந்த நிகழ்வானது நடத்தப்பட்டது.

இதன்போது சீனவராய விமானப்படை அகடமியில் விமான விபத்தில்



உயிரிழந்த ஃப்ளைட் லெப்டினன்ட் அப்பாப்பிள்ளை வரதராசாவை நினைவுகூரும் வகையில் இந்த ஆண்டின் சிறந்த வீரருக்கான விருது வழங்கப்படுவதுடன், அதற்கு வரதராசா நினைவு கோப்பை என பெயரிடப்பட்டுள்ளது.

இதன்படி, வரதராசா நினைவுக் கிண்ணத்தை வென்ற முதலாவது சிறந்த விமானப்படை வீராங்கனையாக பிளைட் சார்ஜன்ட் பேர்ட்டி ஏகநாயக்க மற்றும் விமானப்படை நிறங்களைப் பெற்ற முதல் விமானப்படை வீராங்கனையாக துப்பாக்கிச் சுடுதல் விளையாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்திய சிரேஷ்ட வான்படை வீராங்கனை ஹதுன்சூரியா ஆகியோர் விமானப்படையின் விளையாட்டு வரலாற்று நாட்குறிப்பில் தங்கள் பெயர்களை நிலைநிறுத்திக்கொண்டனர்.

விமானப்படை தளபதி எயார் மார்ஷல் எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷவின் வழிகாட்டலின் கீழ் இலங்கை விமானப்படை விளையாட்டு வர்ண வரலாற்றில் விளையாட்டு வீர, வீராங்கனைகளை ஊக்குவிக்கும் நோக்கில் இலங்கை விமானப்படை வரலாற்றில் முதல் தடவையாக 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் திறமைகளை வெளிப்படுத்திய விளையாட்டு வீரர்களுக்கு பணப்பரிசுகளும் இதன்போது வழங்கப்பட்டன.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஏற்பாடு செய்யப்படும், விமானப்படை விளையாட்டு வர்ண இரவில் 37 விளையாட்டுகளை மதிப்பீடு செய்வதுடன் இம்முறை 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பங்குபற்றி திறமைகளை வெளிப்படுத்திய விமானப் படை வீர, வீராங்கனைகள் 355 பேருக்கு 555 வர்ணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் விமானப்படை தளபதி, விமானப்படை பதவிநிலை பிரதானி மற்றும் பணிப்பாளர்கள் அதிகாரிகள் வீர, வீராங்கனைகள் கலந்துகொண்டனர்.

## 'தூண்டில்கள் துடிக்கின்றன' கவிதை நூல் வெளியீட்டு விழா



கம்மல்துறை கவிஞர்களின் 100 கவிதைகள் தொகுக்கப்பட்ட "தூண்டில்கள் துடிக்கின்றன" கவிதை நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9:30 மணிக்கு கம்மல்துறை அல்பலாஹ் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

'கவிஞர் போருத்தொட்ட ரிஸ்மி அரங்கத்தில்' நடைபெறும் இவ்விழாவுக்கு பலகத்துறை கலை இலக்கிய வட்டத்தின் தலைவர் கலாபூஷணம் எம். ஜே. எம். தாஜுதீன் தலைமை வகிப்பார்.

விழாவில் முன்னாள் தேர்தல் ஆணையாளர் நாயகம் எம். எம். மொஹமட் (நளீமி) பிரதம அதிதியாகவும் தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர் விசேட அதிதியாகவும் கலந்து சிறப்பிப்பர்.

சிறப்பு அதிதிகளாக பன்னூல் ஆசிரியர் கவிஞர், ஒலிபரப்பாளர் அஷ்ரப் சிஹாப்தீன், வலம்புரி கவிதா வட்டத்தின் தலைவர் கலாபூஷணம், கவிமணி என். நஜ்முல் ஹுசைன், சிரேஷ்ட ஊடகவியலாளரும் லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தமிழ் வெளியீடுகளுக்கான முன்னாள் ஆலோசகருமான 'ஈழத்து நூன்' கலாபூஷணம் எம். ஏ. எம். நிலாம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

கம்மல்துறை அல் பலாஹ் கல்லூரியின் அதிபர் எம். யு. பாயிஸ் (நளீமி) மற்றும் பலகத்துறை பெரிய பள்ளிவாசல் தலைவர் எம் முஹம்மத் ஆகியோர் கௌரவ அதிதிகளாகக் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நூலின் முதற் பிரதியை முன்னாள் தேர்தல் ஆணையாளர் நாயகம் எம். எம். மொஹமட் (நளீமி) பெற்றுக் கொள்வார்.

கம்மல்துறை இக்பால் தலைமையில் நடைபெறும் கவியரங்கில் பலகத்துறை இளம் கவிஞர்கள் கலந்து கொள்கின்றனர். கவிஞர்களுக்கு 'தமிழ் ஆசான் ஜெலீல் அதிபர் விருது' வழங்கும் நிகழ்வு கலைஞர் எம்.ஜே.எம். சாதிக் தலைமையில் நடைபெறும்.



வட மத்திய மாகாண சுகாதார பயிற்சி மத்திய நிலையத்தின் உத்தியோகபூர்வ இணையதளம் சுகாதார அமைச்சின் செயலாளர் டொக்டர் பாலித மஹீபால தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. அநுராதபுரத்திலுள்ள வட மத்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அசேல குணவர்தன உட்பட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டிருப்பதையும் படத்தில் காணலாம்.

## பொரளை அஹதிய்யாவின் முஹர்ரம் புதுவருட நிகழ்வும் பரிசளிப்பும்

**ருஸைக் பாரூக்**

பொரளை அஹதிய்யாவின் ஏற்பாட்டில் இஸ்லாமிய புதுவருடமான முஹர்ரம் விசேட நிகழ்வு தெமட்டகொடை எம்.ஐ.சி.எச் பாஷா விழாவில் வெகு சிறப்பாக நடைபெற்றது. பொரளை அஹதிய்யா மற்றும் இஸ்லாமிய கல்வி நிலைய அதிபர் ஷிப்லி ஹாசிம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.பௌஸியும் மத்திய கொழும்பு ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் கித்ஸ்ரீ ராஜபக்ஷ உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

அஹதியா பாடசாலை அதிபர் ஷிப்லி ஹாசிம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவை முன்னாள் பணிப்பாளர் அஹ்மத் முனவ்வர் மற்றும் மௌலவி எம். எம்.எம்.மபாஸ் ஆகியோர் உரையாற்றினர்.

அஹதியா மாணவர்கள், புத்திஜீவிகள், உலமாக்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர். மௌலூத், சலவாத் என்பன ஓதப்பட்டதோடு அஹதிய்யா மாணவர்களின் கலாசார நிகழ்வும் இடம்பெற்றன.

மாணவர்களுக்கிடையே நடைபெற்ற போட்டி நிகழ்வுகளில் கலந்து கொண்டு வெற்றிபெற்ற மாணவர்களுக்கு இலவச பாடசாலை சீருடையும் அப்பியாசப் புத்தகங்களும் அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டன.



# வட மாகாணத்தை சேர்ந்த கல்விமாணி பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்

கரவெட்டி தினகரன் நிருபர்



வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த கல்விமாணி பட்டதாரிகள் 13 பேருக்கு நேற்றுமுன்தினம் ஆசிரியர் நியமனம் வழங்கி வைக்கப் பட்டது.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் வடமாகாண ஆளுநரின் பங்கேற்புடன் இந்நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது உரையாற்றிய வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், தாம் கற்றுக்கொண்ட நுட்பங்களை பாடசாலைகளில் பயன்படுத்தி கற்பித்தல் செயற்பாடுகளில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

அதனூடாக கல்வித் தரத்தை பேணுவதுடன், மாணவர்கள் இலகுவாக கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்.

மாணவர்கள் பாடசாலைக்கு விரும்பி வருகை தரும் வகையில் வகுப்பறைகள் மாற்றப்பட வேண்டும். அதேவேளை, மாணவர்களின் முன்மாதிரிகளாக ஆசிரியர்கள் திகழ வேண்டுமென ஆளுநர் தெரிவித்தார்.

# தென்மராட்சி மக்களுடைய எதிர்பார்ப்புகளை புதிய வைத்திய அத்தியட்சகர் நிறைவேற்றுவார்

## யாழ் .மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கேதீஸ்வரன்

சாவகச்சேரி விசேட நிருபர்



தென்மராட்சி மக்களுடைய எதிர்பார்ப்புகளை அறிந்து அதனை நிறைவேற்றுபவராக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் புதிய பதில் வைத்திய அத்தியட்சகர் ரஜீவ் இருப்பார் என யாழ் . மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகராக வைத்தியர் ரஜீவ் நேற்று தமது கடமைகளை பொறுப்பேற்றிருந்தார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகராக வைத்தியர் ரஜீவ் மத்திய சுகாதார அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்டு தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். அவருக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

வைத்திய அத்தியட்சகர் ரஜீவ் தொடர்ந்து வைத்தியசாலையின் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து செல்வார். பிரதேச மக்கள் இவ் வைத்தியசாலை மீது கொண்டுள்ள எதிர்பார்ப்புக்களை நாம் அறிவோம். அந்த எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் விதமாக வைத்தியர் ரஜீவ் தனது கடமைகளைச் செய்வார்.

யாழ்ப்பாணம் தென்மராட்சி மக்கள் மாத்திரமின்றி கிளிநொச்சி மாவட்டத்தின் ஒரு பகுதி மக்களும் இவ்வைத்தியசாலை ஊடாக பயனடைகின்றனர்.

வைத்தியசாலையை முன் கொண்டு செல்ல பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, மாகாண சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் மத்திய சுகாதார அமைச்சு ஊடாக தேவையான ஒத்துழைப்புக்களை வழங்க தயாராகவிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# வடமாகாணத்தில் புதிய தொழிற்பயிற்சி கற்கைநெறிகள் ஆரம்பம்

கோப்பாய் குறூப் நிருபர்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையினால் பாடசாலையை விட்டு விலகியவர்கள், மேற்படிப்பைத் தொடர முடியாதவர்கள் மற்றும் வேலைவாய்ப்பின்றி

இருப்பவர்களுக்கு தொழில் வாய்பை வழங்குவதை அடிப்படையாகக் கொண்டு தொழிற்பயிற்சி கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் கைதடி, காரைநகர், வல்வெட்டித்துறை, பண்டத்தரிப்பு, சுன்னாகம், யாழ்ப்பாணம் ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை, பூநகரி, பளை, பழைய கச்சேரி, கிளிநொச்சி ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களிலும் தேசிய தொழில் தகைமை மட்டம் 4 சான்றிதழ்களுக்கான பயிற்சிநெறிகள் நடைபெறுகின்றன.

கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட அலுவலகம், 4 ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம், இல. 12, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். அல்லது மாவட்ட அலுவலகம், 155 ஆம் கட்டை, கிளிநொச்சி ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களில் மேற்கொள்ளலாம். மேலதிக விவரங்களுக்கு 0212227949, 071 0318737, 0776139307 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# உதைபந்தாட்ட சுற்று போட்டி

கரவெட்டி தினகரன் நிருபர்

வடமாராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்று போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமையும் திங்கட்கிழமையும் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றன.

16 வயது ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலையும் கட்டைக்காடு றோ.க பாடசாலையும் மோதின.

இதில் ஆட்ட நேரம் முழுவதும் ஆதிக்கம் செலுத்திய கொற்றாவத்தை அணி 3:0 என்ற அடிப்படையில் வெற்றிப் பெற்று சம்பியனாகியது.

இதில் மூன்றாமிடத்தை தேவரையாளி இந்துக்கல்லூரி அணி பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கின் உதயம்

# மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் கொடியேற்றம்

யாழ். விசேட நிருபர்



வரலாற்றுச்சிறப்பு மிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் கொடியேற்றத் திருவிழா நாளைமறுதினம் ஆரம்பமாகி தொடர்ந்து 25 நாட்கள் நடைபெறவுள்ளன.

காம்யோற்சவப் பெருவிழா நாட்களில் 15 ஆம் திகதி திங்கட்கிழமை நடனத்திருவிழாவும், 20 ஆம் திகதி சனிக்கிழமை மாலை மஞ்சத் திருவிழாவும், 25 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை கைலாச வாகனத் திருவிழாவும் ஆகஸ்ட் முதலாம் திகதி வியாழக்கிழமை நண்பகல் வேட்டைத் திருவிழாவும் ஆகஸ்ட் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பரத் திருவிழாவும் ஆகஸ்ட் 3 ஆம் திகதி காலை 7 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 4 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு கீரிமலை கண்டகி தீர்த்தத்தில் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறுமென மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் ஆதீனகர்த்தாவும் பிரதம குருவுமாகிய மஹாராஜஸ்ரீ து.ஷ.இரத்தின சபாபதிக்குருக்கள் அறிவித்துள்ளார்.

# வேம்படி கந்தசுவாமி கோயில் கொடியேற்றம் இன்று

சாவகச்சேரி மட்டுவில் அம்பலந்துறை வேம்படி கந்தசுவாமி திருக்கோவில் வருடாந்த மகோற்சவப் பெருவிழா இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளன.

வருடாந்த உற்சவத்தில் 18 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வேட்டைத்திருவிழாவும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு சப்பறத்திருவிழாவும் 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.45 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்த திருவிழாவும் மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு பூங்காவனத்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு வைரவர் சாந்தியும் இடம்பெறவுள்ளன.

மஹோற்சவ பிரதம குரு சிவஸ்ரீ முத்து பாஸ்கர ரவிக்குருக்கள், ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சிதம்பர தியாகராஜக்குருக்கள் ,ஆலய குரு பிரம்மஸ்ரீ பா.வேதாரணிய சர்மா ஆகியோர் பெருவிழாவை நடத்தி வைப்பார்கள்.

## சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை

# பதில் வைத்திய அத்தியட்சகராக டொக்டர் கோபாலமூர்த்தி ரஜீவ் நியமனம்

சாவகச்சேரி விசேட நிருபர்



சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் புதிய பதில் வைத்திய அத்தியட்சகராக வைத்தியர் கோபாலமூர்த்தி ரஜீவ் நேற்று தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுகொண்டார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகராக வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா கடந்த 25 தினங்களாக கடமையாற்றி வந்தார். எனினும் வைத்தியர்களுக்கும் பதில் அத்தியட்சகருக்குமிடையில் ஏற்பட்ட இணக்கப்பாடு இன்மை காரணமாக வைத்தியர் அர்ச்சுனா நேற்றுமுன்தினம் கொழும்பிற்கு அழைக்கப்பட்டிருந்தார்.

அதனைத் தொடர்ந்து மத்திய சுகாதார அமைச்சின் செயலாளரால் பதில் வைத்திய அத்தியட்சகராக வைத்தியர் ரஜீவ் நியமிக்கப்பட்டுள்ளார். பொறுப்பேற்பு நிகழ்வில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சமன் பத்திரன ,பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கேதீஸ்வரன், மதகுருமார்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# வவுனியா பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தர் பதவியேற்பு

வவுனியா விசேட நிருபர்



வவுனியா பல்கலைக்கழகத்தின் இரண்டாவது துணைவேந்தராக பேராசிரியர் அருளம்பலம் அற்புதராஜா நேற்று கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

வவுனியா பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் உட்பட பல்கலைக்கழக கல்விசார் உத்தியோகத்தர்கள் புடைசூழ மங்கள வாத்திய இசையோடு அழைத்துவரப்பட்ட புதிய துணைவேந்தர் அருளம்பலம் அற்புதராஜா ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட நியமனக் கடிதத்தை கையொப்பமிட்டு பெற்றுக் கொண்டிருந்தார்.

வவுனியா பல்கலைக்கழகத்தின் பதிவாளர் நடராஜா ராஜவிசாகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பல்கலைக்கழகத்தின் வேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் தம்பு மங்களேஸ்வரன் உட்பட பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், கல்விசார்ந்த ஊழியர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மரண சடங்குக்கு சென்று வீடு திரும்பியவர் விபத்தில் உயிரிழப்பு

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணத்தில் மரண சடங்கில் கலந்து கொண்டு, வீடு திரும்பிக் கொண்டிருந்தவர் விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

வடமராட்சி அல்வாய் கிழக்கை சேர்ந்த சுப்பிரமணியம் சிவபாதசுந்தரம் (வயது 79) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை பகுதியில் கடந்த 05ஆம் திகதி தனது மைத்துனரின் மரண சடங்கில் கலந்து கொண்டு, தகன கிரியைக்காக சூப்பர் மட மயானத்திற்கு சென்று விட்டு மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பும் போதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்தவரை அங்கிருந்தவர்கள் மீட்டு , பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்ததுடன் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும் அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# யாழில் வன்முறை கும்பல் அட்டகாசம்



யாழ் விசேட நிருபர்

யாழ்ப்பாணத்திலுள்ள மரக்காளை ஒன்றின் உரிமையாளரின் வீட்டினுள் அத்துமீறி நுழைந்த வன்முறை கும்பல், வீட்டின் மீது தாக்குதல் மேற்கொண்டு சொத்துக்களுக்கு சேதம் விளைவித்ததுடன், அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களுக்கும் தீ வைத்துள்ளது.

ஓட்டுமடம் பகுதியிலுள்ள மரக்காளை ஒன்றின் உரிமையாளரின் வீட்டிலேயே நேற்று அதிகாலை அத்துமீறி நுழைந்த கும்பல் தாக்குதல் மேற்கொண்டுள்ளது.

சம்பவம் தொடர்பில், யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

உரிமையாளரின் மகன், யாழில் இயங்கிய வன்முறை கும்பலுடன் தொடர்பில் இருந்தவர் எனவும் தற்போது பிரான்ஸ் நாட்டில் தஞ்சமடைந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

# Junior Super Singer யாழ் மருதனார்மடத்தில் 13ஆம் திகதி குரல் தேர்வு

C J Pramoters & Dhedjassam Event Solutions அமைப்பு வடமாகாணத்தில் ஜூனியர் சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியொன்றை நடத்தவுள்ளது.

இந்தப் போட்டி முதலில் மாவட்ட ரீதியில் நடத்தப்பட்டு இறுதிப் போட்டி 2024 செப்டெம்பர் மாதம் 7 ஆம் திகதி நடத்தப்படும். யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய கலாசார நிலையத்தில் நடத்தப்படும். இந்த இறுதிப் போட்டியில், புகழ்பெற்ற கர்நாடக இசைப் பாடகி. டி. கே. பட்டம்மாளின் பேத்தியான நித்யஸ்ரீ மகாதேவன், தமிழ் திரைப்பட பாடகரும் விஜய் தொலைக்காட்சியில் நடைபெற்ற சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பட்டத்தை வென்றவருமான திவாகர், சுப்பர் சிங்கர் புகழ் தென்னிந்திய பின்னணிப் பாடகர் சத்தியபிரகாஷ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தப் போட்டியின் முதலாவது குரல் தேர்வு யாழ்ப்பாணம், பிரதான வீதியிலுள்ள திருமுறைக் கலாமன்றத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்தப் போட்டியின் இரண்டாவது குரல் தேர்வு யாழ்ப்பாணம், மருதனார்மடத்தில் உள்ள வடஇலங்கை சங்கீத சபை மண்டபத்தில் எதிர்வரும் ஜூலை 13ஆம், 14ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

# வல்லிபுரம் ஆழ்வார் ஆலயத்தின் பிரதம குருக்கள் காலமானார்

கரவெட்டி தினகரன் நிருபர்

யாழ்ப்பாணம் வடமராட்சியின் வரலாற்று சிறப்பு மிக்க வல்லிபுரம் ஆழ்வார் ஆலயத்தின் பிரதம குரு கணபதிசாமிக்குருக்கள் சுதர்சனக் குருக்கள் தனது 76 ஆவது வயதில் நேற்று காலை 10.00. மணியளவில் இயற்கை எய்தினார்.

இவர் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் பிரதம குருவாக இறை பணியாற்றியுள்ளார்.

யாழ்ப்பாணம் வடமராட்சி துன்னாலை மத்தி கரவெட்டியை பிறப்பிடமாகவும், சிவன் கோவிலடி, ஆவரங்காலை வதிவிடமாகவும் கொண்டவர்.

அன்னாரின் இழப்பு வல்லிபுர ஆழ்வார் பக்தர்களுக்கும், வடமராட்சி மக்களுக்கும் பேரிழப்பாகும்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் சொந்த இடமான சிவன் கோவிலடி, ஆவரங்காலில் இன்று காலை 9.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

அவரது மூன்று பிள்ளைகளும் வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் குருமார்களாக பணியாற்றிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள் குற்றச்சாட்டில் கைதான பெண் தப்பித்துச் செல்ல முயற்சி

யாழ்.விசேட நிருபர்

போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதான பெண் நீதிமன்றிலிருந்து தப்பி செல்ல முயற்சித்த போது கைதுசெய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டு , விசாரணைகளின் பின்னர் நேற்றையதினம் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்காக பொலிஸார் அழைத்து சென்றனர்.

நீதிமன்றில் தான் மலசலகூடம் செல்ல வேண்டும் என கேட்டதற்கிணங்க பொலிஸார், நீதிமன்ற வளாகத்திலுள்ள மலசல கூடத்திற்கு அழைத்து சென்ற போது அங்கிருந்து தப்பித்து, உட்பக்கத்தால் மலசல கூட கதவை மூடிவிட்டு, மலசலகூடத்தின் மேற்பகுதியிலிருந்த சிறிய ஜன்னல் ஊடாக தப்பி சென்றுள்ளார்.

நீண்ட நேரமாகியும் உள்ளே சென்ற பெண் வராத காரணத்தால் சந்தேகமடைந்த பொலிஸார் பெண்ணை அழைத்துள்ளனர். எனினும் பதில் வராமையால் கதவை உடைத்து பார்த்த போது, பெண் தப்பி சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

தப்பி சென்ற பெண்ணை கைது செய்வதற்கு பொலிஸார் தீவிர நடவடிக்கைகளை முன்னெடுத்த வேளை மீள கைது செய்யப்பட்டார்.

அதனையடுத்து கைது செய்யப்பட்ட பெண்னை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகம் ஊடாக அண்மையில் தென்மராட்சி மட்டுவில் பகுதியில் வாழ்வாதார உதவியாக விசேட தேவையுடைய குடும்பமொன்றுக்கு நல்லின ஆடு ஒன்று வழங்கி வைக்கப்பட்டது. (படம்: சாவகச்சேரி விசேட நிருபர்)

தினகரன் THINAKARAN

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

## விலைமனுக்களுக்கான அழைத்தல் (IFB)

**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

### வழங்குநர் கடன் அடிப்படையில் இலங்கை போக்குவரத்து சபையினால் நகர சேவைகளுக்காக புதிய LOW FLOOR 150 எண்ணிக்கையான பஸ்களை வழங்குவதற்கான கேள்விக்கோரல்

**பெறுகை இல.: MT/04/09/CT/547/LOT C**

1. தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் 2024.08.02 ஆம் திகதியன்று பி.ப. 4 மணி வரையும் ஒப்பந்த வழங்கலின் 50 பஸ்களையும் ஒப்பந்த வழங்கலின் ஐந்து (5) மாதங்களில் வழங்குநரின் கடன் அடிப்படையில் இபோச இன் நெடுஞ்சாலை சேவைகளுக்காக மொத்தமான 150 AC Low Floor பஸ்களை வழங்குவதற்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை, பத்தரமுல்ல, II ஆம் கட்ட ‘செத்சிரிபாய’, 7 ஆம் மாடி, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு, அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழுத் தலைவர் பெற்றுக் கொள்வார். 2024.07.10 ஆம் திகதியிலிருந்து 2024.08.01 ஆம் திகதியன்று வரையும் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டணமான 200,000 ரூபாவை செலுத்துவதன் மூலம், கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்தின் இலங்கை போக்குவரத்து சபை, பிரதான பெறுகை முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட விதிக்கப்பட்ட படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
2. (i) தகுதியுடைய விலைமனுதாரர் தனியொரு விலைமனுதாரராக, கூட்டுமுயற்சியொன்றாக அல்லது கூட்டமைப்பொன்றாக (ஆகக்கூடியது 3 அங்கத்தினர்கள்) கீழே விபரிக்கப்பட்டவாறு முதன்மையான அங்கத்தினரொருவரினால் தலைமை தாங்கிச் செல்லல்.
   - அ. தனியொரு விலைமனுதாரர் பஸ் உற்பத்தியாளரொருவரின் அல்லது உள்ளூர் முகவருடனான அல்லது முன்வைக்கப்பட்ட பஸ்களுக்கான உள்ளூர் முகவருடன் அங்கத்தினரொருவராக அல்லது பஸ் உற்பத்தியாளரொருவரிடமிருந்து பெற்ற சட்டபூர்வ அதிகாரம் பெற்றவராகவிருக்கலாம்.
   - ஆ. கூட்டுமுயற்சியொன்று அல்லது கூட்டமைப்பொன்று பஸ் உற்பத்தியாளரொருவரின் உள்ளூர் முகவரொருவரை அங்கத்தினரொருவராக அல்லது முன்வைக்கப்பட்ட பஸ்களுக்கான உள்ளூர் முகவராக இருக்கலாம்.

   (ii) விலைமனுதாரர், அவர் பஸ் உற்பத்தியாளராக இல்லாவிடின், முன்னைய அனுபவ பதிவேடுகளின் ஆதாரத்துடன் செயற்றிட்ட நிதியிடலுடன் ஆகக் குறைந்தது 5 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். செயற்றிட்டமொன்றின் கூட்டுமுயற்சியாக விலைமனுதாரர் பங்காளரொருவராக பங்குபற்றியிருப்பின், விலைமனுதாரரின் பங்களிப்பின் விகிதாசாரமானது அனுபவத்தை கோருவதற்காக முழு செயற்றிட்டத்தினதும் 20% ஆகவிருத்தல் வேண்டும்.

   (iii) முன்வைக்கப்படவுள்ள பஸ்களின் உற்பத்தியாளரானவர் - (1)தனியொரு விலைமனுதாரராக அல்லது (2) கூட்டுமுயற்சியொன்றின் அல்லது கூட்டமைப்பொன்றின் அங்கத்தினரொருவராக அல்லது (3) தனியொரு விலைமனுதாரருக்கு அல்லது கூட்டுமுயற்சியொன்றிற்கு அல்லது கூட்டமைப்பொன்றிற்கு வழங்குநராகவிருப்பின் அவர் (அ) பஸ் உற்பத்தியில்ஆகக் குறைந்தது 15 வருட அனுபவத்தை (ஆ) கடந்த 5 வருடங்களில் ஆகக் குறைந்தது 3 வருடங்களில் முன்வைக்கப்படவுள்ள பஸ்களின் வர்த்தக உரிமை பெயரில் வருடமொன்றிற்கு 1000 பஸ்களை உற்பத்தி செய்திருத்தல் (இ) உற்பத்தியாளரின் நாடு அடங்கலாக ஆகக் குறைந்தது 5 நாடுகளுக்கு பஸ்களை ஏற்றுமதி செய்திருத்தல்/விற்பனை செய்திருத்தல் (ஈ) ISO 9001, ISO 22139 மற்றும் ISO 3834 ஆகிய சர்வதேச தர சான்றிதழ்களை கொண்டிருத்தல்.

   (iv) கோரிக்கையை முன்வைக்கப்படவுள்ள பஸ்களின் உற்பத்தியாளர் பதிவு செய்யப்பட்ட உள்ளூர் முகவர் மற்றும் வேலைத்தள வசதிகள், போதுமானளவு தகைமையும் பயிற்சி பெற்ற பணியாளர் குழுவானது பஸ்களின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றை உத்தரவாத காலப்பகுதியில் உத்தரவாத பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கானவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும். மேலும் உத்தரவாத காலத்தில் உற்பத்தியாளரின் வதிவிட பொறியியலாளரொருவர் மற்றும் போதுமானளவு உதிரிப் பாகங்கள் மற்றும் சேவைகள் உள்ளூர் முகவரிடம் இருத்தல் வேண்டும்.

   (v) கடந்த 5 வருடங்களில் ஆகக் குறைந்தது 2 வருடங்களில் விலைமனுதாரரானவரின் சாதகமான தேறிய ஆதனங்கள் மற்றும் ஆதன பொறுப்பு விகிதாசாரமாக 60% இற்கு குறைவாக இருப்பதுடன் கடந்த 5 வருடங்களில் ஆகக் குறைந்தது 2 வருடங்களில் விலைமனுதாரரின் சராசரி செயற்பாட்டு மூலதனமானது 10 மில்லியன் அஜடொலர் அல்லது 3000 மில்லியன் இ.ரூபாவாகவிருத்தல் வேண்டும். விலைமனுதாரரின் வருடாந்த நிதிப்புரள்வானது USD 15 மில் மில்லியனுக்கு அல்லது 4500 மில்லியன் இ.ரூபாவிற்கு மேற்பட்டதாக கடந்த 5 வருடங்களில் ஆகக் குறைந்தது 3 வருடங்களில் இருத்தல் வேண்டும். விலைமனுதாரர் கூட்டுமுயற்சியொன்றாக அல்லது கூட்டமைப்பொன்றாகவிருப்பின், சாதகமான தேறிய ஆதனங்கள் மற்றும் ஆதன பொறுப்பு விகிதாசாரமானது 60% இற்கு குறைவாகவும் கடந்த 5 வருடங்களில் ஆகக் குறைந்தது 2 வருடங்களில் சாதகமான செயற்பாட்டு இலாபமானது சராசரி செயற்பாட்டு மூலதனமானது 10 மில்லியன் US டொலரை அல்லது 3000 மில்லியன் இலங்கை ரூபாவை கடந்த 5 வருடங்களில் ஆகக் குறைந்தது 2 வருடங்களில் மேற்பட்டதாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் வருடாந்த நிதிப்புரள்வானது 15 மில்லியனாக அல்லது 4500 மில்லியன் இலங்கை ரூபாவாக கூட்டுமுயற்சி/ கூட்டமைப்பின் பங்காளர்கள் ஒன்றாக மதிப்பீடு செய்யப்படும் போது கடந்த 5 வருடங்களில் ஆகக் குறைந்தது 2 வருடங்களிலிருத்தல் வேண்டும்.

   (vi) விலைமனுதாரர் தகுதியுடையவரென உறுதிப்படுத்துவதற்காக மேலேயுள்ள அனைத்திற்குமான ஆவணச் சான்றானது சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவர்களின் தகுதித்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக தவறும் விலைமனுதாரர்களினால் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் பரிசீலனை செய்யப்பட மாட்டாது.
3. 2024.07.19 ஆம் திகதியன்று ந.ப. 12.00 மணிக்கு கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இபோச பெறுகைப் பிரிவில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.
4. விலைமனுக்கள் 2024.12.02 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
5. விலைமனுக்கள் II ஆம் இணைப்பின் பிரகாரம் 51 மில்லியன் ரூபா பெறுமதியானதும் 2025.01.02 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதும் இபோசவினால் மேற்கொள்ளப்படும் முதலாவது எழுத்து மூலமான கோரிக்கையின் பேரில் மாற்ற முடியாததாகவும் நிபந்தனையின்றி மாற்றக்கூடியதும் இலங்கை மத்திய வங்கியினால் அல்லது இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுடன் பதிவு பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதுமான கேள்விப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் தன்மையிலுள்ள கேள்விப் பிணையொன்றுடன் இணைக்கப்படாத எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.
6. முகவரொருவராக அல்லது உபமுகவராக, பிரதிநிதியாக அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவராக எந்தவொரு விலைமனுதாரருக்காக அல்லது சார்பாக செயற்படும் ஒவ்வொரு விலைமனுதாரரும் அல்லது எந்தவொரு நபரும் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு முன்னராக 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் தேவைப்படுத்தப்படும் இலங்கை, பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் தன்னை பதிவு செய்திருத்தல் வேண்டும். விலைமனுவுடன் பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதியானது சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறான சான்றிதழின் மூலப்பிரதியை சமர்ப்பிக்கத் தவறும் விலைமனுதாரர்களின் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
7. விலைமனு ஆவணங்களின் அனைத்து பக்கங்களும் விலைமனுதாரரினால் சிற்றொப்பமிட்டு அவரது இலட்சினை பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. விலைமனுக்கள் 2024.08.02 ஆம் திகதியன்று பி.ப. 4 மணிக்கு மூடப்படும். முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் நேரடியாகவே பின்வரும் முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

   **தலைவர்,**
   **அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழு,**
   **கணக்கிடல் பிரிவு,**
   **போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு,**
   **07 ஆம் மாடி, ‘‘செத்சிரிபாய”, II ஆம் கட்டம்,**
   **பத்தரமுல்ல.**

   விலைமனுவின் ‘‘மூலப்பிரதி’’ மற்றும் “நகல்பிரதி” ஆகியவற்றை அடக்கியுள்ள முத்திரைக்குறியிடப்பட்ட தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில்’’ **“Bid for Supply of 150 nos. New AC Low Floor Buses Forcity Services by the SLTB on Supplier’s Credit Basis"** என குறிப்பிடப்படல் வேண்டும்
9. விலைமனுக்கள் அவைகளை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கணக்கிடல் பிரிவில் மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

   **தலைவர்,**
   **அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழு,**
   **போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு,**
   **07 ஆம் மாடி, ‘‘செத்சிரிபாய”, II ஆம் கட்டம்,**
   **பத்தரமுல்ல.**

   மேலதிக விபரங்கள் மற்றும் விலைமனு ஆவணங்களை இலவசமாக பரீட்சித்தல் ஆகியவற்றிற்காக, தயவு செய்து பின்வருபவருடன் தொடர்பு கொள்ளவும்.

   **பிரதான பெறுகை முகாமையாளர்,**
   **பெறுகைப் பிரிவு,**
   **இலங்கை போக்குவரத்து சபை,**
   **200, கிருள வீதி, கொழும்பு-05.**
   **தொலைபேசி: 011 7706110, 0771056204 தொலைபேசி/தொலைநகல்: 011 2588457**

## விலைமனுக்களுக்கான அழைத்தல் (IFB)

**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

### வழங்குநர் கடன் அடிப்படையில் இலங்கை போக்குவரத்து சபையினால் நெடுஞ்சாலை சேவைகளுக்காக புதிய டிலக்ஸ் 200 எண்ணிக்கையான பஸ்களை வழங்குவதற்கான கேள்விக்கோரல்

**பெறுகை இல.: MT/04/09/CT/547/LOT A**

1. தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் 2024.08.02 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் ஒப்பந்த வழங்கலின் மூன்று மாதங்களில் (3) 1 ஆம் தொகுதி 50 பஸ்களையும் ஒப்பந்த வழங்கலின் ஐந்து (5) மாதங்களில் வழங்குநரின் கடன் அடிப்படையில் இபோச இன் நெடுஞ்சாலை சேவைகளுக்காக மொத்தமான 200 புதிய டிலக்ஸ் பஸ்களை வழங்குவதற்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை, பத்தரமுல்ல, II ஆம் கட்ட ‘செத்சிரிபாய’, 7 ஆம் மாடி, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு, அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தை குழுத் தலைவர் பெற்றுக் கொள்வார். 2024.07.10 ஆம் திகதியிலிருந்து 2024.08.01 ஆம் திகதியன்று வரையும் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டணமான 300,000 ரூபாவை செலுத்துவதன் மூலம், கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்தின் இலங்கை போக்குவரத்து சபை, பிரதான பெறுகை முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட விதிக்கப்பட்ட படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
2. (i) தகுதியுடைய விலைமனுதாரர் தனியொரு விலைமனுதாரராக, கூட்டுமுயற்சியொன்றாக அல்லது கூட்டமைப்பொன்றாக(ஆகக் கூடியது 3 அங்கத்தினர்கள்) கீழே விபரிக்கப்பட்டவாறு முதன்மையான அங்கத்தினரொருவரினால் தலைமை தாங்கிச் செல்லல்.
   - அ. தனியொரு விலைமனுதாரர் பஸ் உற்பத்தியாளரொருவரின் அல்லது உள்ளூர் முகவருடனான அல்லது முன்வைக்கப்பட்ட பஸ்களுக்கான உள்ளூர் முகவருடன் அங்கத்தினரொருவராக அல்லது பஸ் உற்பத்தியாளரொருவரிடமிருந்து பெற்ற சட்டபூர்வ அதிகாரம் பெற்றவராகவிருக்கலாம்.
   - ஆ. கூட்டுமுயற்சியொன்று அல்லது கூட்டமைப்பொன்று பஸ் உற்பத்தியாளரொருவரின் உள்ளூர் முகவரொருவரை அங்கத்தினரொருவராக அல்லது முன்வைக்கப்பட்ட பஸ்களுக்கான உள்ளூர் முகவராக இருக்கலாம்.

   (ii) விலைமனுதாரர், அவர் பஸ் உற்பத்தியாளராக இல்லாவிடின், முன்னைய அனுபவ பதிவேடுகளில் ஆதாரத்துடன் செயற்றிட்ட நிதியிடலுடன் ஆகக் குறைந்தது 5 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். செயற்றிட்டமொன்றின் கூட்டுமுயற்சியாக விலைமனுதாரர் பங்காளரொருவராக பங்குபற்றியிருப்பின், விலைமனுதாரரின் பங்களிப்பின் விகிதாசாரமானது அனுபவத்தை கோருவதற்காக முழு செயற்றிட்டத்தினதும் 20% ஆகவிருத்தல் வேண்டும்.

   (iii) முன்வைக்கப்படவுள்ள பஸ்களின் உற்பத்தியாளரானவர் - (1)தனியொரு விலைமனுதாரராக அல்லது (2) கூட்டுமுயற்சியொன்றின் அல்லது கூட்டமைப்பொன்றின் அங்கத்தினரொருவராக அல்லது (3) தனியொரு விலைமனுதாரருக்கு அல்லது கூட்டுமுயற்சியொன்றிற்கு அல்லது கூட்டமைப்பொன்றிற்கு வழங்குநராகவிருப்பின் அவர் (அ) பஸ் உற்பத்தியில் ஆகக் குறைந்தது 15 வருட அனுபவத்தை (ஆ) கடந்த 5 வருடங்களில் ஆகக் குறைந்தது 3 வருடங்களில் முன்வைக்கப்படவுள்ள பஸ்களின் வர்த்தக உரிமை பெயரில் வருடமொன்றிற்கு 1000 பஸ்களை உற்பத்தி செய்திருத்தல் (இ) உற்பத்தியாளரின் நாடு அடங்கலாக ஆகக் குறைந்தது 5 நாடுகளுக்கு பஸ்களை ஏற்றுமதி செய்திருத்தல்/விற்பனை செய்திருத்தல் (ஈ) ISO 9001, ISO 22139 மற்றும் ISO 3834 ஆகிய சர்வதேச தர சான்றிதழ்களை கொண்டிருத்தல்.

   (iv) கோரிக்கையை முன்வைக்கப்படவுள்ள பஸ்களின் உற்பத்தியாளர் பதிவு செய்யப்பட்ட உள்ளூர் முகவர் மற்றும் வேலைத்தள வசதிகள், போதுமானளவு தகைமையும் பயிற்சி பெற்ற பணியாளர் குழுவானது பஸ்களின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றை உத்தரவாத காலப்பகுதியில் உத்தரவாத பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கானவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும். மேலும் உத்தரவாத காலத்தில் உற்பத்தியாளரின் வதிவிட பொறியியலாளரொருவர் மற்றும் போதுமானளவு உதிரிப் பாகங்கள் மற்றும் சேவைகள் உள்ளூர் முகவரிடம் இருத்தல் வேண்டும்.

   (v) கடந்த 5 வருடங்களில் ஆகக் குறைந்தது 2 வருடங்களில் விலைமனுதாரரானவரின் சாதகமான தேறிய ஆதனங்கள் மற்றும் ஆதன பொறுப்பு விகிதாசாரமாக 60% இற்கு குறைவாக இருப்பதுடன் கடந்த 5 வருடங்களில் ஆகக் குறைந்தது 2 வருடங்களில் விலைமனுதாரரின் சராசரி செயற்பாட்டு மூலதனமானது 10 மில்லியன் அஜடொலர் அல்லது 3000 மில்லியன் இ.ரூபாவாகவிருத்தல் வேண்டும். விலைமனுதாரரின் வருடாந்த நிதிப்புரள்வானது அஜடொ 20 மில்லியனுக்கு அல்லது 6000 மில்லியன் இ.ரூபாவிற்கு மேற்பட்டதாக கடந்த 5 வருடங்களில் ஆகக் குறைந்தது 3 வருடங்களில் இருத்தல் வேண்டும். விலைமனுதாரர் கூட்டுமுயற்சியொன்றாக அல்லது கூட்டமைப்பொன்றாகவிருப்பின், சாதகமான தேறிய ஆதனங்கள் மற்றும் ஆதன பொறுப்பு விகிதாசாரமானது 60% இற்கு குறைவாகவும் கடந்த 5 வருடங்களில் ஆகக் குறைந்தது 2 வருடங்களில் சாதகமான செயற்பாட்டு இலாபமானது சராசரி செயற்பாட்டு மூலதனமானது 10 மில்லியன் அஜ டொலரை அல்லது 3000 மில்லியன் இலங்கை ரூபாவை கடந்த 5 வருடங்களில் ஆகக் குறைந்தது 2 வருடங்களில் மேற்பட்டதாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் வருடாந்த நிதிப்புரள்வானது 20 மில்லியனாக அல்லது 6000 மில்லியன் இலங்கை ரூபாவாக கூட்டுமுயற்சி/ கூட்டமைப்பின் பங்காளர்கள் ஒன்றாக மதிப்பீடு செய்யப்படும் போது கடந்த 5 வருடங்களில் ஆகக் குறைந்தது 2 வருடங்களிலிருத்தல் வேண்டும்.

   (vi) விலைமனுதாரர் தகுதியுடையவரென உறுதிப்படுத்துவதற்காக மேலேயுள்ள அனைத்திற்குமான ஆவணச் சான்றானது சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவர்களின் தகுதித்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக தவறும் விலைமனுதாரர்களினால் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் பரிசீலனை செய்யப்பட மாட்டாது.
3. 2024.07.19 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கொழும்பு-05, கிருள வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இபோச பெறுகைப் பிரிவில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.
011 2 429 383 | 011 2 429 342/ 343

# நல்லுணர்வு, மொழி வேறுபாடின்றி மனித மனங்களால் நாம் ஒன்றுபடுவோம்

## முஹர்ரம் தின விழாவில் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவிப்பு

(அஷ்ரப் ஏ சமத்)

மதங்களுக்கிடையிலான நல்லுணர்வு, மொழி வேறுபாடின்றி மனித மனங்களால் நாம் ஒன்றுபடுவோம். ஒவ்வொரு மதங்களுக்கும் அவர்களது மதங்கள்படி புதுவருடங்களை அனுஷ்டிக்கின்றனர். அதேபோன்று இஸ்லாமிய மார்க்கத்தில் இன்று (08) நாம் புதுவருடத்தினை இப்பள்ளிவாசலில் அனுஷ்டிக்கின்றோம். இந்த புதுவருட தினம் பற்றி இங்கு உரையாற்றிய மௌலவி மற்றும் அகதியா மாணவர்கள் அழகாக எடுத்துக் கூறினர். அவ்வழியில் நாம் தொடர்ந்து நமது வாழ்வினை மாற்றிக் கொள்வோம் என அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்தார்.




முஸ்லிம் திணைக்களம் கிருலப்பன ஜும்ஆ மஸ்ஜிதுடன் இணைந்து ஒழுங்கு செய்த முஹர்ரம் புதுவருட நிகழ்வு 2024 கடந்த திங்கட்கிழமை (08) மாலை கொழும்பு 06 இல் அமைந்துள்ள கிருலப்பனை ஜும்ஆ மஸ்ஜிதில் நடைபெற்றது. முஸ்லிம் கலாசார திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் எம்.எச்.ஏ.எம். றிப்லான் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், புத்தசாசன மற்றும் மத விவகார அமைச்சர் விதுர விக்ரமநாயக்க பிரதம அதிதியாகவும் முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி (பா.உ) கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், திணைக்கள அதிகாரிகள் உட்பட உலமாக்கள், அரச உயர் அதிகாரிகள், கொழும்பு பள்ளிவாசல் தர்மகர்த்தாக்கள், பள்ளிவாசல் குழு உறுப்பினர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், மற்றும் ஜமாஅத்தார்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இஹ்ஸானியா அரபிக் கல்லூரி அதிபர் மௌலவி எம்.எப்.எம். பரூக் இஸ்லாமிய புதுவருடம் முஹர்ரம் பற்றி சிறப்பு உரை நிகழ்த்தினார். கொம்பனி வீதி அகதியா மாணவர்களின் கஸீதாவும் இடம் பெற்றது.



வடமத்திய மாகாண பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் நோக்கில் 234 பட்டதாரிகளுக்கும் உயர் தொழில்நுட்ப டிப்ளோமா தாரிகள் 28 பேருக்கும் புதிய ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வு மாகாண சபை கூட்ட மண்டபத்தில் ஆளுநர் மஹிபால ஹேரத் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதன் போது ஆளுநர் நியமனக்கடிதம் வழங்குவதை படத்தில் காணலாம்.

(படம்: அநுராதபுரம் மேற்கு, கல்நேவ தினகரன் நிருபர்கள்)

# மத்திய மாகாண கல்வித்திணைக்கள ஏற்பாட்டில் மாகாண இஸ்லாமிய தின விழாவும் பரிசளிப்பும்

(மாத்தளை சுழற்சி நிருபர்)

மத்திய மாகாண கல்வித் திணைக்களம் ஏற்பாடு செய்திருந்த மாகாண இஸ்லாமிய தின விழா அண்மையில் அக்குறணை பாலிகா மகளிர் கல்லூரி மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடந்தேறியது. மத்திய மாகாண முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்திப் பிரிவிற்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் உனைஸ் ஆரிப் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் எம். ஜீ. அமரசிரி பியதாச பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

மத்திய மாகாணத்தில் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் ஏ.எல். சாருடீன் மற்றும் மத்திய மாகாண கல்வி நிர்வாகத்துக்குப் பொறுப்பான முன்னாள் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி சீ.ரி.ஜி. மாயாதுன்ன ஆகியோர் கௌரவ அதிதிகளாகக் கலந்து கொண்டனர். பிரிகேடியர் திலக் மாயாதுன்ன விசேட அதிதியாகக் கலந்து கொண்டதுடன் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்



கல்விப் பணிப்பாளர்கள், வலய இணைப்பாளர்கள், மத்திய மாகாண பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் உட்பட பெருந்திரளானோர் கலந்து சிறப்பித்த இந்நிகழ்வில், 2023 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட மீலாத் தின போட்டிகளில் மாகாண மட்ட வெற்றியாளர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களும் வழங்கப்பட்டன.

மாகாண மட்ட மீலாத் போட்டிகளில் வெற்றி பெற்ற இந்து சமயத்தைச் சார்ந்த இரண்டு மாணவர்கள் விசேட பரிசு வழங்கி கௌரவிக்கப் பட்டமை விசேட நிகழ்வாகும். இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்த அதிதிகளுக்கு புனித அல்குர்ஆன் சிங்கள மொழிபெயர்ப்பு பிரதிகள் வழங்கப் பட்டமை பாராட்டத்தக்கதாகும்.

# நாட்டை பொறுப்பேற்காதிருந்திருப்பின் பாராளுமன்றத்தை எரித்த கென்யாவாக எமது நாடும் மாறியிருக்கும்

## மாத்தறையில் அமைச்சர் மனுச நாணயக்கார

ஒருமித்த அலை என்ற பெயரில் பரவிய எதிர்மறை அலைகள் தற்போது வீழ்ச்சியடைந்துள்ளன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை பொறுப்பேற்காதிருந் திருப்பின், பாராளுமன்றத்தை எரித்த கென்யாவாக இலங்கை மாறியிருக்கும்.

ஹக்மன டேனி அபேவிக்கிரம விளையாட்டரங்கில் (06) நடைபெற்ற 'ஜயகமு ஸ்ரீலங்கா' நடமாடும் சேவையின் இரண்டாம் நிகழ்வான 'ஸ்மார்ட் யூத் கிளப்' இல் கலந்து கொண்டு அமைச்சர் மனுச நாணயக்கார தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து பேசிய அமைச்சர், "நாட்டைப் பெறுபேற்றுக் கொள்ள முடியாது என்று ஒரு குழு ஓடியபோது, மற்றக் குழு பெறுபேற்று நாட்டை முன்னோக்கி கொண்டு சென்றது.

சுரங்கப்பாதையின் மூலையில் இருந்து ஒரு வெளிச்சம் தோன்றும் வரை எங்கள் மக்கள் அர்ப்பணிப்புடன் காத்திருந்தனர். இவ்வாறானதொரு நிலையில் புலம்பெயர் தொழிலாளர்களிடம் நாட்டுக்கு டொலர்களை அனுப்ப வேண்டாம் என சிலர் வேண்டிக் கொண்டனர். இன்னும் சிலர் நாட்டை வீழ்த்தச் சொன்னார்கள்.

"கொரியாவும் ஜப்பானும் முன்னோக்கி நகர்ந்ததற்கு முக்கிய காரணியாக தொழிலாளர் சக்தி இருந்தது. இன்று நாம் தொழிலாளர் உற்பத்தித் திறன் அடிப்படையில் உலகின் மிகக் குறைந்த இடத்தில் இருக்கிறோம். எங்களிடம் திறமைசாலிகள் உள்ளனர்.

நவீன தொழிற்சந்தைக்கு ஏற்றவாறு தொழிலாளர்களை நாம் தயார் செய்ய வேண்டும். அனைத்து தரப்பினரும் கல்வி முறையிலிருந்து நவீன உலகினுடன் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும்.

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள தொழிலாளர் சந்தையில் திறமையாளராக முன்னேற உங்களை நீங்கள் பலப்படுத்த வேண்டும். உங்களை பலப்படுத்த மன வலிமையும் நடைமுறை பயிற்சியும் தேவை.

இதற்காகவே, இந்த 'ஸ்மார்ட் யூத்' திட்டத்தை ஆரம்பித்துள் ளோம். இத்திட்டத்தின் மூலம் தொழில் பயிற்சி பெற விரும்புவோருக்கு ஜனாதிபதி நிதியத்தின் ஊடாக நிதியுதவியளிக்க ஜனாதிபதி முன்வந்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை பொறுப்பேற்காமல் இருந்திருந்தால் கென்யாவில் பாராளுமன்றம் எரிக்கப்பட்டதைப் போன்றதொரு நிலைமைக்கு நாடு வந்திருக்கும்.

நாட்டின் கடன் சுமை தீர்ந்துவிட்டது என்ற நற்செய்தி வந்தவுடனேயே அது விமர்சிக்கப்படுகிறது என்றார்.

# பக்தர்கள் பெருமளவில் வந்து அருளாசி பெறும் தொலஸ்பாகை தாமரவல்லி ஸ்ரீமுருகன் ஆலயம்

கண்டியில் இருந்து 50கிலோ மீட்டர் தொலைவில், கடல்மட்டத்தில் இருந்து 3.500 அடி உயரத்தில் தாமரவல்லி தேயிலைத் தோட்டம் அமைந்துள்ளது. தாமரவல்லி தேயிலைத் தோட்டத்தின் மையப்பகுதியில் அமைந்திருப்பதுதான் தொலஸ்பாகை தாமரவல்லி ஸ்ரீமுருகன் ஆலயம். இங்கே வள்ளி, தெய்வானை சமேதரராய் எழுந்தருளி அருள் பாலிப்பவர் புஷ்பஸ்கந்தன் என்றழைக்கப்படும் ஸ்ரீமுருகன். விநாயகரும், அம்மனும் இங்கு எழுந்தருளியிருக்கின்றார்கள்.

1948 ஆம் ஆண்டு இலங்கை பிரித்தானியரிடம் இருந்து சுதந்திரத்தைப் பெற்றதைத் தொடர்ந்து பிரித்தானியருக்குச் சொந்தமான தேயிலைத் தோட்டங்களை அவர்கள் விற்கத் தொடங்கினார்கள்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தொழிலதிபர் ஏ.வி. கிருஷ்ண பிள்ளை மலேசியாவில் இருந்து திரும்பிவந்து தேயிலைத் தோட்டத் தொழிலில் முதலீடு செய்ய முடிவு செய்தார். அதன் பலனாக ஆங்கிலேய நிறுவனமான சிம்ஸன் நிறுவனத்திடம் இருந்து 1000 ஏக்கர் தேயிலைத் தோட்டத்தையும், அதனுடன் இணைந்த தொழிற்சாலையையும் 1954 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 1 ஆம் திகதி கொள்வனவு செய்து வெற்றிகரமாக நடத்தி வந்தார்.

தாமரவல்லி தோட்டத்தின் மையப் பகுதியில் தங்களுக்கு மட்டுமல்ல, அப்பகுதியில் வாழும் இந்து மக்கள் பிரார்த்தனை செய்வதற்காகவும் ஒரு சைவக் கோயிலைக் கட்ட வேண்டும் என்று முடிவு செய்தார். அதன் பலனாக தொலஸ்பாகை ஸ்ரீ முருகன் கோயிலின் கட்டுமானம் 1959 ஆம் ஆண்டு தொடங்கியது. 1960 ஆம் ஆண்டு கோயில் கட்டுமான வேலைகள் முடிவடைந்ததால் இந்தியாவில் இருந்து விக்கிரகங்கள் கொண்டு வரப்பட்டு இங்கே பிரதிட்சை செய்யப்பட்டு பத்து நாட்கள் கும்ப அபிசேகம் இடம்பெற்றது. அதைத் தொடர்ந்து, நித்திய பூசையும், ஒவ்வொரு வருடமும் 10 நாட்கள் திருவிழாக்களும் தொடர்ந்தும் நடைபெறுகின்றன.



ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான பிரதமகுருக்கள் சிவஸ்ரீ சோமசுந்த குருக்கள் தலைமையில், யாழ்ப்பாணத்தில் இருந்து வரவழைக்கப் படும். குறைந்தது இரண்டு கூட்ட மேளதாளங்களுடன் வருடாந்த திருவிழாக்கள் நடைபெறுவதுண்டு. முதலாவது மற்றும் பத்தாவது திருவிழாக்களில் 108 சங்காபிஷேகமும், ஒன்பதாவது திருவிழாவில் திருக்கல்யாணமும் ஊஞ்சலில் நடைபெறும். பத்தாவது திருவிழாவின் போது சுவாமி மயில்வாகனத்தில் வெளிவீதி வருவார். இக்கோயிலின் அதிசயம் என்னவென்றால், தைமாதம் உதிக்கும் சூரியன் மூலஸ்தானத்திற்கு சில நிமிடங்கள் ஒளி கொடுத்துப் பக்தர்களைப் பரவசப்படுதத்துவதுதான்.

1967 ஆம் ஆண்டிலிருந்து அடுத்த தலைமுறையினரான அவரது மகன் வி.கே. ரவீந்திரசோதி, மருமகன்களாகிய எஸ். ஆர். நல்லையா, கு. சிவ கணநாதன் ஆகியோர் பொறுப்பேற்று நடத்தினர். ஏதிர்பாராத விதமாக 1974 ஆம் ஆண்டு தேயிலைத் தொழிற்சாலை உட்பட தனியார் தோட்டங்கள் அரச உ டைமையாக்கப்பட்டன. மிகுதியாக இருந்த அவர்க ளது தேயிலைத் தோட்டத்தை குடும்பத்தினர் ப ரா மரித்தனர். தொடர்ந்து 1 9 7 7 ஆம் ஆண்டு கலவரத்தால் பாதிப்பு ஏற்பட்ட தால், கிருஷ்ணபிள்ளை தொ ழிலில் இருந்து ஓய்வு பெற்று யாழ்ப்பாணத்தில் உள்ள 'ஊரெழு' என்ற தனது சொந்த ஊருக்குச் சென்று குடியேறினார்.

1983 ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தால் இப்பகுதி மீண்டும் பாதிக்கப்பட்டதால் குடும்பத்தினர் இடம்பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. எனவே கோயிலையும் பங்களாவையும் அதனுடன் சேர்ந்த காணியையும் குடும்பச் சொத்தாக வைத்துக் கொண்டு ஏனைய தோட்டத்தை விற்க வேண்டி வந்தது. இவற்றைப் பராமரிப்பது மற்றும் கோயில் காரியங்களைக் கொண்டு நடத்துவது போன்ற பொறுப்புக்கள் உறவினரான நவசோதியிடம் ஒப்படைக்கப்பட்டன.

2002 ஆம் ஆண்டு அமரர் ஏ.வி. கிருஷ்ணபிள்ளையின் மூன்றாம் தலைமுறையினரைச் சேர்ந்த, கொழும்பில் வசிக்கும் பேரப்பிள்ளைகள் பிரணவன் சிவகணநாதன் மற்றும் அருள் சிவகணநாதன் ஆகியோர் கோயிலைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர். அவர்கள் புனரமைப்புப் பணிகளைத் தொடங்கி 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் மீண்டும் கும்ப அபிசேகம் செய்வித்தனர்.

12 ஆண்டுகளுக்குப் பிறகு 2015 ஆம் ஆண்டு மீண்டும் கோயில் புதுப்பிக்கப்பட்டு புதிதாகக் கும்ப அபிசேகம் நடைபெற்றது. இன்று உலகம் முழுவதிலும் இருந்து பக்தர்கள் இந்தக் கோயிலின் பெருமை தெரிந்து அருள் பெறுவதற்காக வருகை தந்த வண்ணம் இருக்கின்றார்கள். கவியோகி சுத்தானந்த பாரதியார், குன்றக்குடி அடிகளார், பித்துக்குளி முருகதாஸ் சுவாமிகள், யோகி ராமையை சுவாமிகள், கோலாலம்பூர் சத்தியானந்த சுவாமிகள், நல்லூர் சுவாமிநாத தம்பிரான், மகாதேவா ஆச்சிரமம் ஸ்ரீ வடிவேல் சுவாமிகள், தபோவனம் சச்சிதானந்த சுவாமிகள், ஆத்மஜோதி முத்தையா , அருமைநாயகம், தங்கம்மா அப்பாக்குட்டி போன்ற ஆன்மீக பெரியோர் பலர் இக்கோயிலுக்கு வந்து வழிபட்டு, சொற்பொழிவு ஆற்றிச் சென்றிருக்கிறார்கள். சமீபத்தில் பெரிய சரவணபவ சுவாமிகள் இங்கிலாந்தில் இருந்து வந்து கோயிலைத் தரிசனம் செய்தார்.

கோயிலின் தினசரி நான்குகால பூசைகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. திங்கள் வெள்ளி இரண்டு நாட்களும் விசேட அபிஷேகம், பூசையோடு அன்னதானமும் வழங்கப்படுகின்றது. திருவிழாக் காலங்களிலும் அன்னதானம் வழங்கப்படுகின்றது. தீபாவளி, தைப்பொங்கல், தைப்பூசம், சிவராத்திரி, நவராத்திரி, திருவெண்பா, தமிழ் புத்தாண்டு, வைகாசி விசாகம், வெசாக் போன்ற தினங்களில் பூசைகள் பெரிய அளவில் நடைபெறுகின்றன. கோயில் ஸ்தாபகர் அமரர் கிருஷ்ணபிள்ளை அவர்கள் வாக்குறுதி அளித்தபடி, கோயில் தற்போது மூன்றாவது தலைமுறைக் குடும்பத்தால் நடத்தப்படுகின்றது.

குரு அரவிந்தன்...

# ஏழு நாடுகளை உள்ளடக்கிய SARTUC அமைப்பின் பிராந்திய மாநாட்டில் நடப்புவருட நிர்வாகிகள் தெரிவு

## உபதலைவராக ஷேன் பிரதீஸ் சுரேஷ்

தெற்காசிய பிராந்திய தொழிற்சங்க கவுன்சிலின் உபதலைவராக ஷேன் பிரதீஸ் சுரேஸ் தெரிவு.

ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், இந்தியா, நேபாளம், பங்களாதேஷ், மாலைதீவு, இலங்கை போன்ற நாடுகளின் இளைஞர் தொழிற்சங்க கூட்டமைப்பின் (SARTUC) பிராந்திய மாநாடு அண்மையில் இலங்கையில் நடைபெற்றது. இதன் போது சங்கத்தின் நடப்பு வருடத்திற்கான நிர்வாகிகள் வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்டனர்.



தெற்காசிய பிராந்திய தொழிற்சங்க கவுன்சிலின் தலைவராக பாகிஸ்தானைச் சேர்ந்த முஸ்தபீன் என்ற பெண்ணும், உபதலைவராக இலங்கையைச் சேர்ந்த ஷேன் பிரதீஸ் சுரேஸும் அதிகூடிய வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதன் போது உரையாற்றிய உபதலைவர் ஷேன் பிரதீஸ் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், இந்தியா, நேபாளம், பங்களாதேஷ், மாலைதீவு, இலங்கை போன்ற ஏழு நாடுகளின் இளைஞர் தொழிற்சங்க கூட்டமைப்பின் (SARTUC) மூலம் பல்வேறு பட்ட தொழிற்சங்கப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகக் கூறினார்.

அதேவேளை இலங்கையிலும் தொழிற்சங்கப் பிரச்சினைகளையும் சுமுகமாகத் தீர்ப்பதற்கான முன்னோடி நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இலங்கையில் முதன் முறையாக இவ்வாறான அமைப்பில் உபதலைவர் பதவி ஒன்று கிடைத்தமை வரலாற்றுப் பதிவு மாத்திரமன்றி, மலையகத்திற்குக் கிடைத்த பெரும் பேறாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. தெற்காசிய பிராந்திய தொழிற்சங்க கவுன்சில் (SARTUC) என்பது தெற்காசியாவின் தேசிய அளவிலான தொழிற்சங்கங்களின் பிராந்திய கூட்டமைப்பு ஆகும். இது 1988 இல் நிறுவப்பட்டது, தெற்காசிய பிராந்தியத்தின் சுதந்திர மற்றும் ஜனநாயக தொழிற்சங்கங்களில் ஒழுங்கமைக்கப்பட்ட தொழிலாளர்களை ஒன்றிணைக்கவும், உறுப்பினர் தொழிற்சங்கங்களுக்கு இடையே ஆலோசனை மற்றும் ஒத்துழைப்பை வழங்கவும் இந்த அமைப்பு பாடுபடும்.

தொழிலாளர்களின் நன்மைகளுக்காக பல்வேறு தரப்பினருடனும் தொடர்பு கொண்டு SARTUC பாடுபட்டு வருகிறது.



SARTUC இன் முதன்மையான நோக்கங்களில் ஒன்று, பிராந்திய மட்டத்தில் சுதந்திரமான மற்றும் ஜனநாயக தொழிற்சங்கங்களைக் கொண்ட ஒரு சக்திவாய்ந்த மற்றும் பயனுள்ள அமைப்பைப் பராமரித்து மேம்படுத்துவதாகும். பிராந்திய நாடுகளில் சுதந்திர தொழிற்சங்கங்களை நிறுவுதல், பராமரித்தல் மற்றும் மேம்பாடு ஆகியவற்றை மேம்படுத்தும் போது தொழிலாளர் உரிமைகள் மேலோங்கும். மேலும், SARTUC முழு வேலைவாய்ப்பை நிறுவுவதற்கும், வறுமையை ஒழிப்பதற்கும், இனம், பாலினம், தேசியம் அல்லது மதம் ஆகியவற்றின் அடிப்படையில் பாதகமான பாகுபாடுகளை நீக்குவதற்கும் பாடுபடுகிறது.

வேலை நிலைமைகளை மேம்படுத்துதல், அனைவருக்கும் சமூக பாதுகாப்பு அறிமுகம், பராமரிப்பு மற்றும் நீடிப்பு மற்றும் அப்பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் போன்ற செயற்பாடுகளையும் இந்த அமைப்பு மேற்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

தேசமான்ய எம்.ஏ.எம்.ஹசனார் (ஜே.பி) ...

# இலங்கை வரும் இந்திய அணியில் ரோஹித், கொஹ்லி, பூம்ரா இல்லை



இந்த மாத இறுதியில் இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இந்திய அணியில் முன்னணி வீரர்களான ரோஹித் ஷர்மா, விராட் கொஹ்லி மற்றும் ஜஸ்பிரிட் பூம்ரா ஆகியோர் இடம்பெறவில்லை என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

டி20 உலகக் கிண்ணத்தை வென்ற அணித் தலைவர் ரோஹித் ஷர்மா மற்றும் கொஹ்லி ஆகிய மூத்த வீரர்கள் செப்டெம்பரில் முழுமையான தொடரில் பங்கேற்கச் செய்யும் வகையிலேயே இலங்கை சுற்றுப்பயணத்தில் ஓய்வு அளிக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் செப்டெம்பரில் பங்களாதேஷ் அணி இரண்டு டெஸ்ட் மற்றும் மூன்று டி20 போட்டிகளில் ஆடுவதற்காக இந்தியா வரவுள்ளது.

இந்நிலையில் இந்திய அணி தலா மூன்று டி20 மற்றும் ஒருநாள் போட்டிகளில் ஆடுவதற்காக இலங்கை வரவுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் போட்டிகள் ஜூலை 27, 28 மற்றும் 30 ஆம் திகதிகளில் நடைபெறவிருப்பதோடு தொடர்ந்து இரு அணிகளும் மோதும் ஒருநாள் போட்டிகள் ஒகஸ்ட் 2, 4 மற்றும் 7 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இதில் அண்மைய டி20 உலகக் கிண்ணத்துடன் ரோஹித் மற்றும் கொஹ்லி இருவரும் டி20 சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றதோடு ரவீந்திர ஜடேஜாவும் டி20 சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றார்.

இந்நிலையில் இலங்கை சுற்றுப் பயணத்திற்கான இந்திய அணியை தேர்வு செய்வதற்கு தேர்வுக் குழுவினர் அடுத்த வாரம் கூடவிருப்பதாக தெரியருகிறது.

இதில் மூத்த வீரர்களுக்கு ஓய்வு அளிக்க திட்டமிட்டிருப்பதோடு இந்திய அணித் தலைமைப் பொறுப்பு ஹார்திக் பாண்டியா மற்றும் கே.எல். ராகுலிடம் வழங்கப்பட அதிக வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்திய அணியின் தலைமை பயிற்சியாளர் ராகுல் டிராவிட் டி20 உலகக் கிண்ணத்துடன் பதவி விலகிய நிலையில் புதிய பயிற்சியாளரை தேடும் பணியிலும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை ஈடுபட்டுள்ளது. இந்நிலையில் இந்திய அணி புதிய பயிற்சியாளர் ஒருவருடனேயே இலங்கை சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் கிரிக்கெட் ஆலோசனைக் குழு ஏற்கனவே தலைமைப் பயீற்சியாளர் அபேட்சகர்களுக்கான நேர்முகப்பரீட்சையை நடத்தி இருப்பதோடு முன்னாள் வீரர் கௌதம் காம்பீர் அந்தப் பதவியை ஏற்க வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது.

மறுபுறம் இலங்கை அணியின் இடைக்காலப் பயிற்சியாளராக சனத் ஜயசூரிய நியமிக்கப்பட்டிருக்கும் நிலையில் அவரின் பயிற்சியின் கீழ் இலங்கை அணி ஆடும் முதல் தொடராகவும் இந்தியாவுக்கு எதிரான போட்டிகள் அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாடுமீன்களின் கிரிக்கெட் சமரில் வின்சன்ட் மகளிர் அணி வெற்றி



**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

மட்டக்களப்பின் பாடுமீன்களின் சமர் என வர்ணிக்கப்படும் மகளிர் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் சிசிலியா பெண்கள் தேசிய பாடசாலை அணியை வீழ்த்தி வின்சன்ட் மகளிர் தேசிய பாடசாலை அணி சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது. மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் 11ஆவது வருடமாக நடைபெற்ற இச்சுற்றுப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடி சிசிலியா பெண்கள் தேசிய பாடசாலை 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றது. பதிலெடுத்தாடிய வின்சன்ட் மகளிர் பாடசாலை ஆறு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றியீட்டியது.

## ஐ.சி.சி. தலைமைப் பதவிக்கு போட்டியிட ஜெய் ஷா திட்டம்



இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை தலைவர் ஜெய் ஷா, சர்வதேச கிரிக்கெட் கௌன்சில் (ஐ.சி.சி.) தலைமைப் பதவிக்கு போட்டியிட திட்டமிட்டிருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

ஐ.சி.சி. ஆண்டு பொதுக் கூட்டம் இந்த மாத கடைசியில் கொழும்பில் நடைபெறவுள்ள நிலையில் தற்போதைய தலைவர் கிரேக் பார்க்ளேவின் இடத்திற்கு ஜெய் ஷா போட்டியிட வாய்ப்பு இருப்பதாக நம்பப்படுகிறது. அவ்வாறு அவர் போட்டியிட்டால் போட்டியின்றியே தேர்வு செய்யப்பட வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது.

ஐ.சி.சி. தலைமை பதவிக்கான தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதமே நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்பது குறித்து ஜெய் ஷா உத்தியோகபூர்வமாக எந்த அறிவிப்பையும் வெளியிடவில்லை. ஜெய் ஷா ஆசிய கிரிக்கெட் கௌன்சிலின் தலைவராகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச செய்திகள்



# காசாவில் இஸ்ரேலின் உக்கிர தாக்குதலால் போர் நிறுத்தப் பேச்சு சீர்குலையும் நெருக்கடி

### காசா நகரில் இருந்து தொடர்ந்தும் மக்கள் வெளியேற்றம்

காசா பகுதியில் இரண்டாவது நாளாக நேற்றும் இஸ்ரேல் படை நடவடிக்கையை தீவிரப்படுத்தி இருக்கும் நிலையில் மேலும் 18 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இஸ்ரேலின் இந்த நடவடிக்கை போர் நிறுத்த முயற்சியை சீர்குலைக்கும் என்று ஹமாஸ் எச்சரித்துள்ளது.

காசா போரை முடிவுக்குக் கொண்டுவரும் போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்றை எட்டுவதற்கான முயற்சியை அமெரிக்காவின் ஆதரவுடன் கட்டார் மற்றும் எகிப்து மத்தியஸ்தர்கள் வேகப்படுத்தியுள்ளனர்.

எனினும் போர் நிறுத்த முயற்சிகளுக்கு மத்தியில் இஸ்ரேலிய டாங்கிகள் காசா நகரின் ஷஜையா, சப்ரா மற்றும் டெல் அல் ஹவா போன்ற பகுதிகளில் ஆழ ஊடுருவி வருவதாக அங்குள்ள குடியிருப்பாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். இங்கு கடந்த திங்களன்று காசா போர் வெடித்தது தொடக்கம் ஊக்கிர தாக்குதல்கள் இடம்பெற்ற நாட்களில் ஒன்றாக இருந்தது.

இஸ்ரேலின் வெளியேற்ற உத்தரவை அடுத்து, வடக்கு காசாவின் காசா நகரில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். இவர்கள் மத்தியதரைக்கடலை நோக்கி மேற்காகவும் தெற்காகவும் வெளியேறி வருகின்றனர்.

இந்தத் தாக்குதல் 'பேச்சுவார்த்தை செயற்பாடுகளை மீண்டும் ஆரம்ப நிலைக்கே தள்ளிவிடும்' என்று ஹமாஸ் தலைவர் இஸ்மைல் ஹனியே நேற்று முன்தினம் குறிப்பிட்டிருந்தார்.

'காசாவில் தற்போது நடைபெறுவது பேரழிவு விளைவுகளை ஏற்படுத்தும் என்பதோடு பேச்சுவார்த்தை செயற்பாடுகளை மீண்டும் ஆரம்ப நிலைக்கே தள்ளிவிடும்' என்று ஹனியே வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பாதையில் ஏற்படும் சரிவுக்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் அவரது இராணுவமே பொறுப்பேற்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

டெல் அல் ஹவா பகுதியில் டாங்கி எதிர்ப்பு ரொக்கெட்டுகள் மற்றும் மோட்டார் குண்டுகளை பயன்படுத்தி இஸ்ரேலிய படைகளுக்கு எதிராக சண்டையிட்டு வருவதாக ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிஹாத் ஆயுதப் பிரிவுகள் குறிப்பிட்டுள்ளன.

மறுபுறம் ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிஹாத் போராளிகள் நிலைகொண்டிருப்பதாக உளவுத் தகவல்கள் கிடைத்திருக்கும் நிலையில் காசா நகரில் தொடர்ந்து துருப்புகள் படை நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக இஸ்ரேல் இராணுவம் வெளியிட்டிருக்கும் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



காசா நகரில் உள்ள வீடு ஒன்றின் மீது இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் ஆறு பேர் கொல்லப்பட்டிருப்பதோடு மத்திய காசாவின் அல் நுஸைரத் மற்றும் டெயிர் அல் பலாவில் உள்ள இரு வீடுகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில் மேலும் ஒன்பது பேர் கொல்லப்பட்டுள்ளனர். காசா நகரில் எகிப்து எல்லையை ஒட்டி இருக்கும் தெற்கு முனையில் உள்ள ரபா நகரின் டெல் அல் சுல்தான் பகுதியில் இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதல்களில் மூன்று பலஸ்தீனர்கள் பலியானதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

2.3 மில்லியன் மக்கள் தொகை கொண்ட காசாவில் பெரும்பான்மையானோர் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் இடம்பெயர்ந்து சென்றுள்ளனர். பலரும் சனநெரிசல் மிக்க கூடாரங்களில் தங்கி வருகின்றனர்.

இதில் காசாவில் போர் வெடித்த ஆரம்பத்திலேயே வடக்கு காசாவில் இருந்து மக்களை வெளியேற உத்தரவிட்ட இஸ்ரேல் அவர்கள் மீண்டும் வீடு திரும்புவதையும் மறுத்து வருகிறது. இந்நிலையிலேயே இஸ்ரேல் அங்கு மீண்டும் படை நடவடிக்கையை தீவிரப்படுத்தியுள்ளது.

'கடுமையான தாக்குதலுக்கு மத்தியில் இருளில் வெளியேறினோம்' என்று மூன்று குழந்தைகளின் தாயான செயிதா அப்தல் பக்கி தெரிவித்தார். 'இது நான் வெளியேறும் ஐந்தாவது முறையாகும்' என்றார். அவர் தற்போது டராஜ் பகுதியில் உறவினர்களுடன் அடைக்கலம் பெற்றுள்ளார்.

இஸ்ரேலின் புதிய வெளியேற்ற உத்தரவுக்கு ஐக்கிய நாடுகள் சபை எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. ஐ.நா. மனித உரிமை அலுவலகம் வெளியிட்டிருக்கும் அறிவிப்பில், 'பொதுமக்கள் மீதான புதிய உத்தரவு அதிர்ச்சி தருவதாக உள்ளது. அவர்ளின் பலர் இஸ்ரேல் இராணுவ நடவடிக்கை இடம்பெற்று வரும் மற்றும் பொதுமக்கள தொடர்ந்து கொல்லப்பட்டு மற்றும் காயமடைந்து வரும் பகுதிகளுக்கு பலவந்தமாக வெளியேற்றப்பட்டு வருகின்றனர்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

காசா பகுதியில் நுஸைரத், கான் யூனிஸ் மற்றும் ரபா பகுதிகளிலும் தொடர்ந்து மோதல் இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக ரபாவில் கடந்த மே ஆரம்பம் தொடக்கம் இஸ்ரேலியப் படை முன்னேறி வருவதோடு வான், தரை மற்றும் கடல் வழியாக உக்கிர தாக்குதல்களை நடத்தி வருகிறது.

காசா போர் தற்போது ஒன்பது மாதங்களைத் தாண்டி இருக்கும் நிலையில் இஸ்ரேலின் இடைவிடாத தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 38,000ஐ தாண்டியுள்ளது.

# ஜோ பைடன் தேர்தலில் போட்டியிடுவதில் உறுதி



அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜோ பைடன் மீண்டும் போட்டியிடுவதற்கான அவரது உடல் மற்றும் உள தகைமை தொடர்பில் சொந்தக் கட்சிக்குள் சந்தேகம் வலுத்துவரும் நிலையில் வெள்ளை மாளிகை அதனை நிராகரித்துள்ளது.

வழக்கத்திற்கு மாறாக ஜனாதிபதி போட்டியில் இருந்து 81 வயதான பைடனை விலகும்படி அழைப்பு விடுக்கப்பட்டு வரும் நிலையில், 'நான் எங்கேயும் போகப்போவதில்லை' என்று பைடன் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் பேசிய ஜனாதிபதியின் பேச்சாளர், அவர் வெளியே குறிப்பிடாத சுகவீனம் ஒன்றால் பாதிக்கப்பட்டிருப்பதாக கூறப்படும் செய்தியை நிராகரித்தார். பைடனை எதிர்த்துப் போட்டியிட திட்டமிட்டிருக்கும் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்புடன் கடந்த ஜூன் 27 ஆம் திகதி இடம்பெற்ற விவாதத்தில் பைடனின் செயல்பாடு மோசமாக இருந்ததாக பரவலாக விமர்சிக்கப்படும் நிலையிலேயே அவரது உள தகைமை குறித்து கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில் பைடன் மந்தமான பேச்சுக்கு வழிவகுக்கக் கூடிய பார்கின்சன் நோய்க்கு சிகிச்சை பெறுவதாக வெளியான ஊகத்தை வெள்ளை மாளிகை ஊடகச் செயலாளர் கரின் ஜீன் பியர் நிராகரித்துள்ளார்.

கடந்த ஆண்டு தொடக்கம் பார்கின்சன் மருத்துவ நிபுணர்கள் எட்டுத் தடவைகள் வெள்ளை மாளிகைக்கு வந்திருப்பதாக நியூயோர்க் டைம்ஸ் செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பைடனின் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த பிரதிநிதிகள் சபை உறுப்பினர்கள் சிலர் அவர் ஜனாதிபதி போட்டியில் இருந்து விலக அழைப்பு விடுத்த நிலையில், அவர் மீண்டும் போட்டியிடுவதற்கு ஆதரவாகவும் குரல்கள் எழுந்துள்ளன. சிலர் துணை ஜனாதிபதி கமாலா ஹாரிஸை தேர்தலில் நிறுவத்துவதற்கு ஆதரவை வெளியிட்டுள்ளனர்.

ஓஹியோவின் பிரதிநிதியான டிம் ரியான், அவருக்கு பதிலாக கமலா ஹாரிஸ் நிறுத்தப்பட வேண்டும் என்ற யோசனையை முன்வைத்துள்ளார்.

'நாம் முன்னோக்கி செல்லும் சிறந்த பாதை கமலா ஹாரிஸ் என்று நான் உறுதியாக நம்புகிறேன்' என்று அவர் நியூஸ் வீக் இதழில் எழுதியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் நவம்பர் 5 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

## வரலாற்றில் வெப்பமான ஜூன் மாதம் 2024இல் பதிவானது



கடந்த மாதம் வரலாற்றில் பதிவான மிக வெப்பமான ஜூன் மாதம் என்று தெரியவந்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தின் பருவநிலை மாற்றக் கண்காணிப்புச் சேவை இந்தத் தகவலை வெளியிட்டது.

கடந்த ஆண்டு ஜூன் மாதத்துக்குப் பின்னர் ஒவ்வொரு மாதமும் மிக வெப்பமானதாகப் பதிவாகியுள்ளது. 2024 வரலாற்றில் மிக வெப்பமான ஆண்டாக உருவெடுக்கலாம் என்று ஆய்வாளர்கள் கூறினர். அதற்கு 95 வீதம் சாத்தியம் இருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

தற்போதைக்கு 2023 மிக வெப்பமான ஆண்டாக உள்ளது. 1800களில் இருந்து பருவநிலை மாற்றம் கண்காணிக்கப்படுகிறது.

எல் நினோ எனும் பருவநிலை நிகழ்வும் பருவநிலை மாற்றமும் வெப்பநிலையை இதுவரை இல்லாத அளவுக்கு உயர்த்தியுள்ளன.

கடந்த மாதம் ஹஜ்ஜு யாத்திரையில் 1,000க்கும் அதிகமானோர் வெப்பத்தால் உயிரிழந்தனர். இந்தியா, கிரேக்கம் ஆகியவற்றிலும் தகிக்கும் வெப்பம் பதிவானது.

ஜூன் மாத நிலவரப்படி, கடந்த ஓராண்டின் சராசரி வெப்பநிலை தொழிற்புரட்சிக்கு முன் பதிவான வெப்பநிலையை விட 1.64 பாகை செல்சியஸ் அதிகமாக உள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூலை மாதம் 10ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு
இலங்கைத் தேயிலைச் சபை
தேயிலை ஆணையாளர் பிரிவு

# பச்சை தேயிலைக்கான நியாயமான விலையை செலுத்துதல்

## 2024 ஜூன் மாதம்

1993 ஆம் ஆண்டின் இல 03 கீழ் திருத்தப்பட்ட சட்டம் 1957 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க தேயிலை கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 8 (2) ன் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு ஏற்ப 2024 ஜூன் மாதத்தில் பதிவு செய்யப்பட்ட தேயிலை உற்பத்தியாளர்களால் கொள்முதல் செய்யப்பட்ட பச்சை தேயிலைக்கான நியாயமான விலை கீழ்க் கொடுக்கப்பட்டுள்ளவாறு அறிவிக்கப்படுகின்றது.

| தொடர் இல. | பதிவு இல. | தொழிற்சாலையின் பெயர் | சில்லறை விலை ஜூன் |
|---|---|---|---|
| | | **பதுளை மாவட்டம்** | |
| 1 | MF0522 | நிவ் ரொஸ்லன்ட் | 197.00 |
| 2 | MF1203 | ஊவா ஹல்பேவத்த | 194.42 |
| 3 | MF0988 | சரினா குரூப் | 185.95 |
| 4 | MF0156 | ஊவா ஹைலண்ட் | 178.26 |
| 5 | MF0041 | தேபெத்த | 176.27 |
| 6 | MF0382 | திக்வெல்ல | 175.66 |
| 7 | MF0573 | ருக்காதென்ன | 173.73 |
| 8 | MF0253 | வேவெஸ்ஸ | 173.22 |
| 9 | MF0667 | க்ளேன் எல்பின்ஸ் குரூப் | 172.88 |
| 10 | MF0214 | அம்பேதென்ன | 171.37 |
| 11 | MF0581 | அயிஸ்லெபி | 170.52 |
| 12 | MF0048 | நீட்வூட் | 167.89 |
| 13 | MF1000 | ரோபெரி | 164.57 |
| 14 | MF0821 | கிளேனோர் | 164.38 |
| 15 | MF0598 | ஷோலண்ட்ஸ் | 164.36 |
| 16 | MF0678 | தேலெபெத | 164.19 |
| 17 | MF1595 | இரநாயா | 163.73 |
| 18 | MF0215 | மீதும்பிட்டிய | 163.26 |
| 19 | MF0381 | சவுதம் | 162.32 |
| 20 | MF0302 | உளுகெதர | 161.66 |
| 21 | MF0974 | ஹப்புகஹவத்த | 161.41 |
| 22 | MF1508 | கவரகெலே | 161.21 |
| 23 | MF0777 | பிட்டரத்மலே | 161.15 |
| 24 | MF0720 | கோனமோட்டாவ | 160.75 |
| 25 | MF0677 | ஸ்பிரிங்வெலி குரூப் | 159.92 |
| 26 | MF1293 | லக்கி லேண்ட் | 159.76 |
| 27 | MF0269 | தம்பேதென்ன | 159.47 |
| 28 | MF0235 | நயாபெத்த | 159.30 |
| 29 | MF0983 | ஹப்புதளை | 158.81 |
| 30 | MF1534 | பஸ்ஸர தே சக்தி | 158.44 |
| 31 | MF0739 | கர்கிலிஸ் | 157.80 |
| 32 | MF0637 | உடுவர | 155.62 |
| 33 | MF0972 | கெப்பட்டிபொல தே சக்தி | 154.99 |
| 34 | MF0488 | வெருளபத்தன | 153.19 |
| 35 | MF0712 | ப்லேயார்ல்மன்ட் | 152.86 |
| 36 | MF0596 | அடாவத்த | 150.03 |
| 37 | MF1590 | கோல்ட் பட்ஸ் ஊவா டீ | 149.85 |
| 38 | MF0986 | மஹதொவ | 149.55 |
| 39 | MF0243 | கினலன் | 149.33 |
| 40 | MF0572 | ஹோப்டன் | 149.12 |
| 41 | MF0990 | ஊவா புலுசம் | 148.76 |
| 42 | MF0683 | கிரேக் | 148.66 |
| 43 | MF0388 | கம்பஹா | 148.22 |
| 44 | MF0234 | கோனகெலே | 147.86 |
| 45 | MF0371 | பட்டாவத்த | 145.58 |
| 46 | MF1524 | ஊவா எம்புரோய்ஸ்சா | 142.86 |
| 47 | MF0292 | பூணாகல | 142.28 |
| 48 | MF0668 | ஹிந்தகல | 141.83 |
| 49 | MF0494 | அம்பிட்டிகந்த | 138.27 |
| 50 | MF0329 | ஊவா மொரகல்ல | 137.19 |
| 51 | MF0217 | எல்டெப் | 114.82 |
| | | **கொழும்பு மாவட்டம்** | |
| 1 | MF1264 | அவிஸ்ஸாவெல்ல | 239.35 |
| | | **காலி மாவட்டம்** | |
| 1 | MF1548 | சுவிஸ்க்கா | 224.42 |
| 2 | MF1373 | மொரகெட்டிய | 222.13 |
| 3 | MF0184 | ரேகடஹேன | 221.92 |
| 4 | MF1367 | வத்துரவில | 221.32 |
| 5 | MF1346 | மாகெதர | 221.30 |
| 6 | MF1342 | எவர்கிரின் | 220.66 |
| 7 | MF1501 | சிஹாரா | 220.62 |
| 8 | MF1398 | அத்துகோரளை | 220.17 |
| 9 | MF1422 | இவிஹில்ஸ் | 220.04 |
| 10 | MF1475 | முஸ்வென்ன | 217.92 |
| 11 | MF1411 | சுசந்த | 217.75 |
| 12 | MF1511 | ஜெயசிங்ஹ | 217.15 |
| 13 | BF0120 | கிரேஸ்லேண்ட் | 216.92 |
| 14 | MF1338 | யக்கலமுல்ல | 216.65 |
| 15 | MF1439 | எக்வின் | 216.23 |
| 16 | MF1497 | கன்னேலிய | 215.45 |
| 17 | MF1314 | நெலுவ மெதகம | 214.14 |
| 18 | MF0815 | வலஹந்துவ தே சக்தி | 214.10 |
| 19 | MF0908 | கெப்டன் கார்டன் | 213.89 |
| 20 | MF1341 | துளிஎல்ல | 213.62 |
| 21 | MF0862 | வீவருகொட | 212.57 |
| 22 | MF1396 | ஹிமாரா | 212.31 |
| 23 | MF1319 | தல்கம்பளை | 211.75 |
| 24 | MF1389 | கராகொட | 211.40 |
| 25 | MF1540 | சேரன்யா | 211.30 |
| 26 | MF1251 | ஈரமுல்ல | 211.24 |
| 27 | MF1370 | ருஹுணு | 211.20 |
| 28 | MF0751 | திசர | 211.07 |
| 29 | MF1380 | கங்கசிரி | 210.64 |
| 30 | MF1353 | ஹில்கார்டன் | 209.97 |
| 31 | MF1371 | நயிந்தாவ | 209.61 |
| 32 | MF1434 | லியோட்டா | 209.34 |
| 33 | MF1332 | குருப்பனாவ | 208.91 |
| 34 | MF1330 | ஹல்விட்டிகல | 208.22 |
| 35 | MF1452 | மஹலியத்த | 208.20 |
| 36 | MF1333 | ஹிங்குல்கொட | 207.30 |
| 37 | MF1195 | கோல்டன் லீ∴ப் | 207.21 |
| 38 | MF1543 | சம்ரின் | 206.59 |
| 39 | BF0181 | இரத்ன | 205.54 |
| 40 | MF1400 | மிரிஸ்வத்த | 205.53 |
| 41 | BF0035 | ஹில்சைட் | 205.49 |
| 42 | MF0861 | வவுலுகல | 205.12 |
| 43 | MF1300 | இம்புல்கஹகொட | 205.04 |
| 44 | MF1427 | மெனிக்கந்த | 204.48 |
| 45 | MF1186 | தேவகிரி | 204.40 |
| 46 | MF1252 | விலேஹேன | 203.71 |
| 47 | MF1549 | இரன்மீர் | 203.69 |
| 48 | MF1376 | சௌபாக்யா | 203.20 |
| 49 | MF0321 | தலங்கஹ | 203.10 |
| 50 | MF1307 | குருந்துவத்த | 203.10 |
| 51 | MF1529 | கிரின்வின் | 202.68 |
| 52 | MF1318 | சினென்சிஸ் | 202.40 |
| 53 | MF1350 | பட்டுவங்கல | 201.94 |
| 54 | BF0187 | நிவ் சிங்ஹவெலி | 201.86 |
| 55 | MF1375 | தனவல | 201.65 |
| 56 | MF1139 | ஜெஸ்மின்வெலி | 201.42 |
| 57 | MF1196 | குருகொடல்ல | 201.25 |
| 58 | MF1253 | மஹேஸ்லன்ட் | 201.14 |
| 59 | MF1494 | பரகொடகந்த | 200.55 |
| 60 | MF1393 | நிவ் உடுமுல்லகொட | 200.21 |
| 61 | MF0954 | மொரகல்ல | 199.16 |
| 62 | MF1271 | முஸ்ஸெந்தபொத்த | 199.14 |
| 63 | BF0172 | விஜய | 198.50 |
| 64 | MF0304 | தல்கஸ்வெல்ல | 197.94 |
| 65 | MF1303 | நில்கந்துர | 197.71 |
| 66 | MF1306 | சினேத் | 197.70 |
| 67 | MF1361 | உடுஎல்ல | 195.34 |
| 68 | MF0756 | தொடங்கஹ | 195.28 |
| 69 | MF1006 | இத்தேகல | 195.27 |
| 70 | MF0101 | இத்தமல்தெனிய | 193.50 |
| 71 | MF0907 | கெட்டந்தொல | 193.32 |
| 72 | MF1334 | மாரகந்த | 191.68 |
| 73 | MF0259 | குடாமலான | 191.25 |
| 74 | MF1437 | தெல்லவ | 191.05 |
| 75 | MF1386 | மிஹிதும் வெலி | 189.91 |
| 76 | MF1420 | லக்கீ கொட்டாவ | 188.01 |
| 77 | MF1384 | நெகினிகல | 186.49 |
| 78 | BF0149 | காலு கங்கபட | 186.16 |
| 79 | MF1526 | ஹினிதும ஹில்ஸ் | 183.24 |
| 80 | MF1504 | எல்பிட்டிய தே சக்தி | 183.14 |
| 81 | MF1404 | தொட்டுபலவத்த | 182.73 |
| 82 | MF1359 | திலக்க | 182.22 |
| 83 | MF1401 | ஜனஹித்த | 182.15 |
| 84 | MF0655 | பத்தேகம | 180.24 |
| 85 | MF0142 | சிரிமேவன | 179.64 |
| 86 | MF1473 | கெல்லபத்த | 178.43 |
| 87 | BF0178 | நிவ் கொட்டாவ வெலி | 174.84 |
| 88 | MF1510 | எகில்மா | 173.76 |
| 89 | MF0080 | வெயிஹேன | 173.53 |
| 90 | MF0124 | இரசோட்டா | 171.28 |
| 91 | MF0079 | சணச | 171.26 |
| 92 | MF0446 | குருகந்த | 168.93 |
| 93 | MF0076 | தெவிதுரா | 166.39 |
| 94 | MF1421 | இலக்மாலி | 160.70 |
| 95 | MF1315 | றுவன்தென்ன | 150.32 |
| | | **ஹம்பாந்தோட்டை மாவட்டம்** | |
| 1 | MF156 | நிவ் ஹதுன்கல | 199.85 |
| | | **களுத்துறை மாவட்டம்** | |
| 1 | MF1435 | கலத்தர | 239.93 |
| 2 | MF1476 | நிவ் ஜே.எஸ்.பீ | 214.36 |
| 3 | MF1559 | வசந்த | 213.56 |
| 4 | MF1544 | ஹெடிகல்ல | 208.00 |
| 5 | MF1455 | துன்தொல | 202.42 |
| 6 | MF1565 | லிஹினியாவ | 202.15 |
| 7 | MF1280 | மிஹிரி கீ கெலே | 200.32 |
| 8 | MF1557 | எச்.பீ.பீ. | 196.80 |
| 9 | MF1530 | குமுது | 195.72 |
| 10 | MF1594 | இரத்மல்கொட | 194.06 |
| 11 | BF0183 | பதுரலிய | 188.70 |
| 12 | MF1372 | பலிந்தநுவர | 186.96 |
| 13 | MF1465 | புரோம்பில்ஸ் | 183.83 |
| 14 | MF1593 | J S P நெலும்தல்ல | 183.05 |
| 15 | MF1310 | கல்லுமலே | 180.83 |
| 16 | MF1481 | ரையிகம் கோரளே தே சக்தி | 178.83 |
| 17 | MF1503 | ஏலஹவன்ன | 178.26 |
| 18 | MF1472 | சுணில்ஸ் | 173.95 |
| 19 | MF0471 | கிக்கிரியானகந்த | 173.23 |
| 20 | MF0147 | ரையிகம் | 171.27 |
| 21 | MF1527 | கங்கானி | 169.83 |
| 22 | MF1563 | புலத்சிங்ஹல | 167.59 |
| 23 | MF1558 | அருண | 158.87 |
| 24 | MF1477 | மொரபிட்டிய | 152.42 |
| 25 | MF1492 | வின்வுட் | 149.63 |
| 26 | MF1479 | ஹேனதென்ன | 99.96 |
| | | **கண்டி மாவட்டம்** | |
| 1 | MF0886 | மெல்போர்ட் | 186.95 |
| 2 | MF0608 | கிரேக்ஹெட் | 183.84 |
| 3 | MF0164 | இம்புல்பிட்டிய | 178.17 |
| 4 | MF0697 | நயாபன | 176.82 |
| 5 | MF0007 | கலமுதுன | 173.82 |
| 6 | MF1585 | Menikdiwela | 172.82 |
| 7 | MF0013 | நிவ் பீகொக் குரூப் | 171.54 |
| 8 | MF1257 | அப்லன்ட்ஸ் | 169.52 |
| 9 | MF1521 | கிரிமெட்டிய | 165.52 |
| 10 | MF0416 | சிங்ஹபிட்டிய | 162.39 |
| 11 | MF0897 | டக்வாரி | 162.36 |
| 12 | MF0866 | வெஸ்ட் ஹோல் | 161.85 |
| 13 | MF0616 | டாட்ரி | 160.55 |
| 14 | BF0028 | ஒரேன்ஜ் பீல்ட் | 159.23 |
| 15 | MF1181 | பல்லேகம | 158.84 |
| 16 | MF0602 | டெல்டா | 157.18 |
| 17 | MF0402 | எல்பிட்டிய | 156.83 |
| 18 | BF0020 | வட்டதெனிய | 156.72 |
| 19 | BF0132 | ரொஸ்லின் ஹில் | 154.79 |
| 20 | MF1596 | லிவர்பூல் | 154.43 |
| 21 | MF1576 | முருத்தலாவ | 153.66 |
| 22 | MF0561 | குருந்துவத்த | 152.46 |
| 23 | MF1247 | ஸ்டோர்பீல்ட் | 151.98 |
| 24 | BF0043 | நிவ் வெலிகங்க | 151.33 |
| 25 | MF1461 | எம்பில்மீகம | 151.24 |
| 26 | MF0722 | ஹாத்தலே | 150.63 |
| 27 | MF0721 | கோமரே | 149.97 |
| 28 | BF0171 | நிவ் ∴பர்ல்லன்ட் | 149.78 |
| 29 | MF0150 | நிவ் ஒரியன் | 149.50 |
| 30 | BF0006 | டென்சைட் | 149.38 |
| 31 | BF0170 | நில் தலுகந்த | 149.26 |
| 32 | MF0864 | மஹவில | 149.00 |
| 33 | MF1426 | பராகல | 148.97 |
| 34 | MF0553 | மோஸ்விலா | 146.84 |
| 35 | BF0165 | தெஹிவத்த | 146.30 |
| 36 | MF0093 | என்கொம்புர | 146.01 |
| 37 | MF0967 | கெட்டகஹவல | 144.99 |
| 38 | MF1509 | தெஹிகம | 143.83 |
| 39 | MF0341 | இங்குருகல | 143.66 |
| 40 | MF0444 | சீவலி ஹில் | 143.30 |
| 41 | MF0132 | எரின் | 143.12 |
| 42 | MF0340 | ஹோப் | 141.78 |
| 43 | MF0148 | இரக்ஷாவ | 141.07 |
| 44 | MF1035 | ஷியோன் ஹில் | 140.27 |
| 45 | MF1513 | நிவ் பத்தேகம | 137.77 |
| 46 | MF0255 | நிவ் கெலீ குரூப் | 133.98 |
| 47 | MF0127 | கிங்ஸ்வெலி | 131.77 |
| 48 | MF0173 | பரனகல | 131.55 |
| 49 | MF0286 | கெல்லேபொக்க | 130.70 |
| 50 | MF1044 | கிரீன்வூட் | 129.07 |
| 51 | MF0024 | பொலகல | 128.92 |
| 52 | MF1523 | உதயகந்த | 128.64 |
| 53 | MF0077 | மல்கொல்ல | 128.34 |
| 54 | MF1235 | லென்டர்ன் ஹில | 128.32 |
| 55 | BF0123 | கல்பாய | 124.75 |
| 56 | MF0817 | யஹலதென்ன | 124.10 |
| 57 | MF0538 | லெவலன் | 122.06 |
| 58 | MF0634 | அலகல்ல | 122.06 |
| 59 | MF0171 | கெஸ்டல்மில்க் | 111.21 |
| 60 | MF1082 | ரின்க்வுட் | 108.29 |
| 61 | MF0604 | லூல்கந்துர குரூப் | 106.77 |
| 62 | BF0111 | பிலிமததலாவ | 105.14 |
| | | **கேகாலை மாவட்டம்** | |
| 1 | MF1316 | கொலொன்ன | 252.62 |
| 2 | MF0293 | களணி | 219.97 |
| 3 | MF0085 | நூரி | 192.90 |
| 4 | MF1266 | கெந்தலந்த | 191.12 |
| 5 | MF0236 | பம்பேகம | 184.54 |
| 6 | MF1579 | தெரணியகல தே சக்தி | 181.04 |
| 7 | MF1580 | கித்துல்கல | 178.77 |
| 8 | MF1297 | இலுக்தென்ன | 177.64 |
| 9 | MF0626 | ஹல்கொல்ல | 175.90 |
| 10 | MF1528 | மீசா | 175.82 |
| 11 | MF0574 | சப்புமல்கந்த | 172.43 |
| 12 | MF0353 | யட்டிதேரிய | 172.31 |
| 13 | MF0903 | மாலிம்பொட | 164.79 |
| 14 | MF1531 | இஹல பனாபிட்டிய | 161.50 |
| 15 | MF1546 | இரம்புக்கன்ன | 160.81 |
| 16 | MF1304 | கெஹெல்வல | 157.39 |
| 17 | MF0895 | தோத்தல் ஓய | 142.39 |
| 18 | MF0267 | நிவ் மவுன்ட் கா்மல் | 141.55 |
| 19 | MF1599 | கெனோரா | 137.76 |
| | | **மாத்தளை மாவட்டம்** | |
| 1 | MF1413 | மவுன்ட் எலீசா | 154.75 |
| 2 | MF0344 | மாத்தளை வெஸ்ட் | 137.04 |
| 3 | MF0370 | பண்டாரபொல | 118.97 |
| | | **மாத்தறை மாவட்டம்** | |
| 1 | BF0138 | போத்தொட்டுவ | 262.34 |
| 2 | BF0157 | ஆபர் வெலி | 262.21 |
| 3 | MF1507 | சன்ரைஸ் | 251.52 |
| 4 | MF1337 | லும்பிணி | 250.05 |
| 5 | MF1428 | ∴போசுன் | 241.45 |
| 6 | MF1406 | கிரீன் லங்கா | 240.41 |
| 7 | MF1274 | பெருபேவுல | 240.02 |
| 8 | MF1412 | லக்கீ டெய்ஸ் | 239.69 |
| 9 | MF1410 | குணவர்தன | 239.55 |
| 10 | MF0437 | கந்ததொல | 237.64 |
| 11 | MF1415 | சியேன்ட்டா | 235.62 |
| 12 | MF1468 | நில்ரிச் | 235.31 |
| 13 | MF1502 | நில்கிரி | 232.74 |
| 14 | MF1041 | கலபொட | 232.38 |
| 15 | MF1450 | ரொட்டம்பே | 231.87 |
| 16 | MF1402 | நிவ் சவுத் கோ-ப் | 231.30 |
| 17 | MF1320 | ரிச்லன்ட் | 230.38 |
| 18 | MF1498 | ஊருபொக்க | 229.58 |
| 19 | MF1533 | தல்பலாகந்த | 229.47 |
| 20 | MF0216 | இரசா | 229.24 |
| 21 | MF1518 | கோ-ப் கோலா | 228.89 |
| 22 | MF1278 | மத்தொட்ட | 228.63 |
| 23 | MF1275 | நிவ் தெனியாய | 228.29 |
| 24 | MF1331 | தம்பஹல | 228.27 |
| 25 | MF1433 | கொஸ்கஹதொல எல்ல | 227.97 |
| 26 | MF1462 | லயன்ஸ் | 226.78 |
| 27 | MF1407 | போகொட | 226.38 |
| 28 | MF1539 | S.L.S | 226.17 |
| 29 | MF0443 | கிங்ஸ்புரு | 225.32 |
| 30 | MF1198 | தெனியாய தே சக்தி | 225.11 |
| 31 | MF1578 | இலக்வின்கா | 225.05 |
| 32 | MF1514 | அத்துரலிய | 223.91 |
| 33 | MF1287 | நந்தன | 223.67 |
| 34 | MF0426 | சவுத் கோ-ப் | 222.96 |
| 35 | MF1547 | மாகந்துர | 222.84 |
| 36 | MF1474 | பிரோரிச் | 222.09 |
| 37 | BF0173 | டெவோனியா | 221.93 |
| 38 | MF1561 | தெதியகல | 221.80 |
| 39 | MF1329 | முலட்டியன | 220.13 |
| 40 | MF0440 | ஊறுவல | 219.19 |
| 41 | MF1577 | லேனம ஹில்ஸ் | 219.13 |
| 42 | MF1231 | எட்டம்பகஹவில | 218.18 |
| 43 | MF1464 | ∴பேரிமவுன்ட் | 216.78 |
| 44 | MF1270 | பியோல்ட்டா | 215.76 |
| 45 | MF1417 | கோப்வின் | 215.66 |
| 46 | MF1322 | பஸ்கொட | 215.59 |
| 47 | MF1506 | வலவ்வத்த | 214.54 |
| 48 | MF0802 | தெனியாய | 213.58 |
| 49 | MF1490 | இரன்சேகொட | 213.55 |
| 50 | MF1360 | டிசான்வெலி | 213.02 |
| 51 | MF1500 | கிரீன் ஹவுஸ் | 212.90 |
| 52 | BF0044 | மொரவக்கோரலே | 212.79 |
| 53 | MF1033 | நில்தியாவெலி | 212.33 |
| 54 | MF0414 | கட்டன்வில | 211.97 |
| 55 | MF1339 | யாழ்ட்டா | 211.59 |
| 56 | MF1423 | கோ-ப் லங்கா | 211.08 |
| 57 | MF1024 | எலன் வெலி | 210.30 |
| 58 | MF0977 | வில்லிகுரூப் | 209.58 |
| 59 | MF1414 | தெரங்கல ஹில்ஸ் | 209.52 |
| 60 | MF0454 | கலகாவ | 205.66 |
| 61 | MF1443 | சீ டீ ஹில்ஸ் | 205.55 |
| 62 | MF1542 | அந்தரதெனிய | 203.33 |
| 63 | MF0009 | எனசல்வத்த | 201.81 |
| 64 | MF1107 | திப்பொல | 201.27 |
| 65 | BF0161 | ∴பேரிலன்ட் | 198.22 |
| 66 | MF0975 | செமிடெல் | 196.65 |
| 67 | MF1004 | தித்தெனிபொத்த | 194.27 |
| 68 | BF0186 | நில்வலா | 194.13 |
| 69 | MF1545 | லியோன்ட்டா | 191.40 |
| 70 | BF0188 | களுபோவிட்டியான | 181.07 |
| 71 | MF1484 | குடாபான | 178.70 |
| 72 | MF1482 | குடாபான | 175.02 |
| 73 | MF1077 | மஹேந்திரா | 169.38 |
| | | **நுவரெலியா மாவட்டம்** | |
| 1 | MF0004 | மட்டகெலே | 210.46 |
| 2 | MF0779 | சமர்செட் | 210.25 |
| 3 | MF0711 | பெயார்வெல் | 207.20 |
| 4 | MF0489 | பெயார்வெல் | 206.10 |
| 5 | MF0772 | ஹோலிரூட் | 198.28 |
| 6 | MF0071 | வத்தேகொட | 197.82 |
| 7 | MF0568 | பம்பரகெலே குரூப் | 197.79 |
| 8 | MF0350 | சோகம | 195.02 |
| 9 | MF0569 | டெஸ்போர்ட் | 194.48 |
| 10 | MF0545 | அகராகந்த | 192.17 |
| 11 | MF0294 | ரொப்கில் குரூப் | 191.47 |
| 12 | MF0642 | புரோட்லேண்ட்ஸ் | 187.64 |
| 13 | MF0981 | என்பீல்ட் | 184.62 |
| 14 | MF0188 | சென்.கொம்ப்ஸ் | 184.50 |
| 15 | MF0767 | டிலரி | 184.09 |
| 16 | MF0348 | நோர்வூட் | 179.31 |
| 17 | MF0769 | எல்டன் | 179.11 |
| 18 | MF0552 | வனராஜா | 177.06 |
| 19 | MF0457 | பெட்ரோ | 177.00 |
| 20 | MF0066 | கௌரவில | 176.19 |
| 21 | MF0770 | தங்காலை | 174.02 |
| 22 | MF0204 | லேதண்டி | 173.60 |
| 23 | MF0159 | ஸ்டோக்ஹோம் | 173.24 |
| 24 | MF0492 | க்வின்ஸ்பரி | 172.87 |
| 25 | MF0485 | போகவான | 172.80 |
| 26 | MF0829 | எல்டன் ஹோல் | 172.03 |
| 27 | MF0220 | டன்சினன் | 171.37 |
| 28 | MF0597 | கெட்டபுலா | 171.24 |
| 29 | MF0368 | பெல்மோரல் | 170.82 |
| 30 | MF0541 | போகாஹவத்த | 170.58 |
| 31 | MF0984 | கைப்புகல | 170.51 |
| 32 | MF0835 | ஹரங்கல்ல | 170.27 |
| 33 | MF0692 | வோல்ட்ரிம் | 170.07 |
| 34 | MF0548 | கெனில்வர்த் | 169.48 |
| 35 | MF0345 | நோர்த் மெதகும்புர | 168.74 |
| 36 | MF0396 | இன்ஜெஸ்ட்ரி | 168.45 |
| 37 | MF0595 | டிக்கோயா | 167.20 |
| 38 | MF0383 | டோர்ட்டன் | 167.05 |
| 39 | MF0584 | ∴பெயார்லவன் | 167.04 |
| 40 | MF0495 | ∴புரொடைய்ஸ் | 166.73 |
| 41 | MF0557 | மாவுஸ்ஸாகல்ல | 166.64 |
| 42 | MF0069 | கொட்டியாகல்ல | 166.39 |
| 43 | MF0618 | யுலிபீல்ட் | 166.38 |
| 44 | MF0221 | தலவாகெலே | 166.22 |
| 45 | MF0505 | டீசைட் | 165.66 |
| 46 | MF0012 | தியகம கிழக்கு | 165.40 |
| 47 | MF0674 | மே∴பில்ட் | 165.38 |
| 48 | MF0351 | வெல்லஓய | 165.36 |
| 49 | MF0226 | கிலாஸ்சோ | 165.32 |
| 50 | MF0703 | செம்பியன் | 164.92 |
| 51 | MF0399 | மொரே | 164.51 |
| 52 | MF0926 | கிரேக் லீ | 164.49 |
| 53 | MF0206 | வெல்லஓய | 164.40 |
| 54 | MF0645 | எல்பியன் | 164.28 |
| 55 | MF0504 | சீன் | 164.09 |
| 56 | MF0005 | ஸ்டோனி க்ளிப் குரூப் | 163.66 |
| 57 | MF0011 | தியகம வெஸ்ட் | 163.62 |
| 58 | MF0308 | ∴பெட்ரெசோ | 163.61 |
| 59 | MF0790 | ஸ்ட்ராத்டன் | 163.47 |
| 60 | MF0391 | கோனபிட்டிய குரூப் | 162.87 |
| 61 | MF0374 | பிரேன்ஸ்விக் | 162.64 |
| 62 | MF1301 | நுவரெலியா | 162.47 |
| 63 | MF0486 | கிர்கஸ்வோல்ட் | 162.23 |
| 64 | MF0366 | அக்ரா ஊவா | 162.18 |
| 65 | MF0468 | கிவ் | 161.23 |
| 66 | MF0276 | ஹேன்போர்ட் | 161.10 |
| 67 | MF0890 | சென்.தெரேசியா | 160.83 |
| 68 | MF0343 | லபுகெலே | 160.32 |
| 69 | MF1003 | ஷெனன் | 159.98 |
| 70 | MF0689 | லக்ஷபான | 158.74 |
| 71 | MF0420 | கூல்போர்ன் | 158.56 |
| 72 | MF0034 | ஸ்ட்ரேதஸ்பீ | 157.81 |
| 73 | MF0705 | ஹவுத்தலே வெலி | 157.53 |
| 74 | MF0043 | சென் க்ளேயார் | 157.11 |
| 75 | MF0502 | கிலேன்டிட் எஸ்டேட் | 156.78 |
| 76 | MF0008 | கொரக்ஓய | 156.27 |
| 77 | MF0062 | கௌனிய எஸ்டேட் | 155.91 |
| 78 | MF0673 | முல்லோயா | 155.51 |
| 79 | MF0646 | டொரிங்ட்டன் | 155.24 |
| 80 | MF0387 | புரோட்டோ∴ப் | 154.71 |
| 81 | MF0663 | பொகவன்தலாவ | 154.70 |
| 82 | MF0902 | வெதமுல்ல | 154.44 |
| 83 | MF0840 | வென்ச்சர் | 153.79 |
| 84 | MF0300 | அபொட்ச்லீ | 153.48 |
| 85 | MF0729 | இராகல குரூப் | 152.13 |
| 86 | MF0067 | லிடஸ்டெல் | 151.81 |
| 87 | MF0384 | டன்கல்ட் | 151.46 |
| 88 | MF0467 | கிரிஸ்லர் பார்ம் | 150.41 |
| 89 | MF0141 | அல்மா | 148.94 |
| 90 | MF0392 | ஹைய் பொரஸ்ட் | 148.69 |
| 91 | MF1512 | ரொசெல்ல | 148.42 |
| 92 | MF0349 | ரோத்ஸ்சயில்ட் | 148.29 |
| 93 | MF1273 | நோர்ட்டன் | 147.40 |
| 94 | MF0459 | கோர்ட் லொஜ் | 146.53 |
| 95 | MF1254 | கொன்கோர்டியா | 145.86 |
| 96 | MF0503 | ஊட்டன் | 145.66 |
| 97 | MF0928 | டெல்மர் | 143.97 |
| 98 | MF0251 | க்லேன்லொச் | 139.38 |
| 99 | MF0322 | மவுன்ட் வெர்னோன் | 137.28 |
| 100 | MF0833 | நோர்த் பூண்டுலோயா | 136.80 |
| 101 | MF0656 | லோவர் டொன்சயிட் | 131.01 |
| 102 | MF0078 | புலு பீல்ட் | 124.28 |
| 103 | MF1039 | புருக்சைட் | 123.87 |
| 104 | MF0670 | கார்ட்மோர் | 121.36 |
| 105 | MF0878 | ஹேவன்வெவ | 111.99 |
| 106 | MF0970 | கும்பல் ஒழுவ | 104.83 |
| | | **இரத்தினபுரி மாவட்டம்** | |
| 1 | MF1387 | A.C.U. | 228.04 |
| 2 | MF1392 | ஹிதெல்லன | 223.26 |
| 3 | MF1416 | கோப்பகந்த | 222.91 |
| 4 | MF1441 | ∴பெல்கொன் | 217.61 |
| 5 | MF0272 | பனில்கந்த | 217.52 |
| 6 | MF1172 | நிவ் வித்தானகந்த | 213.09 |
| 7 | MF1463 | பீக்வீவ் | 208.75 |
| 8 | MF1284 | நிவ் பனாவென்ன | 207.73 |
| 9 | MF0946 | இரஜ்ஜுருவத்த | 205.05 |
| 10 | BF0143 | டெம்பல் வீவ் | 203.54 |
| 11 | MF0210 | ஹவுட்டன் | 203.30 |
| 12 | MF1354 | பீக் பெரடயிஸ் | 203.06 |
| 13 | MF0296 | தொலொஸ்வெல்ல | 202.67 |
| 14 | MF1487 | எடம்ஸ் வீவ் | 201.24 |
| 15 | MF0905 | மில்லவிட்டிய | 200.01 |
| 16 | MF1440 | நிவித்திகல | 199.85 |
| 17 | MF1571 | டெம்பல் வீவ் | 199.00 |
| 18 | MF1436 | நிவ் வேவெல்கந்துர | 198.80 |
| 19 | MF1470 | கரவிட்ட | 198.67 |
| 20 | MF0347 | மட்டுவாகல | 197.88 |
| 21 | MF1483 | கெலெக்சி | 197.63 |
| 22 | MF1496 | கோப் டீ | 196.24 |
| 23 | MF1572 | கரதன | 195.04 |
| 24 | MF1552 | சிசிரம்ப | 194.83 |
| 25 | MF1368 | நிவ் டெம்பல் வீவ் | 191.83 |
| 26 | MF1343 | கோண்கஹவத்தை | 191.36 |
| 27 | MF1551 | கலஹிட்டிய | 191.35 |
| 28 | MF0912 | வர்தன | 191.28 |
| 29 | MF1365 | நவகமுவஹேன | 187.08 |
| 30 | MF1591 | எத்ஓய வத்த | 187.08 |
| 31 | MF0181 | சிசிலியன் | 186.37 |
| 32 | MF1363 | நாவலகந்த | 185.97 |
| 33 | MF0107 | நிலாகம | 184.08 |
| 34 | MF0614 | மாதம்பே | 183.92 |
| 35 | MF1217 | கல்படிதென்ன | 183.46 |
| 36 | MF1281 | சென்.ஜோக்ஹிம் | 183.31 |
| 37 | MF1519 | பரகடுவ | 183.17 |
| 38 | MF0295 | குட்டாபிட்டிய | 182.20 |
| 39 | MF0168 | எந்தொன | 182.19 |
| 40 | MF1537 | அயகம | 182.16 |
| 41 | MF0906 | பார்ம் கார்டன் | 182.09 |
| 42 | BF0155 | கங்கலகமுவ | 180.57 |
| 43 | MF0780 | ஹெளப்பே | 180.40 |
| 44 | MF1459 | நிவ் லக்சகந்த | 180.12 |
| 45 | MF1478 | செனோரா | 178.63 |
| 46 | MF1418 | தொரலவிட்டியஹேன | 178.59 |
| 47 | MF0183 | நிவ் கந்தகஸ்தேன் | 176.52 |
| 48 | MF1317 | தேஷிக்கா | 176.45 |
| 49 | MF1456 | டீர்வுட் | 175.92 |
| 50 | MF0659 | ரைய் | 175.74 |
| 51 | MF1292 | பயின் ஹில் | 175.51 |
| 52 | MF1467 | தண்டுவன்கல வத்த | 175.06 |
| 53 | MF1480 | நிவ் ஹோப்வெல் | 174.16 |
| 54 | MF0625 | நிவ் இராசகல்ல | 172.61 |
| 55 | MF0624 | விக்கிலிய | 171.42 |
| 56 | MF1453 | கலவான | 170.67 |
| 57 | MF0393 | ஹேயிஸ் | 170.46 |
| 58 | MF0104 | வெல்அந்துர | 170.01 |
| 59 | MF1491 | நிவ் தொரலவிட்டியஹேன | 169.93 |
| 60 | MF0103 | ஓபாத்த | 169.77 |
| 61 | MF0594 | பொஸ்கொம்பி | 169.73 |
| 62 | MF0263 | வேவத்த | 168.76 |
| 63 | MF1075 | கடிகல்ஹேன | 165.90 |
| 64 | MF0911 | தும்பர | 165.58 |
| 65 | MF1442 | வெத்தகல | 165.12 |
| 66 | MF0490 | ஹெதர்லீ | 163.81 |
| 67 | MF1458 | செரோன் | 163.57 |
| 68 | MF0619 | கலபொட | 162.80 |
| 69 | MF0083 | ரில்ஹேன | 161.82 |
| 70 | MF1308 | நிவ் உடகட | 161.30 |
| 71 | MF1466 | டீ லங்கா | 160.99 |
| 72 | MF0546 | ஸ்பிரிங்வூட் | 160.09 |
| 73 | MF0369 | மாரதென்ன | 160.00 |
| 74 | MF0367 | சிசில்டன் | 159.82 |
| 75 | MF0623 | மெத்தகந்த | 159.77 |
| 76 | MF0200 | பெட்டியாகல்ல | 158.55 |
| 77 | MF0909 | எல்லர்ட்டன் | 155.15 |
| 78 | MF0481 | எக்பர்த் | 154.87 |
| 79 | MF0801 | ஹப்புகஸ்தென்ன | 154.57 |
| 80 | MF0258 | பலாங்கொட டீ சக்தி | 154.55 |
| 81 | MF1601 | புலு ஹில்ஸ் | 153.16 |
| 82 | MF1397 | ∴பர்ன்டேல் | 152.93 |
| 83 | MF0262 | ஹப்பர் பலாங்கொட | 148.58 |
| 84 | MF1495 | நில்வின் வீவ் | 146.55 |
| 85 | BF0150 | ஷியர்வூட் | 121.50 |
| 86 | MF1554 | தண்டுவன்கல CTC | 109.32 |

**பச்சை தேயிலை இலை வழங்குனர்கள் யாரேனும் தனது பச்சை தேயிலை இலை வழங்கியதற்கு உரிய பணம் கிடைக்கவில்லை எனில் தயவு செய்து உதவி தேயிலை ஆணையரிடம் அல்லது முடிந்தவரை என்னிடம் முறையீடு செய்யவும்.**

**கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்கள்**
உதவி தேயிலை ஆணையாளர், இலங்கை தேயிலை சபை,
பிராந்திய அலுவலகம், இல-140, அம்பகமுவ வீதி, கம்பளை.
தொலைபேசி / தொலைநகல் - 081-2352279

**களுத்துறை மற்றும் காலி மாவட்டம் (எல்பிட்டிய பிரதேசத்திற்கான செயலாளர் பிரிவு)**
உதவி தேயிலை ஆணையாளர்,
இலங்கை தேயிலை சபை,
பிராந்திய அலுவலகம், வதுரான வீதி, பதுரலிய.
தொலைபேசி தொலைநகல் - 034-2247444

**மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்கள்**
உதவி தேயிலை ஆணையாளர்,
இலங்கை தேயிலை சபை,
பிராந்திய அலுவலகம், இல-23, அளுத் மாவத்தை,
உயன்வத்த, மாத்தறை.
தொலைபேசி / தொலைநகல் - 041-2222636

**காலி மாவட்டம் (எல்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவு தவிர)**
உதவி தேயிலை ஆணையாளர், இலங்கை தேயிலை சபை,
பிராந்திய அலுவலகம், வலஹன்துவ வத்த,
வலஹன்துவ, காலி.
தொலைபேசி / தொலைநகல் - 091-2232052

**பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்கள்**
உதவி தேயிலை ஆணையாளர்,
இலங்கை தேயிலை சபை,
பிராந்திய அலுவலகம், விசாகா மாவத்தை,
புதிய பதுளை வீதி, பண்டாரவளை.
தொலைபேசி / தொலைநகல் - 057-2222812

**நுவரெலியா மாவட்டம்**
உதவி தேயிலை ஆணையாளர்,
இலங்கை தேயிலை சபை,
பிராந்திய அலுவலகம், இல-10,
நானுஓயா வீதி, கெலேகால, நுவரெலியா.
தொலைபேசி - 052-2234695
தொலைநகல் - 052-2234686

**இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்கள்**
உதவி தேயிலை ஆணையாளர், இலங்கை தேயிலை சபை,
பிராந்திய அலுவலகம், இல-61/1, புதிய நகரம், இரத்தினபுரி.
தொலைபேசி / தொலைநகல் - 045-2222136

## விசேட அறிவித்தல்

இலங்கை தேயிலை சபையின் நிதி மானியத்தின் கீழ் அனைத்து தேயிலை காணி உரிமையாளர்களுக்கும் மானிய விலையில் தேயிலை உரங்களை வழங்கும் திட்டம் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

